COMPLIMENTARY

# உதயன்

www.onlineuthayan.com

30 பக்கங்கள் சுடர் 28 கதிர் 025 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 06 வெள்ளிக்கிழமை (21/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00



# சீரற்ற காலநிலை தொடர்கிறது 28 பேர் இதுவரை உயிரிழப்பு

## 2 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.21

நாட்டில் தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பவற்றில் சிக்கி 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 25இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர். 69 ஆயிரத்து 133 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 67 ஆயிரத்து 525 பேர் நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களில் 5 ஆயிரத்து 281 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயி

பார்க்க பக்கம் 4

## இரண்டு கிராமங்களைக் காணோம்

கொழும்பு,டிசெ.21

மண்சரிவு மற்றும் மழைநீரால் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இரண்டு கிராமங்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன.

குருநாகல் வல்பொல கந்த எனும் கிராமம் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்சரிவால் முற்றாக மூடப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் இருந்த 18 வீடுகள் மண்ணுக்குள் முற்றாகப் புதையுண்டுள்ளன. கிராமத்தவர்கள், எந்தவித ஆபத்துகளுமின்றி வெளியேறியுள்ளனர்.

இந்தக் கிராமத்தின் அருகில்

பார்க்க பக்கம் 4



முல்லைத்தீவில் தொடரும் அடை மழையால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (500)

## விவசாயியின் விநோத செயல்

தர்மபுரி, டிசெ.21

உலகம் அழியப்போகிறது என்ற செய்தியை நம்பிய விவசாயி ஒருவர் வங்கியில் சேமிப்பிலிருந்த பணம் முழுவதையும் வீதியால் சென்றவர்களுக்கு வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

தர்மபுரி மாவட்டம் மொரப்பூரைச் சேர்ந்த குழந்தைத்தம்பி (வயது -55) என்ற விவசாயியே தனது பணம் முழுவதையும் கொடுத்தவராவார்.

இவர் தனது வங்கி வைப்பிலிருந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேலான பணத்தை வழங்கினார் எனவும் சம்பவத்தைக் கேள்விப்பட்ட பலர் குழந்தைத்தம்பியின் வீட்டு முகவரியைத் தேடிப் படையெடுத்தனர் எனவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'உலகம் அழிவது நிச்சயம் அதற்குள் இப் பணத்தை செலவிடுங்கள்,' என்று கூறி கட்டுக் கட்டாக நாணயத்தாள்களை வாரிவழங்கினாராம் சீமான். (ஐ-16)

# புலிகள் நான்கு பேர் தமிழகத்தில் கைது

## வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தனர்

சென்னை, டிசெம்பர் 21

பல்லாவரத்தில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை தாம் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர் என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களுக்கு தமிழகத்தில் நாசவேலையில் ஈடுபடும் நோக்கம் இல்லாதபோதும் இலங்கையில் உள்ள நண்பர்களுக்காக குண்டுகளைத் தயாரிக்கும் பயிற்சியை வழங்கினர் என்று தமிழகப் பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மதுரவாயல், தாம்பரம், பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கியூ பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லாவரத்துக்கு அருகில் உள்ள பொழிச்சலூர் அண்ணா நகரில் ஈழத்தமிழர்கள் ஆறுபேர் தங்கியிருந்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

சங்கேத மொழி பயன்படுத்தும் மடிக்கணினி, கைபேசிகள் மற்றும் வெடிகுண்டு தயாரிப்புக்கான

பார்க்க பக்கம் 4

## பிரபல பாடகி நித்தியஸ்ரீயின் கணவர் சாவு; ஆற்றில் குதித்து

சென்னை,டிசெ.21

பிரபல தென்னிந்தியப் பாடகி நித்தியஸ்ரீயின் கணவர் மகாதேவன் நேற்று திடீரென ஆற்றில் குதித்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இதை அறிந்த நித்தியஸ்ரீயும் விஷம் குடித்துத் தற்கொலைக்கு முயற்சித்தார் என வெளியான செய்திகளை குடும்பத்தினர் மறுத்துள்ளனர்.

நித்தியஸ்ரீயின் கணவர் மகாதேவன் நேற்று சென்னை அடையாறில் உள்ள ஆற்றில் பாலத்தின் மீதிருந்து குதித்தார். வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது பாலத்தில் திடீரென வாகனத்தை நிறுத்துமாறு சாரதிக்கு உத்தரவிட்ட மகாதேவன் இறங்கிச் சென்று பாலத்தின் மீது இருந்து ஆற்றில் குதித்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

## பதுங்கு குழிக்குள் புலிச்சீருடையுடன் எலும்புக்கூடு

புதுக்குடியிருப்பு, டிசெ. 21

பதுங்கு குழி ஒன்றில் இருந்து விடுதலைப் புலிகளின் சீருடையுடன் எலும்புக்கூடு ஒன்று ஆனந்தபுரம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

ஆனந்தபுரம் 5ஆம் வட்டாரத்திலுள்ள பழனியப்பன் தங்கம்மா என்பவரின் வீட்டிலுள்ள பதுங்கு குழியிலிருந்தே இந்த எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர் இறுதிக் கட்ட போர் நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து செல்லும்போது வீட்டு உபகரணங்களை பதுங்கு குழியினுள் இட்டு மூடியுள்ளார். தற்போது அதனை எடுப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை பதுங்கு குழியை தோண்டியபோது அதிலிருந்து ஆணின் மண்டையோடு ஒன்று வெளிப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேலும் சில அடி தூரம் தோண்டிய போது வரிப்புலி உடையுடன் கூடிய எலும்புக்கூடு ஒன்று கிடைத்தது.

பார்க்க பக்கம் 4

# எம்.பி. வீடு மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, டிசெ.21

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து, நேற்று அதிகாலை அவர் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு விஜேதாஸ ராஜபக்ஷ பல எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இந்த நிலையில் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமையானது நாட்டில் பலத்த சர்ச்சையையும், சட்டத்தரணிகளிடையே பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அறிந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விஜேதாஸ ராஜபக்ஷவின் வீட்டுக்கு உடனடியாகச் சென்று, சம்பவம் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

நாவல, விஜேபா மாவத்தையிலுள்ள இரண்டு மாடி வீட்டின் சுவரில் இரண்டு தோட்டாக்கள் துளைத்த அடையாளங்கள் காணப்படுகின்றன. அத்துடன், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதற்கு ஆதாரமாக வீட்டு வளாகத்திலிருந்து மூன்று தோட்டாக்களும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நள்ளிரவு 12.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி திடீர் வருகை**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அறிந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சம்பவம் நடந்த வீட்டுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் உடன் இருந்தனர்.

பார்க்க பக்கம் 4

## கான்ஸ்டபிள் உடல் நசுங்கி சாவு

கொழும்பு, டிசெ. 21

காப்பெற் வீதி திடீரென உடைந்ததால் அந்த வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி குடைசாய்ந்து அருகிலிருந்த பொலிஸ் காவலரண் மீது விழுந்தது. இதில் காவலரணுக்குள் இருந்த பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் உடல் நசிந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை பங்கதெனிய தெதுரு ஓயா பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தை அடுத்து

பார்க்க பக்கம் 4

## இந்திய – இலங்கை படைகள் இமாச்சலில் இரகசியப் பயிற்சி

### தமிழ்நாட்டை ஏமாற்றி நடக்கிறது

கொழும்பு, டிசெ.21

இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைகளுடன் இணைந்து இந்திய இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவினர், இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த விடயம் இரகசியமாகப் பேணப்பட்டு வந்தது. எனினும் இந்திய ஊடகம் ஒன்று இதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தின் நஹானில் உள்ள இந்திய சிறப்புப்படை பயிற்சி நிலையத்திலேயே இந்தப் போர்ப் பயிற்சிகள் இடம் பெறுகின்றன.

உணர்வுபூர்வமான விடயம் என்பதால், இதுபற்றிய தகவல்களை இரகசியமாகப்

பார்க்க பக்கம் 4

# காதலியைக் கரம்பிடிப்பதற்கே மனைவி, பிள்ளைகள் கொலை

### இரத்மலானை முக்கொலை சந்தேகநபர் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.21

இரத்மலானை - கந்த முல்ல வீதியில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடொன்றில் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர், தனது காதலியான மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்யும் நோக்கத்திலேயே இந்தக் கொடூரக் கொலையை செய்துள்ளார் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தகவல் தொழில்நுட்பப் பாடநெறியொன்றைக் கற்கிறார், நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் மீது கடந்த ஒரு மாத காலமாகக் காதல் வயப்பட்டிருந்தார். அவரைத் திருமணம் செய்யும் நோக்கில் இக்கொலையைச் செய்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலையில் ஒருபோதும் தீபம் ஏற்ற முடியாதாம்

கொழும்பு, டிசெ.21

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் தமது உறவுகளுக்காகவும், உடன் பிறப்புகளுக்காகவும் விளக்கேற்றி நினைவு கூருவதற்கு எந்த விதமான தடையும் இல்லை. ஆனால் அதனை அவர்கள் தமது வீடுகளில் செய்ய வேண்டும் என்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்யும் வரை ஏனைய மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்துள்ளனர். இதனால் கல்வி நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன? என்று அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலை வளாகத்திலும், மாணவர் விடுதிகளிலும் விளக்கேற்றி உள்ளனர். புலிகள் இயக்கப் பதாகைகளும் காணப்பட்டன.

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். போரின் போது கொல்லப்பட்ட புலிகளுக்காகவே இவர்கள் விளக்கேற்றி உள்ளனர். இதனை அனுமதிக்க முடியாது.

சட்டம், ஒழுங்கு எல்லோருக்கும் பொதுவானது. மாணவர்கள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் மீறிய மாணவர்கள் மீதே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்றார். (த-2)



வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதயன் - சுடர்ஒளி நிர்வாக இயக்குநர் திருமதி ய.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்கினார்.
நிகழ்வில் 25 வருடங்கள் வருமானப் பரிசோதகராகச் சிறப்பாக பணியாற்றிய சி.சிறிகாந்தவுக்கு 'சிறந்த உள்ளூராட்சி சேவையாளர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (50)

# மக்களின் அடிப்படை உரிமைகளை குற்றச்செயலாக முத்திரை குத்தாதீர்

## பல்கலை மாணவரை விடுதலை செய்ய: மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.21

மக்களின் அடிப்படை உரிமைகளை குற்றச்செயல்களாக இலங்கை அரசு அடையாளப்படுத்தக்கூடாது என்றும் பயங்கரவாதக் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

''பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவர்களை விடுதலை செய்ய வேண்ம் என அந்த அமைப்பு கோரியுள்ளது.

மனித உரிகைள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த நவம்பர் மாத இறுதியில் பயங்கரவாதத் விசாரணைப் பிரிவினரால் குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆரம்பத்தில் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த குறித்த மாணவர்கள் தற்போது சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்கள் பற்றிய தகவல்களைக் கோரி குறித்த மாணவர்களிடம் கடுமையான விசாரணை நடத்தப்பட்டுள்ளது என அவர்களது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்கள் மூன்று மாத காலத்திற்கு தடுத்து வைக்கப்பட உள்ளனர் எனவும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட உள்ளது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமைதியான முறையில் நடத்தப்படும் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு இலங்கை அரசு தடைகளை ஏற்படுத்தக் கூடாது என்றும் மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அடிப்படை உரிமைகளை குற்றச்செயல்களாக இலங்கை அரசு அடையாளப்படுத்தக் கூடாது எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (சி)

# கொழும்பு சென்ற பஸ் மீது புத்தளத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிச்சென்ற கொழும்பு பஸ் புத்தளம் பகுதியில் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு புத்தளம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளமூடாகக் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளை எதிர்ப்பக்கத்திலிருந்து வந்த பஸ் வீதிக்குக் குறுக்காக நிறுத்தப்பட்டு இந்த பஸ் வழிமறிக்கப்பட்டுள்ளது.

பின்னர் திடீரென ஓட்டோக்களில் வந்த சிலர் பஸ்ஸில் ஏறிச் சாரதியையும் நடத்துநரையும் தாக்கி பஸ்ஸை அவர்களே ஆளரவம் அற்ற இடம் ஒன்றுக்குக் கொண்டு சென்றதாகவும் அந்தப் பகுதியில் வைத்து மீண்டும் தாக்குதல் நடத்தியதாகவும் பஸ் நடத்துநர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், நேற்றிரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் நொச்சியாகம பொலிஸார் உதயனுக்குத் தெரிவித்தனர். (த-16)

# பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த டில்லியிடம் இலங்கை கோரிக்கை

இந்தியாவுடனான பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு, குறிப்பாக பயிற்சிகளை அதிகரித்துக்கொள்வதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவம் நேற்றுத் தெரிவித்தது. ஐந்து நாள்கள் பயணமாக கொழும்பு வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் நேற்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



இந்த நிலையில் பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வதற்கான கோரிக்கை இந்திய இராணுவத் தளபதியிடம் இலங்கை இராணுவத் தளபதியால் விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்தது.

இருதரப்பு கவனத்துக்குரிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சு மேலும் கூறியுள்ளது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் அசோக் கே.காந்தாவும் கூட இருந்தார்.

இரு நாடுகளினதும் இராணுவத் தளபதிகளது சந்திப்பின் போது தியத்தலாவ இராணுவக் கல்லூரியை இந்திய உதவியுடன் மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை மேம்படுத்துவதற்குச் சாத்தியமான எல்லா உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று இந்திய இராணுவத் தளபதி உறுதியளித்துள்ளார் என்றும் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் இந்திய இராணுவத் தளபதி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இருநாட்டு இராணுவக் கொள்கைகள் திட்டங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தெரிவுக்குழுவுக்கு எதிரான மனு மீது இன்று தீர்ப்பு

கொழும்பு, டிசெ.21

தம் மீதான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிராக பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று காலை வழங்கவுள்ளது.

குற்றப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விசாரித்த தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடைவிதிக்கக் கோரியும், தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழைப்பாணை விடுக்கக் கேட்டும் பிரதம நீதியரசர் சார்பில் அவரது சட்ட விவகாரங்களைக் கையாளும் நீலகண்டன் அன்ட் நீலகண்டன் நிறுவனம் நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதியரசர்களான எஸ். வீ.ஸ்ரீஸ்கந்தராஜா (தலைவர்), ஏ.டபிள்யூ.ஏ.சலாம் மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் கொண்ட குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

பிரதம நீதியரசரின் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு பக்கச்சார்பானது எனக் குறிப்பிட்டார். இந்தத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்த பின்னர் குழுவின் சுயாதீனத்தன்மை குறித்து கேள்வி எழுவதாகச் சுட்டிக்காட்டி நீண்டநேரம் விவாதித்தார்.

இந்த நிலையிலேயே இன்றைய தினம் காலை பதினொரு மணிக்கு இந்த மனு தொடர்பில் தீர்ப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. (சி)

# முல்லையில் கடும் மழை

முல்லைத்தீவில் தொடரும் அடைமழையால் 126இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்றும், நேற்றுமுன்தினமும் பெய்த மழையால் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் பண்டாரவன்னியன், புதுக்குடியிருப்பில் கெருடாவில் வசந்தபுரம் ஆகிய கிராம மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். (500)



மாத்தளை, துங்கலவத்தையில் உள்ள தெரக்கும்பரப் பகுதியில் நிலம் திடீரென இறங்கி 60 அடி ஆளமான குழியை ஏற்படுத்தியது.

# மருத்துவர் மீது நேற்றிரவு இனந்தெரியாதோர் தாக்கு

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் பி.திருமாறன் மீது அடையாளம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று அதன் பணிப்பாளர் சிறி.பவானந்தராஜா தெரிவித்தார்.

சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் பலாலி வீதி, கந்தர்மடம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் பி.திருமாறனின் (வயது-44) கையில் வெட்டுக் காயங்களுடன் காணப்படுகின்றார்.

திருநெல்வேலிப் பகுதியிலிருந்து, யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் விடுதியை நோக்கி வந்து கொண்டிருந்தபோதே இவரைப் பின்தொடர்ந்து வந்த சிலர் பலாலி வீதியில் வைத்து இவர்மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

என்ன காரணத்துக்காக மருத்துவர் தாக்கப்பட்டார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. எனினும் அரசியல் காரணங்களால் இந்தத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று அவரை அறிந்தவர்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர். (ஐ-16-4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 மழை வீழ்ச்சி 725.7 மி.மீ.மட்டுமே

## இனியும் குடாநாட்டில் மழை பெய்யாவிட்டால் பயிரழிவு நிச்சயம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

*யாழ்.குடாநாட்டில் கடந்த 10 வருடங்களில் இந்த வருடமே மிகக் குறைந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர அதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார். இந்த வருடத்தில் கடந்த 12 மாதங்களில் நேற்றுக் காலை 8.30 மணி வரையில் 725.7 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளது.*

இதில் இந்த மாதத்தில் மாத்திரம் 16.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இந்த வருடம் கடும் வறட்சி காரணமாக விவசாயிகள் பெரும் அழிவை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதத்தின் இறுதிப் பகுதியிலும், நவம்பர் மாதத்தின் முற்பகுதியிலும் தொடர்ச்சியான மழை குடாநாட்டில் பெய்தமையால் விவசாயிகள் ஓரளவு நன்மையை எதிர்கொண்டிருந்தனர்.

வழமையாக வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை மூலம் வருடத்தின் இறுதிக் காலப்பகுதியில் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகுவது வழமை.

இந்த மழையை நம்பி விவசாயிகள் பலர் நெல் விதைத்துள்ள நிலையில் மழை தொடர்ச்சியாகப் பெய்யாத காரணத்தால் நெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 10 வருட காலத்தில் 2006 ஆம் ஆண்டு பதிவான 976.5 மில்லிமீற்றர் என்ற மழை வீழ்ச்சியே இதுவரையில் குறைவான மழைவீழ்ச்சியாக இருந்தது.

2011 ஆம் ஆண்டு 1470.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் (டிசெம்பர்-295.1 மில்லி மீற்றர், நவம்பர்-518.1 மில்லி மீற்றர்), 2010 ஆம் ஆண்டு 1496.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் (டிசெம்பர்-375.8 மில்லிமீற்றர், நவம்பர்-492.2 மில்லிமீற்றர்), 2009 ஆம் ஆண்டு 1270.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் (டிசெம்பர் 401.7 மில்லிமீற்றர், நவம்பர்-371.6 மில்லிமீற்றர்), 2008 ஆம் ஆண்டு 1811.8 மில்லிமீற்றர் (டிசெம்பர்-184.5 மில்லிமீற்றர், நவம்பர்-830.8 மில்லிமீற்றர்) மழை வீழ்ச்சியும் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு 725.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

இனிவரும் நாள்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்யாது விட்டால் விவசாயிகள் பெரியளவில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.-என்று அவர்மேலும் கூறினார். (ம-5)

# 7,845 பனை நாற்றுக்கள் கடந்த வருடம் நடப்பட்டன

### பனை அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்ட இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கடந்த வருடம் 7 ஆயிரத்து 845 பனை நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு நடப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி.பார்த்தீபன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகங்களுக்கும் தேவைகளுக்கு ஏற்ப பனை நாற்றுக்கள் கொடுக்கப்பட்டன. வழங்கப்பட்ட 7 ஆயிரத்து 845 பனை நாற்றுகளுக்காக பனைஅபிவிருத்தி சபை ஊடாக 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் 950 பனை நாற்றுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் 400 பனை நாற்றுக்களும், காரைநகர் பிரதேச செயலகத்தில் 300 பனை நாற்றுக்களும், நல்லூர் பிரதேச செயலகத்தில் 600 பனை நாற்றுக்களும் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் 1000 பனை நாற்றுக்களும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் 400 பனை நாற்றுக்களும், நெடுந்தீவு பிரதேசசெயலகத்தில் 125 பனை நாற்றுக்களும், வேலணை பிரதேச செயலகத்தில் ஆயிரத்து 100 பனை நாற்றுக்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 650 பனை நாற்றுக்களும், சங்கானை பிரதேச செயலகத்தில் 860 பனை நாற்றுக்களும் , மருதங்கேணி பிரதேச செயலகத்தில் ஆயிரத்து 80 பனை நாற்றுக்களும், சாவகச்சேரி பிரதேசசெயலகத்தில் 380 பனை நாற்றுக்களும் நடப்பட்டன.

இவற்றைத் தவிர 389 பனை நாற்றுக்கள் நடுகைக்காக குடத்தனை, மாமுனை ஆகிய மாதிரிப் பண்ணைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நாற்றுக்கள் அடுத்த ஆண்டு திட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்த நாற்றுக்கள் பாதுகாப்பாக வளர்வதற்கு பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று மேலும் கூறப்பட்டது. (ம-13)

## "பூமித்தாயே நீ போகாதே" இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.19

'பூமித்தாயே நீ போகாதே' எனும் கவிதை தொகுப்பு இசை வெளியீடாக வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனை அரியாலையூர் கே.குமணன் வெளியிட்டுள்ளார்.

உலக அழிவின் ஒரு பார்வையை மையப்படுத்தி 21.12.2012 அன்று உலகம் அழியுமா? என்று உலகத்தில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில் பூமித்தாயின் பெறுமதியையும் , பூமியின் அழிவு நிச்சயமா? இல்லையா? என்பதை உள்வாங்கி உணர்ச்சிகளுடன் இந்தக் கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம-13)

# பாடசாலைகளுக்கு நிகரான கற்றலை முன்பள்ளிகளும் வழங்கி வருகின்றன

### ஆறுதல் நிறுவனப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

வடமாகாணத்தில் பாடசாலைகளுக்கு நிகரான கற்றல் செயற்பாடுகளை முன்பள்ளிகள் வழங்கி வருகின்றன. இதனை மேலும் மேம்படுத்தவே முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா கற்கைநெறிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார் ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலா.

ஆறுதல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் தற்போது 1,800 முன்பள்ளி ஆசிரியர்கள் மூவாயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்று வருகிறார்கள். பாடசாலைகளுக்கு அத்திபாரமாக முன்பள்ளிகள் விளங்குவதால் ஆறுதல் நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது. இதன் மூலம் ஆசிரியர்கள் தேர்ச்சியுடையவர்களாக உருவாகுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.- என்றார்.



வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் 480 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. (ம-14-17)

## பதினொரு தொழில் பிணக்குகளுக்கு திணைக்களத்தால் தீர்வு

### யாழ்ப்பாணத்தில் நான்கு முறைப்பாடுகளில் மூன்று முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.21

வடக்கு மாகாணத்தில் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களால் தொழில் திணைக்களத்திடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 11 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நான்கு முறைப்பாடுகளில் மூன்று முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கிளிநொச்சியில் இருந்து இரண்டு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்த இரண்டு முறைப்பாடுகளும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட்டன. வவுனியாவில் இருந்து ஆறு முறைப்பாடுகள் தொழில் திணைக்களத்துக்கு கிடைத்தன.

இந்த ஆறு முறைப்பாடுகளும் திணைக்களத்தினால் தீர்த்து வைக்கப்பட்டன.

அநேகமான நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உரிய முறையில் மாதாந்த சம்பளம் மற்றும் இதரகொடுப்பனவுகள் போன்றவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது.

அத்துடன் விடுமுறை நாள்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அதற்கான மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை-என்றார். (த-17)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

யாழ்ப்பாணம், டிசெ.21

வேலணை பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தலைமையில் கூட்டம் இடம் பெறும். (ம-50)

**மனித உரிமை நிகழ்வு**

யாழ்.மாவட்ட பெண்கள் சமாசத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள விழுது நிறுவன மேம்பாட்டு மையத்தில் மனித உரிமை தினநிகழ்வு நடைபெறவுள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ம-13)



*பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்தியில் அமைக்கப் பட்டு வரும் வடிகாலின் நிர்மாணப் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன. இதனால் இந்தப் பகுதி ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் வாகனச் சாரதிகள், வழிப்போக்கர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.* (த-17)

# சேமலாப நிதித் திட்டத்தில் மேலும் இணைந்தன 22 நிறுவனங்கள்

வடக்கு மாகாணத்தில் மேலும் 22 நிறுவனங்கள் கடந்த நவம்பர் மாதத்தில் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளன.

புதிதாக இணைந்துள்ள இந்த நிறுவனங்கள் உடனடியாக தொழில் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- யாழ்ப்பாணத்தில் பத்து நிறுவனங்களும் கிளிநொச்சியில் இரண்டு நிறுவனங்களும் வவுனியாவில் ஏழு நிறுவனங்களும் மன்னாரில் மூன்று நிறுவனங்களும் இந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளன. (த-17)

இன்று உலகம் அழியும்

மாயன் நாட்காட்டியின்படி
இன்று காலை 9 மணிக்கு உலகம் அழியும்.
பிந்திய செய்தி
ஆனால்
என்பது பொய்.
A/L - 2015
கலை, வர்த்தகப் பிரிவுகளுக்காக
ஜனவரி 5 காலை 9 மணிக்கு
நாங்கள் உங்களைச் சந்திப்பீர்கள்
என்பது மட்டும் மெய்.
DMI
Jaffna

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்திய...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
பேணிக் கொள்வதென இருநாட்டு அரசுகளும் முடிவு செய்திருந்ததாக, இந்தியாவின் உயர்மட்டப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைப் படைகளுக்கு இந்தியாவில் பயிற்சிகளை வழங்குவதற்கு தமிழகத்தில் உள்ள ஆளும் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதனால் ஏற்படும் அழுத்தங்களைத் தவிர்க்கவே பயிற்சி பற்றிய விவரங்கள் இரகசியமாக

## பதுங்கு...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
அதற்குள் சீருடை காணப்பட்டதால் அச்சமடைந்த வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் எலும்புக் கூட்டை மீட்டதுடன் மேலும் பதுங்கு குழியைத் தோண்ட வேண்டாம் என்று அறிவுறுத்திச் சென்றுள்ளனர். (த-400)

## காதலியைக்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
திருக்கலாம் என பொலிஸார் கூறுகின்றனர்.

''மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டுக் காதலியைத் திருமணம் செய்திருக்கலாமே என்று கேட்டதற்கு, மனைவியை விவாகரத்துச் செய்தால் தனது நண்பர்களிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் விவாகரத்தை நாடவில்லை என்று சந்தேக நபர் கூறினார்'' எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வதாக உறவினர்களுக்குக் காட்டிக் கொண்டு மிகவும் சூட்சுமமான முறையில் இக்கொலைகளை சந்தேக நபர் செய்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் தனது சாட்சியத்தில் தெரிவித்தவை என்று பொலிஸார் கூறியதாவது:-

மனைவி நித்திரையிலிருந்த அறைக்குச் சென்று அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்தார் சந்தேகநபர். அப்போது மனைவி கத்தியுள்ளார். இந்தச் சத்தத்தைக் கேட்ட மூன்று வயது மகன் பாட்டி.. பாட்டி... என்று சத்தமிட்டவாறு அறையிலிருந்து ஓட முயற்சியுத்துள்ளார். அவரையும் பிடித்துக் கட்டிலில் போட்டு கழுத்தை நெரித்துக்

## புலிகள்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
உபகரணங்கள், அவற்றுக்குரிய புத்தகங்கள் அந்த வீட்டில் இருந்தன என கியூ பிரிவு பொலிஸார் கூறியுள்ளனர்.

**கைதான புலிகள்**

இதையடுத்து, எஸ்.சுரேஸ்குமார்(வயது 34), டி.உதயதாஸ் (வயது 39), கே.கிருஷ்ணமூர்த்தி, ரி.மகேஸ்வரன் (வயது 33) ஆகிய நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் நால்வரும் விடுதலைப்புலிகள் என்று தெரியவந்துள்ளதாகவும் தமிழ்நாடு பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர்கள் அளித்துள்ள வாக்குமூலத்தில், கடந்த நான்கு ஆண்டுகளாக, சென்னையில் பல்வேறு இடங்களில் தங்கியிருந்து, வெவ்வேறு தொழில்களை செய்து வந்தனர் எனவும், வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் தமக்குப் பணம் அனுப்பி வைப்பர் என்றும் கூறியுள்ளனர்.

**சதி இல்லை**

அகதியாக, இங்கு வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்ட அவர்கள், தாம் எவ்வித சதிச் செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட கியூ பிரிவு பொலிஸ் உயர் அதிகாரி, வெடிபொருள்கள் தடுப்பு சட்டத்தின் கீழ், விடுதலைப் புலிகள் நான்கு பேரை கைது செய்துள்ளோம் என்றார்.

**குண்டு வைக்க முயற்சி**

''தமிழ்நாட்டில் இவர்கள் நாசவேலையில் ஈடுபட முயற்சி செய்யவில்லை. ஆனால், இலங்கையில் உள்ள நண்பர்களை கைபேசியில் தொடர்பு கொண்டு நாசவேலையில் ஈடுபடுவது தொடர்பாகப் பேசியுள்ளனர்.

அதற்காக, இங்கு வெடிகுண்டு தயாரிப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதற்கான ஆதாரங்களை பறிமுதல் செய்து, அவர்களை சிறையில் அடைத்துள்ளோம்.

தப்பியோடிய இரண்டு விடுதலைப் புலிகளையும் விரைவில் பிடித்து விடுவோம்.

சிறையில் அடைக்கப்பட்ட நான்கு பேரையும், காவலில் எடுத்து விசாரிக்க முடிவு செய்துள்ளோம்'' என்று கூறினார்.

**இலங்கை தந்த துப்பு**

இதற்கிடையே, இலங்கைப் படையினர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை தெரி

வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த 21 நாள் போர்ப்பயிற்சி, எதிர் வரும் 24ஆம் நாள் நிறைவடையவுள்ளது.

இந்தப் பயிற்சியின்போது, கடந்த 20 ஆண்டு காலத்தில் கிளர்ச்சி முறியடிப்பில் தமது அனுபவங்களை இருநாட்டு சிறப்புப் படையினரும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போர்ப் பயிற்சியை இந்தியாவின் தென்பகுதியிலேயே நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், தமிழ்நாட்டில் எழுந்த எதிர்ப்புகளை அடுத்து இமாசல பிரதேசத்துக்கு இவை மாற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, இந்தியாவில் கடந்த ஆண்டு 820 இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டில் 870 இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுவதாகவும் தகவல்கள் ஏற்கனவே வெளியாகி இருந்தன.

இந்தப் பயிற்சிகள் குறித்து இலங்கைத் தரப்பிலிருந்து இதுவரையில் எந்தவிதத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. (சி)

கொலை செய்துள்ளார் சந்தேகநபர்.

கட்டிலில் நித்திரையிலிருந்த ஒரு மாத வயதுப் பாலகனை மனைவியின் மார்பு அருகே பால் குடிப்பது போல் படுக்க வைத்துள்ளார். ஒரு தாயிடம் குழந்தை பால் குடிக்கும்போது எந்தக் தகப்பனும் இப்படி ஒரு கொலையைச் செய்யமாட்டான் என்று விசாரணையைத் திசை திருப்புவதற்காகவே இவ்வாறு செய்துள்ளார். குழந்தையை மனைவியின் மார்போடு சேர்க்கும்போதே அவர் இறந்திருந்தார்.

கட்டிலைச் சுற்றி நுளம்பு வலையை விரித்து அதற்குத் தீ வைத்துள்ளார், அதற்கு முன் மெழுகுதிரி ஒன்றையும் தீப்பெட்டியையும் கட்டிலிற்கு அருகில் வைத்துள்ளார். மெழுகுதிரியைப் பற்றவைக்க முயற்சிக்கையில் தீப்பற்றிக் கொண்டதாக மற்றவர்களை நம்ப வைக்கவே இவ்வாறு செய்துள்ளார் - என்றனர்.

இக்கொலையில் சந்தேகநபரின் தாயோ வேலைக்காரியோ சம்பந்தப்படவில்லை எனப் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

கொலையான பெண்ணும் சந்தேகநபரும் பல வருடங்களாகக் காதலித்தபின் 2003ஆம் ஆண்டு திருமணம் செய்திருந்தார்கள். இக்கொலை சம்பந்தமாக கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர்.

வித்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளின் முக்கிய நபர் என்றும் மின்னியல் துறை வல்லுநர் என்றும் பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையில் மீளக் கட்டி எழுப்புவதற்கு முயன்றார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இரு தமிழர்களிடம் இருந்து இலங்கை இராணுவத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே தமிழகத்துக்குத் துப்பு அனுப்பப்பட்டதாகவும் அந்தப் பத்திரிகை கூறுகின்றது.

இலங்கையின் முக்கிய இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்துவது இவர்களின் முக்கிய நோக்கம் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

**அரசுக்கு எதிராக புதிய இளைஞர் குழு**

''இலங்கை அரசுக்கு எதிராக புதிய இளைஞர் குழு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிகள் நடப்பதாக இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் இருவரும் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர் என்றும் இதன் பின்னணியில் உள்ள முக்கிய நபர் சென்னையில் இருக்கிறார் என அவர்களே துப்புக் கொடுத்தார்கள் என்றும் 'கியூ' பிரிவு அதிகாரிகள் கூறினர்'' என்று அந்தப் பத்திரிகை மேலும் கூறுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் சுரேஷ்குமாருக்கு குண்டுவெடிப்பில் இரு கால்களும் இல்லாமல் போயுள்ளன. அவர் சக்கர நாற்காலியிலேயே நடமாடுகிறார். இவர் புலிகளின் வெடிகுண்டுத் தயாரிப்புப் பிரிவின் தலைவராக இருந்தவர் என்று தமிழக அதிகாரிகள் கூறுகின்றனர். மின்சுற்றுப் பலகைகளை (எலக்ரோனிக் சேர்க்கிட்) தயாரிப்பதில் அவர் வல்லவர் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**கைதான அகதிகள்**

கைதானவர்களில் இருவர் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக 2001 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் வந்திருந்தனர். ஏனைய இருவரும் போரின் இறுதிக்கட்டம் நடந்த 2009ஆம் ஆண்டு வந்தவர்கள். இவர்களில் கிருஷ்ணமூர்த்தி அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு குடிதண்ணீர் போத்தல் எடுத்துச் சென்று விநியோகிக்கும் வேலை செய்து வந்தார். தாஸ் தச்சுத் தொழிலும் மகேஸ்வரன் ஒளிப்பட செம்மையாக்கும் தொழிலும் செய்து வந்தனர்.

தாம்பரம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட இவர்கள் நால்வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (சி)

## இரண்டு...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
இருந்த மலைகள், மண்மேடுகள் மெல்லமெல்ல சரியத் தொடங்கியதும் இக்கிராமவாசிகள் உடுத்த உடையுடன் ஊரைவிட்டு வெளியேறி பௌத்த விகாரையொன்றில் தங்கியுள்ளனர்.

முற்றாக மூடப்பட்ட 18 வீடுகளுள் 50 இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த வீடொன்றும் இருப்பதாக கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமம் இப்போது அடையாளமே தெரியாமல் மண்ணாலும், மலைக்கற்களாலும் முற்றாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை, சேருநுவர சிறிமங்கள கம கிராமமும் நீரில் முற்றாக மூழ்கியிருப்

## சீரற்ற...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
ரத்து 845 பேர் 102 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மண்சரிவு, சுழல் காற்று, மரம் முறிவு என்பவற்றால் 358 வீடுகள் முழுமையாகவும் 1,935 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் 9 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பேரும், பதுளை மாவட்டத்தில் 3 பேரும், கண்டி மாவட்டத்தில் 4 பேரும், பொலன்னறுவை மாவட்டத்தில் 3 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 2 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 2 பேரும், அம்பாறை மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

**தமிழ் குடும்பம் குறித்து தகவலில்லை**

மாத்தளை, இரத்தோட்டை, நிக்கலோகவத்தை கீழ் பிரிவில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி காணாமல்போன அறுவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மண்சரிவு ஏற்பட்டவேளை, ஒரே வீட்டில் தங்கியிருந்த ஆறு பேர் அடங்கிய தமிழ்க் குடும்பமே இவ்வாறு காணாமல்போயுள்ளது.

## எம்.பி.வீடு...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
விஜேதாஸவின் வீட்டில் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சுமார் 30 நிமிடங்கள் அவருடன் கலந்துரையாடினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கிருந்து பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனைத் தொடர்புகொண்ட ஜனாதிபதி, இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

**பொலிஸில் முறைப்பாடு**

தனது வீட்டுக்கு அருகில் இன்று (நேற்று) வியாழக்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும், தனது சாரதி இரண்டு வெற்றுத் தோட்டாக்களை மீட்டுள்ளதாகவும் விஜேதாஸ பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்திய பொலிஸார் விஜேதாஸ ராஜபக்ஷவின் வீட்டின் அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லையென்று தெரிவித்துள்ளனர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு, அருகிலுள்ள வீடுகளில் பட்டாசு கொளுத்தப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனினும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற மீரிஹான பொலிஸார், விஜேதாஸவிடம் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்துள்ளனர்.

**விஜேதாஸ எம்.பி. தகவல்**

இன்று (நேற்று) அதிகாலை தனது வீட்டின் முன்பாக மூன்று துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டதாக விஜேதாஸ தெரிவித்தார். ''அப்போது ஒரு ரேஸிங் கார் செல்லும் சத்தமும் கேட்டது. இதனையடுத்து நான் ஜன்னலைத் திறந்து பார்த்தபோது அங்கு ஒருவரையும் காணவில்லை. காலையில் எமது வீட்டு வளாகத்தைச் சுற்றி பார்வையிட்டபோது, அந்த இடத்தில் இரண்டு தோட்டாக்கள் கிடந்தன'' என்று சம்பவம் தொடர்பில் விஜேதாஸ ராஜபக்ஷ விவரித்துள்ளார்.

**மோப்பநாய் உதவிக்கு**

விஜேதாஸ ராஜபக்ஷ வீட்டுச் சுவரில் துப்பாக்கி ரவைகள் துளைத்துள்ளமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன எனப் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

'ரொகீ' என்ற மோப்ப நாயையும் சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விஜேதாஸவின் வீடு அமைந்துள்ள பகுதிக்கு நேற்று நள்ளிரவு வாகனமொன்று வந்ததாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவ்வீட்டுக்கு முன்னால் வைத்து எவர் மீதேனும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம்

பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகாவலியின் கிளை ஆறு ஒன்றின் காரணமாகவே இக்கிராமம் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அங்கு வெள்ளநீர் சுமார் 12 அடிவரை தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கான்ஸ்டபிள்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
விரைந்து செயற்பட்ட பொலிஸார் லொறியை அகற்றி அதற்குள் அகப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளின் உடலை மீட்டனர்.

தொடர் மழை பெய்துவருவதால் வீதியின் கீழே மண் அரிக்கப்பட்டதில் காப்பெற் உடைந்து வீழ்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-16)

இது குறித்து இரத்தோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தேடும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

**மண்சரிவு அபாயத்தால்
35 குடும்பங்கள் அகற்றம்**

இது இவ்வாறிருக்க, மண்சரிவு அபாயம் காரணமாக ஏப்பிட்டகந்த பிரதேசத்தில் 35 குடும்பங்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்டம் இரத்தோட்டையில் உள்ளது ஏப்பிட்ட கந்த.

குறித்த குடும்பங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

**கிழக்கில் வெள்ளம் வடிகின்றது**

கிழக்கில் தொடர்ந்த அடைமழை நேற்றுடன் ஓய்ந்துள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பல பகுதிகளில் வெள்ளம் வடியத் தொடங்கியுள்ளது. அத்துடன், இரண்டு மாவட்டங்களிலும் வெள்ளம் ஓடக்கூடியவாறு ஆற்றுவாய்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனால், போக்குவரத்தில் ஏற்பட்ட தடைகள் ஓரளவு நீங்கியுள்ளன. மக்களும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். (சி)

நிலவுவதாகவும் மீரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர்**

விஜேதாஸ ராஜபக்ஷவின் வீட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முறைப்பாடொன்று கிடைத்துள்ளது. அத்துடன், அங்கு மூன்று தோட்டாக்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்படி, இந்தச் சம்பவம் தொடர்பில் மீரிஹான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், இரண்டு விசேட பொலிஸ் குழுவினரும் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆதாரங்கள் பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன'' - என்றார் பொலிஸ் பேச்சாளர்.

**அரசியல் பிரமுகர்கள் படையெடுப்பு**

சம்பவத்தை அறிந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ரவி கருணாநாயக்க, ஜே.வி.பியின் அநுர குமார திஸாநாயக்க, ஜனநாயக தேசிய முன்னணியின் கயந்த கெட்டகொட ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகாவும் விஜேதாஸ ராஜபக்ஷவின் வீட்டைப் பார்வையிட்டு, சம்பவம் குறித்து அவரிடம் கேட்டறிந்துள்ளனர்.

**பின்னணி**

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜேதாஸ ராஜபக்ஷ, அதன் ஆரம்பம் முதல் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டதிலும் முக்கிய மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி அதற்கமைய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள், கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வருகின்ற நிலையில், சங்கத்தின் தலைவர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் நாட்டில் சர்சசைக்குரிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

அத்துடன், பிரதம நீதியரசருக்கு ஆதரவாக செயற்படும் சட்டத்தரணிகளிடையே இது அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்கவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இனந்தெரியாதநபர்கள் இங்கு தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழங்காவில் வீட்டுத்திட்ட பயனாளிகள் மணல், கல் பெறுவதற்கு அனுமதி

### பூநகரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

அக்கராயன், டிசெ.21

முழங்காவில் பிரதேசத்தில் வசிக்கும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் கல், மணல் என்பவற்றை பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் அந்தந்தப் பகுதிக்கான கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்ற பின்னர் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தமது வீடுகளை விரைவில் பூர்த்தி செய்யும் வகையில் கல், மணல் என்பவற்றை எடுக்க முடியும்.

ஆனால் இது தொடர்பாக துஷ்பிரயோகங்கள் எதுவும் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டா எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கல், மணல் என்பவற்றைப் பெறுவதில் தடைகள் காணப்பட்டன. இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தனர்.

இதனையடுத்து இந்த முடிவு அங்கு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (க-18)



மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலிநகர் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து 110 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. (க-415)

## முசலி பிரதேச சபைக்கு ஆளுநரால் நிதி ஒதுக்கீடு

மன்னார், டிசெ.21

வடமாகாண ஆளுநர் முசலி பிரதேச சபையின் அபிவிருத்திக்கென 281 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மன்னார் முசலிப் பிரதேச சபையின் செயலாளர் ஏ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

முசலிப் பிரதேச சபையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி கருதி வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி 281 மில்லியன் ரூபாவைப் பல்வேறு உட்கட்டுமான அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன் மூலம் 500 வீதி விளக்குகள், 450 மலசல கூடங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன், வீதி அபிவிருத்தி, காடழிப்பு உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-50)

## புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

### தாகத்துக்கு உவர் நீரைப் பருகும் அவலம்

புதுக்குடியிருப்பு, டிசெ.21

*புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

ஆனந்தபுரம் கிராம சேவகர் பிரிவில் கடந்த காலப் போர் இடர்களின் பின்னர் தற்போது 220 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதி கடற்கரையை அண்டிய பகுதியாகக் காணப்படுவதால் கிணறுகள் அனைத்திலும் உவர்நீர் காணப்படுகின்றது. ஒரு கிணற்றில் கூட குடிதண்ணீர் பெற முடியாத நிலை நிலவுகின்றது.

மக்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டபோது 10 தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் பவுஸர் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பிரதேச சபையினர் அதனை நிறுத்திவிட்டனர்.

பின்னர் இந்தப் பகுதி மக்களின் அவலநிலை கண்டு 'சோஆ' நிறுவனத்தினர் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வந்த போதிலும் நிதி நெருக்கடி காரணமாக அவர்களும் அதனைக் கைவிட்டு விட்டனர்.

இதன் பின் தாம் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தாகத்துக்கு உவர் நீரைப் பருகும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமது நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு உதவுமாறு மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400)

## மிகவும் மோசமான நிலையில் துணுக்காய் விநாயகர் வீதி



துணுக்காய், டிசெ.21

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகர் வீதி (பண்ட்றோட்) மக்களின் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதி துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ளது. சுமார் 4 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி மழையைத் தொடர்ந்து சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் 35 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மேலும் கற்குவாரி ஒன்றும் இயங்கி வருகின்றது. கனரக வாகனங்கள் இந்த வீதியூடாக கற்குவாரிக்குச் செல்வதால் வீதியின் நிலை மோசமானதாக மாறியுள்ளது.

இது தொடர்பாக மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ள போதிலும் இற்றை வரையும் வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்து வரும் கனமழையால் இந்த வீதி குன்றும் குழியுமாகவும் மழை நீர் நிறைந்தும் மக்களின் போக்குவரத்துக்கு அறவே உதவாத நிலையிலும் காணப்படுகின்றது.

மேலும் அவசர நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத அவலநிலையும் காணப்படுகின்றது எனவும் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-415)

## மல்லாவி நகரப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை



மல்லாவி, டிசெ.21

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மல்லாவி நகரப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கியின் 245 ஆவது வாடிக்கையாளர் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வங்கி முகாமையாளர் செல்லையா சர்வேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வங்கியின் தலைமையக வலைப்பின்னல் அமைப்பின் முகாமைத்துவப் பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கிரிசாந்தி தம்பையா கலந்துகொண்டார்.

வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம், துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன், மாங்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மீஹெரகுமுர, இராணுவ உயரதிகாரிகள், மல்லாவி பொலிஸ் அதிகாரி ஹெட்டியாராச்சி, மல்லாவி மருத்துவர் துமிந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

வங்கியின் வாடிக்கையாளர் நிலையத்தை வங்கியின் தலைமையக வலைப்பின்னல் அமைப்பின் முகாமைத்துவப் பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கிரிசாந்தி தம்பையா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வறிய சிறார்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன. மேலும் யோகபுரம் மகா வித்தியாலயத்துக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக சங்கத்தினர், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-415)

## அக்கராயன் கூ.சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு

அக்கராயன், டிசெ.21

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் இங்கு மீளக்குடியமர்ந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், தற்போதுதான் ஜனநாயக முறையில் இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அரச மற்றும் அரசுடன் இணைந்த அரசியல் கட்சியொன்றினால் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**இதற்கு முன்னர் அரச மற்றும் அரசுடன் இணைந்த அரசியல் கட்சியொன்றினால் தலைவர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்தனர்.**

இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி ஜனநாயக முறையில் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தலைவராக வே.விஜயரத்தினமும், உப தலைவராக த.தியாகேஸ்வரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக ம.சிவகுமார், மா.சின்னையா, நா.சின்னையா, மா.உதயகுமார், நா.ஜெயகாந்தன், சு.தயாளினி, பு.சுயந்தன், க.யோகேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-18)

## வவுனியா கிராமப் புறங்களில் மீண்டும் திருடர்களின் கைவரிசை

வவுனியா, டிசெ.21

வவுனியாவிலுள்ள கிராமப் புறங்களில் திருடர்கள் மீண்டும் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இரவு வேளையில் திருடர்கள் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தமது கைவரிசையைக் காட்டி வந்தனர்.

இதில் பொலிஸார் கவனம் செலுத்தியதைத் தொடர்ந்து திருடர்களின் செயற்பாடுகள் குறைந்து காணப்பட்டன.

ஆனால் அண்மைய நாள்களாக மீண்டும் திருடர்களின் தொல்லைகள் ஆரம்பித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வவுனியா உமாமகேஸ்வரன் வீதியில் வேப்பங்குளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற திருடர்கள் வர்த்தக நிலையத்தின் கதவை உடைத்து உள்ளே செல்ல முயற்சி செய்துள்ளனர். அப்போது அங்கிருந்த வர்த்தக நிலைய உரிமையாளர் கூக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து திருடர்கள் தங்களின் முயற்சியைக் கைவிட்டு ஓடித் தப்பியுள்ளனர்.

இதேவேளை சில வீடுகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிய வருகின்றது. எனவே மீண்டும் இந்தப் பகுதிகளில் பொலிஸாரை இரவு நேரக் கடமையில் ஈடுபடுத்தல் வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-421)

## ஏகமனதாக நிறைவேறியது வரவு- செலவுத் திட்டம்

மன்னார், டிசெ.21

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் சுவக்கீன் வரப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் எனப் 12 பேர் கொண்ட சபையிலேயே வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபையின் செயலாளர் சாம்சோன் ஜெனிங்ஸ் தெரிவித்தார். (க-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுப்பணிப் பெண் தேவை

வயோதிபரை பராமரிக்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண்தேவை. தங்குமிட, உணவு வசதி செய்து தரப்படும்.

தொடர்பு: 0772487653

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பெயர் மாற்றம்

மாதகலை சேர்ந்த ரவிச்சந்திரன் இசைவழகன் ஆகிய நான் ரவிச்சந்திரன் நர்மிகன் என எனது பெயரை மாற்றுகின்றேன்.

Year End Mega Sale
மங்களா காட்சியறையில் மாபெரும் மலிவு ஏல விற்பனை
நீங்களே விலையைத் தீர்மானியுங்கள்
22.12.2012 தொடக்கம் 24.12.2012 வரை
கட்டில் 2000/=
Visitors Chairs 2500/=
Computer Table 2500/=
Stell அலுமாரி 6000/=
Glass T.V Stand 4500/=
Iron Board 750/=
Soba Set 9500/=
Rolling Chairs 2500/=
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
ஏல நேரம்- காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை
மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரை

## வெள்ளத்தால் ரூ.16 லட்சம் நட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக் கால் கடற்றொழில் திணைக் களத்துக்கு 16 இலட்சம் ரூபாவரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

15 இலட்சம் ரூபா பெறுமதியான பெரிய படகு ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், 2 தோணிகளும் வலைகளும் சேதமடைந்துள்ளன. அத்துடன், 2 தோணிகளை காணவில்லை யென முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் ஸ்ரீ செல்வநாதன்

(ஸ்ரீ செல்வநாதன் ஸ்ரோஸ் உரிமையாளர், சுன்னாகம்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தெஹிவளை 52/12, லியனகே வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஸ்ரீ செல்வநாதன் 18.12.2012 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகலிங்கம் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை ஸ்தாபகரும், அதிபரும்) - கண்மணி ஆகியோரின் அருமை மகனும், காலஞ்சென்ற சிவசோதிநாதன் மற்றும் இராஜநாதன், இந்திராதேவி, சபாநாதன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ஜெகநாதன், வனிதாமணி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வபூரணம், சறோஜாதேவி, காலஞ்சென்ற நாகராஜா மற்றும் கமலாசனி, சாந்திகுமாரி, ஞானதேவி, சாந்திநாதன், கருணா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தகுமாரி, சூரியகுமாரி, காலஞ்சென்ற ரகுநாதன், ஜெயகுமாரி, செல்வகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் சித்தப்பாவும், சிவப்பிரியா, சஞ்ஜீவன், சுதர்ஷன், தரணியா, வருண், இந்துஜா, சிந்துஜா, சிந்துஜன், ஜலஜா, லம்போஜன், பானுஜா ஆகியோரின் பெரியப்பாவும், ஹரிஹரன், சசிஹரன், சசிரேகா, சசிதரன், தர்ஷிகா, நிஷாந், றெஜிஷாந் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை மறுதினம் (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நா.இராஜநாதன்- 0775567520
நா. சபாநாதன் - 0775536004

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சுப்பிரமணியம்



இல.127/4, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (19.12.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, கோபால் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வல்லிபுரம் கதிரவேலுவின் அன்பு மைத்துனியும், சாந்தி, பத்மாவதி, செல்வரத்தினம், சற்குணம், வரதலட்சுமி, யோகரட்ணம், விஜயரட்ணம், சண்முகரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகநாதன், நவரத்தினராஜா, சரோஜாதேவி, கிரிதரன், திலோத்தமை, பாமினி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமியும், சதீஸ்குமார், பிரதீப்குமார், ரஞ்சித்குமார், நந்தகுமார், அஜிலா, ரேணுகா, நவநீதன், விஸ்ணுகா, கிரியா, கிருஷா, கிருஷாந்தி, வைஸ்ணவி, பிரசன்னா, பிரவீன், வாரகி, தாரணி, துவாரகன், ஆரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னனாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.127/4, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(27081)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செம்பன் நடேசன்



''ஆனந்தகானம்'' அறிவாலயம் இமையாணனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செம்பன் நடேசன் நேற்று (20.12.2012) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செம்பன் - பொன்னம்மா தம்பதியாரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்தனத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியவதி, பாக்கியநாதன் (ஆசிரியர், யா/கம்பர்மலை அ.த.க.பா, யா/ சிவகுரு வித்தியாலயம்), ரகுநாதன் (லண்டன்), பாமினி (பிரதேச செயலகம், பச்சிலைப் பள்ளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்தினம், லீலாவதி, காலஞ்சென்ற பாக்கியநாதன் (அப்பி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்லையா (மனேச்சர்), வ.சி. மகேந்திரன் (C.T.B) ஆகியோரின் மைத்துனரும், செல்வராணி, யோகராணி (ஆசிரியர்), செல்வச் சந்திரராசா (லண்டன்), ரமா (யா/உடுத்துறை இ.த.க.பா. ஆசிரியர்), மதிவதனி (இந்தியா), காண்டீபன் (கிளி/கச்சேரி), ரமணன் (கிளி/கட்டடங்கள் திணைக்களம்), நர்மதா (பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனும், நிகிலா, ஆர்வலன், அக்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவாலயம்
இமையாணன். 0770517938

(25575)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

T.V.S வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு T.V.S Apachi 180CC மோட்டார் வண்டிக்கு 12000/= விலை தள்ளுபடி
(இவ் விலை கழிவு யசோ மோட்டாஸ் இல் மட்டுமே)



இச் சலுகை (இன்று தொடக்கம் 31.12.2012 வரை)
~~319900/=~~ - 12000/=
307900/=
யசோ மோட்டாஸ், 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு- 021 7200650, 077 5017161

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கை - இந்திய உறவின் நெருக்கத்தில் பொதிந்திருக்கும் பின்னணி தான் என்ன?

இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங் தலைமையிலான ஐவர் அடங்கிய குழு நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுமுன் தினம் இலங்கை வந்துள்ளது.

இக்குழுவின் இலங்கை விஜயம் இன்றைய நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பில் இது மற்றொரு மைற்கல் என்பதே பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

இரு நாடுகளுக்கும் இடையே தற்பொழுது உருவாகிவரும் நெருக்கமான உறவு, அடுத்த மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது கூட்டத்தொடரில் தனக்குக் கைகொடுக்கலாம் என்று இலங்கை எதிர்பார்க்கிறது.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்கு இந்தியாவுக்கு இலங்கையின் ஆதரவு அவசியம் தேவைப்படுகிறது. அதே வேளை, உள்நாட்டில் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடிகள், சர்வதேசத்தில் மற்றும் ஐ.நாவில் எதிர்நோக்கும் நெருக்கடிகள் ஆகியவற்றை இந்தியாவின் ஆதரவுடன் தன்னால் முறியடித்துவிட முடியும் என்று இலங்கை அரசு நம்புகிறது எனலாம்.

இத்தகையதொரு அரசியல் சூழமைவில்தான் இலங்கை- இந்திய இராணுவ ஒத்துழைப்பு சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நீதியாகவும், நியாயமாகவும் செயற்படுவதைப் புறம்தள்ளும் விதத்தில், இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான இந்த நெருக்கம் அதிகரிப்பது தமிழர் தரப்பால் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு, இந்தியா ஆதரவு வழங்கமாட்டாது என்றே முதலில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. புவிசார் அரசியலின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இந்தியாவின் அந்த நிலைப்பாட்டுக்குத் தமிழ்நாட்டிலும் டில்லியிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பவே, இறுதியில் இந்தியா தனது முடிவை மாற்றிக்கொண்டு பிரேரணைக்கு ஆதரவு வழங்கியது.

உண்மையில் இந்தியா உள்ளார்ந்த விருப்பத்துடன் அந்த முடிவை எடுக்கவில்லை. எனவே, இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பது இப்போதே வெளிச்சமாகிறது!

இந்திய இராணுவத் தளபதியின் தற்போதைய இலங்கை விஜயம் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இருந்து வரும் தடங்கல்களை ஒருவேளை நீக்கிவிடலாம். அத்தகைய நிலையில் இவ்விரு நாடுகளும் மேலும் நெருக்கமாகச் செயற்பட வழி ஏற்படப் போகிறது.

2003ஆம் ஆண்டு முதல் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், அது இது வரை சாத்தியமாகவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமலேயே இரு நாடுகளும் பாதுகாப்புத்துறையில் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றன.

ஜெனரல் பிக்ரம் சிங் தலைமையிலான குழு இலங்கை வந்த முதல் நாளே இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுடன் பேச்சு நடத்தி உள்ளது. ராஜபக்ஷ அரசில் செல்வாக்குள்ளவராகக் கருதப்படும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சந்திப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கோத்தபாய ராஜபக்ஷ கடந்த பெப்ரவரி மாதம் டில்லி சென்று இந்திய பாதுகாப்புச் செயலர் ஷசிகாந் சர்மாவைச் சந்தித்திருந்தார். அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இந்திய பாதுகாப்புச் செயலர் இலங்கை வந்து கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்திப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவ்விருநாடுகளின் இராணுவங்களுக்குமிடையில் நிலவும் நல்லுறவை இந்திய இராணுவத் தளபதியின் விஜயம் மேலும் வலுப்படுத்தும் என்று இலங்கை இராணுவத் தலைமையகம் கருத்து வெளியிட்டிருப்பது, இவ்விரு நாடுகளுக்குமிடையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இறுக்கமான இராணுவ உறவுக்குக் கோடி காட்டி நிற்கிறது.

தமிழ்நாட்டின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தற்போதும் இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 820 இலங்கைப் படையினர் இந்தியாவின் பல்வேறு முகாம்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த ஆண்டு 870 படையினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதேசமயம், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட நான்கு இந்திய இராணுவ அதிகாரிகள் பயங்கரவாத தடுப்பு யுத்தம், கெரில்லா யுத்தம் ஆகியவற்றில் பயிற்சிபெற்று வருகிறார்கள். யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் இவ்விரு துறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட சிறந்த இராணுவத்தைத் தான் கொண்டிருப்பதாக இலங்கை மார்தட்டி வருகிறது.

இதனிடையே, கடந்த செப்ரெம்பரில் இலங்கை வந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை அரச உயர்மட்டத்துடன் முக்கிய பேச்சுகளை நடத்தி இருந்தார். அதேபோன்று தற்பொழுது இந்திய இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இலங்கையுடன் முரண்பட்டுக் கொண்டால், இலங்கை சீனாப் பக்கம் முற்றாகச் சாய்ந்து விடும் என்று இந்தியா அஞ்சுகிறது. அந்த அச்சம் காரணமாக இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை பேணிவர இந்தியா விரும்புகிறது.

மொத்தத்தில், தமிழ் மக்களின் இன்றைய பிரச்சினையில் இந்தியா நீதியாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளும் என்ற நிலையே தோற்றுவிக்கப்படுகிறது. சீனாவின் முத்துச்சர வியூகம் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைவதால், இலங்கையுடன் மிக நெருக்கமான உறவுகளை வைத்துக்கொள்ளவே இந்தியா முயற்சி செய்யும்.

இலங்கையை எதிர்த்துச் செயற்பட இயலாத நிலைமை இந்தியாவுக்கு ஏற்படும் நிலையில், தமிழ் மக்கள் இந்தியாவிடமிருந்து நீதி, நியாயத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இப்பத்தியில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டது போன்று, தென்மாநிலங்களிலும், வடமாநிலங்களில் சொற்ப அளவிலும் ஈழத் தமிழரின் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற ஆதரவு நிலையை இந்திய மத்திய அரசு கருத்தில் கொள்ளாது என்பது மேலும் ஊர்ஜிதமாகும் நிலையே தென்படுகிறது.

# சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் உறுப்பினர்களை வழிமறித்து ஆர்ப்பாட்டம்

## கொடிகாமம் சந்தையிலுள்ள மலக்குழி கழிவு நீர் வெளியேறி வீதியில் தேங்குவதே காரணம்

கொடிகாமம்,டிசெ.21

சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாடியிலிருந்து இறங்க விடாமல் தடுத்து கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

பிரதேச சபையின் விசேட கூட்டம் நேற்று பிரதேச சபை மேல்மாடியில் இடம்பெற்றது. கூட்டம் முடிந்து வெளியே வர முயன்ற தலைவரையும் உறுப்பினர்களையும் கீழே இறங்க விடாமல் தடுத்து போராட்டம் நடத்தினர்.

கொடிகாமம் சந்தையில் உள்ள மலகூடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் அருகில் உள்ள வீதியில்வெள்ளமாககாணப்படுகிறது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. அதனைப் புனரமைத்துத் தருமாறு வர்த்தகர்களும், பொது மக்களும் பல தடவைகள் கோரியுள்ளனர்.

அதற்குத் தீர்வு கிடைக்காத நிலையில் நேற்றுக் காலை சிறுவன் ஒருவன் அந்த கழிவுநீர் தேங்கியுள்ள பகுதிக்குள் வீழ்ந்துள்ளான்.

இதனால் ஆத்திரமுற்ற வர்த்தகர்களும், பொதுமக்களும் நேற்று பிரதேசசபை கூட்டம் நடைபெறுவதை அறிந்து தலைவரையும் உறுப்பினர்களையும் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கடிதம் மூலம் கேட்டிருந்தனர். கூட்டம் முடியும் வரை வெளியில் காத்திருந்தனர்.

இந்தக் கடிதம் பற்றி கூட்டத்தில் ஆராயப்படாமல் கூட்டம் முடிவுற்றதாலும் தலைவர், உறுப்பினர்களைச் சந்திக்க திங்கட்கிழமை வருமாறும் அறிவித்ததாலும் ஆத்திரமடைந்த வர்த்தகர்களும் பொதுமக்களும் மாடிப்படிகளை வழிமறித்து மலகூடத்தை உடனடியாக திருத்தித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைவர் மலகூடத்தை திருத்துவதற்கு ஒரு வார கால அவகாசம் கோரிய போதிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அதற்கு இணங்கவில்லை. வாக்குவாதம் அதிகரித்தது.

இதன்பின்னர் நிலைமை மோசமடையவே சபை உறுப்பினர்கள் மக்களின் கோரிக்கையைப் பொறுப்பெடுத்து தற்காலிக ஏற்பாடுகள் மேற்கொள்வதாக கூறினர். இதனை அடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை சந்தையில் உள்ள மலகூடத்தை பார்வையிடுமாறு மக்கள் கோரிக்கை விடுத்த போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எவரும் செவிசாய்க்கவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவர் மலகூடத்தைச் சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக வர்த்தகர்களுக்கு உறுதியளித்தனர்.

உடைந்து போயுள்ள குழாயை திருத்த மதிப்பீடு தயாரித்து அனுமதி பெற வேண்டுமா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். (ம)

# வடக்கில் 16 உதவி அரச அதிபர் பிரிவுகள் பிரதேச செயலர் பணிமனைகளாகின்றன

கொழும்பு,டிசெ.21

வடக்கிலுள்ள 16 உதவி அரச அதிபர் பணிமனைகளை பிரதேச செயலர் பணிமனைகளாக மாற்றுவதற்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகங்களுக்கு உரிய இந்த உதவி அரச அதிபர் பணிமனைகள் இவ்வாறு பிரதேச செயலர் பணிமனைகளாக மாற்றப்படவுள்ளன.

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த மாற்றம் நிகழ்த்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்னவின் பணிப்பின் பேரில் வடக்கின் பிரதேச நிர்வாகத்தைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இந்த மாற்றத்துடன் நாட்டிலுள்ள பிரதேச செயலர் பணிமனைகளின் எண்ணிக்கை 330 ஆக உயர்வடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

# மதுசாரத்துக்கு எதிரான இளைஞர் அணி மாநாடு

யாழ்ப்பாணம்,டிசெ.21

'ஹெல்த் லங்கா' மற்றும் இளைஞர்களுக்கான அமைப்பு என்பன இணைந்து மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி மாநாட்டை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடத்தவுள்ளன.

'ஹெல்த் லங்கா' மற்றும் இளைஞர்களுக்கான தேசிய சபையின் உபதலைவர் தே.பிறேம்ராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பாரம்பரிய மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிஹேரா கௌரவ விருந்தினராகவும் யாழ். இராணுவ அதிகாரி ஜே.ஆர். ஜெயவீர, டபிள்யூ.கே.பிரியந்த, பிராந்திய வைத்திய அதிகாரி ஏ.ஈ.ஞானசோதி, யாழ்.மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சோதிநாதன், நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மதுசாரம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 150 இளைஞர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ம-13)

# டெங்கு நோயாளர் இந்த ஆண்டே அதிகரிப்பு

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது டெங்குக் காய்ச்சல் நோயாளர்கள் இந்த ஆண்டிலேயே அதிகரித்துக் காணப்படுகின்றனர் என்று கொழும்பு உயிர் கொல்லி நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கிறது.

இதுவரையில் 2009 ஆம் ஆண்டிலேயே அதிகளவிலான டெங்குக் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகியிருந்தது.

34 ஆயிரமாக இந்தப் பதிவு இருந்தது. எவ்வாறான போதிலும், இந்த ஆண்டில் இதுவரையிலும் டெங்குக் காய்ச்சல் நோயாளர்கள் 41 ஆயிரம் பேர் வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று உயிர்க் கொல்லி நோய் ஆய்வுப் பிரிவின் அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது.

இந்த நிலைப்பாடு சம்பந்தமாக கருத்து வெளிப்படுத்துகையில்:-

இந்த ஆண்டில் நிகழ்ந்துள்ள டெங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட தகவல்கள் தமது நிறுவனத்தில் இல்லாதிருப்பதாக கொழும்பு உயிர்க் கொல்லி நோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பபாபலிஹவடன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தில் டெங்குக் காய்ச்சல் நோயாளர்கள் 3 ஆயிரத்து 67 பேரும், நவம்பர் மாதத்தில் மூவாயிரத்து 206 பேரும், டிசெம்பர் மாதத்தில் கடந்த இரண்டு வார காலத்துள் ஆயிரத்து 500 நோயாளர்கள் என்றவாறும் பதிவு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-22)

# உள்ளூராட்சி சபைகளின் ஆளணி விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

வட மாகாண உள்ளூராட்சி சபைகளின் ஆளணி பற்றிய விவரங்கள் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் உள்ளூராட்சி சேவைக்குள் இணைக்கப்பட்டுள்ளதாக ஆளணி விவரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு அந்தந்த பதவிக்குரிய சேவைப் பிரமாண குறிப்புகளின் பிரகாரம் நியமனங்கள் வழங்கப்படும் என்றும், அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷமிகளால் சேதமாக்கப்படும் வவுனியா வீதி விளக்குகள்

வேப்பங்குளம்,டிசெ.21

வவுனியாவிலுள்ள கிராம வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டு வருவதாக மக்கள் கவலையும், விசனமும் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் முயற்சியில் வவுனியாவிலுள்ள பல கிராம வீதிகளில் வீதி விளக்குகள் இடப்பட்டன. இதனால் கிராம மக்கள் இரவு வேளைகளில் சிரமமின்றி தமது போக்குவரத்தை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் சில நாள்களுக்குள் சில விசமிகள் அவற்றைச் சேதப்படுத்தியுள்ளனர். தற்போதும் இவை சேதமாக்கப்பட்டு வருகின்றன. இதனால் கிராம வீதிகள் இரவு வேளைகளில் மீண்டும் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதனால் கிராம மக்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கோயிற்குளம், உமா மகேஸ்வரன் வீதி, வேப்பங்குளம், கல்நாட்டிய குளம் ஆகிய பகுதிகளில் வீதி விளக்குகள் சேதப்பட்டுள் ளன.

கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வீதி விளக்குகளைப் பொருத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சமூக விரோதச் செயலில் ஈடுபடும் ஒரு சிலர் அவற்றைச் சீருலைத்து வருவதாக பிரதேச சபையினரும், பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றனர். (க-421)

## ஆனந்தபுரத்தில் 136 இந்திய வீடுகள்

புதுக்குடியிருப்பு,டிசெ.21

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராம சேவகர் பிரிவில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது 136 நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையால் இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் பல முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் தற்போது 220 குடும்பங்கள் மீளக் குடியர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தற் காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்கள் அண்மையில் பெய்த காற்றுடன் கூடிய கடும் மழையினால் பெரும் இடர்களை எதிர் நோக்கியிருந்தனர். இதனை அடுத்து இந்தப் பகுதிக்கு முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக 136 நிரந்தர வீடுகளை அமைப்பதற்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள குடும்பங்கள் தவிர்ந்த எஞ்சிய குடும்பங்களுக்கு அடுத்த கட்டமாக நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என அந்தப் பகுதி கிராம சேவகர் தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதியில் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவி யுடன் சுமார் 61 தற்காலிக வீடுள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (த-400)

## பிரதேச செயலக ஊழியருக்கு மருத்துவப் பரிசோதனைகள்

### வவுனியாவில் நடவடிக்கை

வவுனியா, டிசெ. 21

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலக ஊழியர்களை பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கையை வவுனியா சுகாதார திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களிடம் இரத்தப் பரிசோதனை, உடல் நிறை, உடல் உயரம், உடல் அமுக்கம், உள நிலைகள் தொடர்பான பரிசோதனைகளை வவுனியா சுகாதார திணைக்களத்தினர் மேற்கொள்வதன் மூலம் உடல் சுகாதாரத்தை அரச ஊழியர்கள் மத்தியில் முதற் கட்டமாகப் பேணுவதற்கான முன்மாதிரி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவவுனியா சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும் வவுனியாவில் கடமையாற்றும் அரச ஊழியர்களிடமும் சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தொற்று நோய்கள், தொற்றாத நோய்கள் உட்பட பல்வேறு சுகாதாரப் பழக்க வழக்கங்கள் தொடர்பாகப் பாடசாலை மற்றும் கிராமப் புறங்களில் விழிப்புணர்வு ஊட்டும் செயற்றிட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் இதற்குரிய வேலைத் திட்டங்களை வைத்தியர்கள், சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (த-402)

## வவுனியா - கொழும்பு ரயில் சேவை வழமைக்கு

வவுனியா, டிசெ. 21

வவுனியாவில் இருந்து ரயில் சேவைகள் அனைத்தும் நேற்று முன்தினம் முதல் வழமைக்கு திரும்பியுள்ளன என வவுனியா ரயில் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து மூன்று வேளைகளிலும் புறப்பட்டுச் செல்லும் ரயில்கள் எதுவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மழை, காற்று காரணமாகவும் ரயில் தண்டவாளப் பாதைகள் சீரற்ற நிலையிலும் இருந்ததால் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த மூன்று நாள்களாக ரயில் பயணிகள் பலரும் ரயில் சேவை இடம்பெறாமையால் வவுனியாவில் இருந்து கொழும்பு, கண்டி பகுதிகளுக்கு தனியார் மற்றும் அரச பஸ்களில் பயணம் செய்துவருகின்றனர். இதனால் பஸ்களில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

காலநிலை ஓரளவு சீரடைந்துள்ளதாகவும் தண்டவாளங்கள் சீரமைப்புச் செய்யப்பட்டு உரிய சமிக்ஞைகள் திருத்தியமைக்கப்பட்டதாலும் ரயில்சேவைகள்வழமைக்குத் திரும்பியுள்ளன. (த-402)

# காட்டு யானைகள் அட்டகாசம் வவுனியா விவசாயிகள் பாதிப்பு

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வவுனியா, டிசெ. 21

வவுனியா மாவட்டக் காடுகளில் காட்டு யானைகளின் வரவினால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் மக்கள் முறையீடு செய்துள்ளனர்.

தென்னிலங்கையில் கட்டுக்கு அடங்காத யானைகளின் அட்டகாசத்தால் அந்தப் பகுதி மக்கள், அங்குள்ள அதிகாரிகளிடம் முறையீடு செய்ததையடுத்து அதிகாரிகளின் உதவியுடன் ஏ-9 வீதியூடாக வாகனங்களில் கொண்டு வரப்பட்ட இந்த யானைகள் வன்னியை அண்மித்த காடுகள் மற்றும் வவுனியா மாவட்டக் காடுகளில் விடப்பட்டன.

இதனையடுத்துக் காடுகளுக்கு அருகில் உள்ள வீடுகளுக்கும், விவசாய நிலங்களுக்குள்ளும் சென்ற இந்த யானைகள் பயிர்களை நாசம் செய்ததுடன், பொது மக்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுத்து வருவதனால் தினமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

திட்டமிட்டுத் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கிலேயே யானைகள் காடுகளில் விடப்பட்டுள்ளதாகவும், இராணுவ ஆக்கிரமிப்பு, மிருக வதைகள் என்ற பெயரில் தமிழினத்தை அரசு அடக்கவே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் முறையீடு செய்துள்ளனர்.

இந்த முறையீட்டை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்குறிப்பிட்ட பிரச்சினையை வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்ததுடன் இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் சுட்டிக் காட்டவுள்ளதாகக் கூறினார்.

இதுதொடர்பாக வனவிலங்குகளுக்குப் பொறுப்பான, வனவிலங்கு அதிகார சபையினரோ, சூழல் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சினரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (த-402)

## வவுனியாவில் பயணிகளிடம் கூடிய ஓட்டோ கட்டணம்

வவுனியா, டிசெ. 21

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகள் பயணிகளிடம் கூடிய பணம் அறவிடுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரப்பகுதியிலிருந்து வேப்பங்குளம் பகுதிவரை பயணம் செய்யும் பயணிகளிடம் 150 ரூபா கட்டணமாக அறவிடும் ஓட்டோச் சாரதிகள் அதிலிருந்து சில மீற்றர் தூரம் செல்வதற்கு 250 ரூபாவை அறவிடுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பல பகுதிகளில் குறைந்த தூரம் பயணம் செய்யும் பயணிகளிடம் அதிகளவான பணத்தை அறவிடுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை சில ஓட்டோச் சாரதிகள் குறைந்த கட்டணங்களையே அறவிடுவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் சில ஓட்டோச் சாரதிகள் பயணிகளிடம் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாகவும், வயது முதிர்ந்த பெரியோர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கால் ஊனமுற்ற முதியவர் ஒருவர் வவுனியா நகரிலிருந்து வேப்பங்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்கு ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். அவரை ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி மழை பெய்வதைக் காரணம் காட்டி முதியவரை வீதியில் இறக்கி விட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பறந்துவிட்டார்.

கால் நடக்க முடியாத நிலையில் நின்ற முதியவரை அவதானித்த அந்த வீதியால் சென்ற ஒருவர் அவரைத் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று வீட்டில் விட்டுள்ளார்.

பணத்தைப் பறிப்பதிலேயே குறியாக இருக்கும் இத்தகையவர்கள் பயணிகளின் உடல் நிலையை, மன நிலையை அறிந்து செயற்பட்டால் பெரும் உதவியாக இருக்கும் என அந்த முதியவரை ஏற்றிச் சென்றவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே வவுனியா மாவட்ட ஓட்டோச் சங்கத்தினர் இந்த விடயங்களை அவதானித்துப் பயணிகளிடம் சீரான கட்டணங்களை அறவிடுவதற்கும், பயணிகளிடம் பணிவாக நடந்து கொள்வதற்கும் ஓட்டோச் சாரதிகள் வழிப்படுத்த வேண்டும் எனப் பயணிகள் கேட்டுக் கொள்கிறார்கள். (த-41)

## கிளிநொச்சி கல்வி வலயம் பிரிக்கப்படாமையால் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.21

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என நீண்ட நாள்களாக விடுக்கப்படும் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படாமையால் கல்வி அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வலயத்தின் கீழ் 105 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 97 பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் குறித்த பாடசாலைகளின் வளநிலைகளைக் கவனித்து கல்வி அபிவிருத்தி மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகிறது.

ஏற்கனவே கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு பரந்தனில் ஒரு கல்வி வலயமும் அக்கராயனில் ஒரு கல்வி வலயமும் அமைக்கப்படவேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதன் காரணமாக தூரக் கிராமங்களில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தியில் பாதிக்கப்படுகின்றன என்றும் இந்தக் கிராமங்களில் உள்ள பெற்றோர், ஆசிரியர்களின் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் மாணவர்களின் எதிர்காலக் கல்வி வளர்ச்சியை கவனத்தில் எடுத்தும் குறித்த கல்வி வலயத்தைப் பிரித்து வினைத்திறனாகச் செயற்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட கல்வியியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஐ-18)

## இறந்த மாடுகளால் சுகாதாரச் சீர்கேடு

வவுனியா, டிசெ. 21

வவுனியா ஏ-9 வீதியில் நீண்ட நாள்களாக இறந்து கிடக்கும் மாடுகளால் சுகாதார ரீதியிலான சிக்கலைப் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

ஏ-9 வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதேவேளை விபத்துக்களின் போது மாடுகள் வீதிகளில் இறக்கின்றன. இதனால் அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது.

**விபத்துக்களின் போது மாடுகள் வீதிகளில் இறக்கின்றன. இதனால் அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாடுகளுக்குரிய உரிமையாளர்களோ, அருகில் உள்ளவர்களோ, நகர சபையினரோ, பிரதேச சபையினரோ இறந்து கிடக்கும் மாடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏ-9 வீதி ஓமந்தைத் தண்டவாளத்துக்குச் சற்று அருகே உள்ள மலசலகூடக் குழியொன்று சில மாதங்களாக மூடாத நிலையில் இருப்பதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் நுளம்பின் பெருக்கத்தால் சுகாதார ரீதியிலான பிரச்சினையை அந்தப்பகுதி மக்கள் எதிர்நோக்கி யுள்ளதாகத் தெரிவித்துள் ளனர். (த-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் இறங்குதுறை புனரமைப்புப் பணிகளில் துறைமுக கடல் அணை நிர்மாணிப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இரண்டு கனரக வாகனங்களின் உதவியுடன் பெரிய கருங்கற்களை, கடலில் உள்ள அணைக்கட்டில் அடுக்கி பொருத்தும் பணிகளின் பெரும்பகுதி நிறைவடைந்துள்ளது. இந்த புனரமைப்புப் பணிகள் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ந-135)

# தரம் ஒன்றுக்கு மாணவரை இணைத்தாலே தரம் 5 மாணவர்களுக்கு விடுகைப் பத்திரம்

## பெற்றோர் திண்டாட்டம்

தென்மராட்சி, டிசெ.21

தரம் ஒன்றுக்கு பாடசாலையில் ஒருவரை இணைத்தால் தான் ஐந்தாம் தரத்திலிருந்து வகுப்பேற்றப்பட்ட மாணவருக்கு விடுகைப் பத்திரம் வழங்கப்படும் என்று பாடசாலை அதிபரின் கண்டிப்பான பணிப்பால் பெற்றோர் செய்வதறியாது திண்டாடுகின்றனர்.

இந்தச் சம்பவம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தப்பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம்5 வரையான வகுப்புகளே உள்ளன. 2012 ஆம் ஆண்டு ஆண்டிறுதிப் பரீட்சையில் வகுப்பேற்றப்பட்ட மாணவர்களை வேறு பாடசாலையில் இணைப்பதற்கு விடுகைப் பத்திரம் வழங்குமாறு கோரிய போது தரம் ஒன்றுக்கு ஒரு மாணவரை இணைத்துவிட்டு விடுகைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கடுமையான தொனியில் உத்தரவிட்டுள்ளார் என பெற்றோர் முறைப்படுகின்றனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் செய்வதறியாது திண்டாடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பெற்றோர்களுக்கும் இதே அறிவிப்பு அதிபரால் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## டெங்கு விழிப்புணர்வு

தென்மராட்சி, டிசெ. 21

வரணிப் பிரதேசத்தில் உள்ள தாவளை இயற்றாலை, கரம்பைக் குறிச்சி, வரணி- இயற்றாலை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய அபிவிருத்தி நிதியை நிறுவன அனுசரணையுடன் நிறுவன சிறுவர் கழகத் தொண்டர்கள், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

பரிசோதனையின் போது டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான பொருள்கள் குடியிருப்புகளில் காணப்பட்ட போதிலும், குடியிருப்பாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அடுத்த பரிசோதனையின் போது, இந்தக் குடியிருப்புகளில் இவ்வாறான பொருள்கள் காணப்படின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# சாரதி அனுமதி இல்லாதவர்களாலேயே விபத்துகள் குடாநாட்டில் அதிகரிப்பு

## வைத்தியசாலை ஆய்வுகளில் தகவல்

தென்மராட்சி, டிசெ. 21

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக வாகன விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வாகன விபத்துக்களில் காயமடைவோரில் பெரும்பாலானோர் அதனைச் செலுத்தி வருபவர்களாக உள்ளனர்.

வாகன விபத்துக்களில் காயமடைவோரிடையே வைத்தியசாலைகளில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி பலர் சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாதவர்கள் எனவும் பயிற்சியில் ஈடுபடும் போது விபத்துகளை சந்தித்தவர்கள் எனவும் அறிய முடிகிறது.

பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டால் வாகன விபத்துக்களை ஓரளவு குறைக்க முடியும்

பயிற்சியில் ஈடுபடுவோர் அதற்கென ஒரு பகுதியை ஒதுக்கி அந்த இடத்தில் பயிற்சிக்குரிய தலைக் கீவசம், 'எல்'போர்ட் போன்றவற்றுடன் பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்.

உள்ளூர் வீதிகளில் பயிற்சிகளை மேற்கொள்வதாலேயே விபத்துக்கள் இடம்பெறுகின்றன. உள்ளூர் வீதிகளில் நடந்து செல்லும் பொதுமக்கள் இவ்வாறான பயிற்சியாளர்களால் பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால் வீதி விபத்துக்களில் காயமடையும் மோட்டார் சைக்கிளோட்டிகள், வாகனம் செலுத்துவோர் ஆகியோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா என்று பொலிஸார் விசாரணை நடத்தி, இல்லாதவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

பொலிஸார் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் வாகன விபத்துக்களை ஓரளவு குறைக்க முடியும் என்று பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர். (ம-9)

# வீதியோரம் கழிவுப் பொதிகள் அகற்றப்படாமையால் சீர்கேடு

தென்மராட்சி கிழக்கின் பல சந்திகளிலும் வீதியோரங்களிலும் உரப்பைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகள் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை அகற்றப்படவில்லை.

இதனால், அந்தப் பகுதி மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகும் அவல நிலை காணப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அழியும், அழியாத குப்பைகளை தனித்தனியாக உரப்பைகளில் போட்டு குப்பை அகற்றும் வாகனங்கள் வரும் வீதிகளில் வைக்குமாறு ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதனால் மக்கள் தமது குடியிருப்புகளில் காணப்பட்ட கழிவுப் பொருள்களை உரப்பைகளில் இட்டு வீதியோரங்களில் வைத்தனர்.

ஆனால், இதுவரை குப்பைகள் அகற்றப்படாமையால் கால்நடைகள் மற்றும் பறவைகளால் உரப்பைகள் சேதமாக்கப்பட்டு குப்பைகள் வீதியெங்கும் சிதறிக் காணப்படுகின்றன. கச்சாய், உசன், அல்லாரை, கெற்பேலி போன்ற பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள குப்பைகளே இன்னமும் அகற்றப்படாதுள்ளன.

தொடர்ந்து ஓர் இடத்தில் வைக்கப்பட்டுள்ள குப்பைகளால் தொற்று நோய்கள் ஏற்படலாமென மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; டெங்கு ஒழிப்பு செயற் பாடுகள் நடைபெற்ற போது பிரதேசசபையின் கழிவகற்றும் வாகனங்கள் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் சகல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறித்த இடங்களில் குப்பைகள் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக இதுவரை எமக்கு எவரும் முறைப்பாடு செய்யவில்லை. விரைவில் அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ம-9)

## கழிவுநாற்றத்தால் மூக்கைப் பொத்தியவாறு பயணிக்கும் மக்கள்

கொடிகாமம், டிசெ. 21

கொடிகாமம் சந்தை வீதியில் பயணிப்போர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

கொடிகாமம் சந்தைக்குள் உள்ள பொதுமலகூட கழிவு செல்லும் குழாய் உடைந்துள்ளது. இதனால் அதனூடாக வெளியேறும் கழிவு வீதியில் வழிந்தோடுவதால் பெரும் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் சந்தை வீதியைப் பயன்படுத்துவோர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையில் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை சீர்செய்யப்படவில்லை என்று அந்த வீதியில் உள்ள வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ம-9)

# இராமாவில் காணி இன்று கையளிப்பு

தென்மராட்சி, டிசெ.21

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்த காணிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவற்றின் உரிமையாளர்களிடம் வைபவ ரீதியாகக் கையளிக்கப்படவுள்ளன.

523 ஆவது படையணி, 11 ஆவது இலகு காலாட் படை ஆகியவற்றின் ஏற்பாட்டில் 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

60 பேருக்குச் சொந்தமான நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்தக் காணிகள் நீண்ட காலமாகப் படையினரால் பயன்படுத்தப்பட்டு, பின்னர் அதனுள் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது.

நலன்புரி நிலையம் அங்கிருந்து மூடப்பட்ட பின்னர் அவற்றில் படையினர் முகாமிட்டிருந்தனர்.

தமது காணிகளை மீட்டுத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டிருந்தனர்.

இந்த நிலையில் தமது காணிகளை மீட்டுத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டிருந்தனர்.

ஆணைக் குழு பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களை அடுத்துக் காணிகள் இன்றைய தினம் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# அடிக்கடி விபத்துக்களை காணும் சுன்னாகம் 'ஜெட்மோட்டர்ஸ்' பகுதி

## வீதி வேலைகள் முடிவுறாமையே காரணம்



யாழ்ப்பாணம், டிசெ.21

காங்கேசன் துறை வீதியின் அகலிப்புப் பணிகள் முடிவுறாமையால் சுன்னாகம் ஜெட்மோட்டர்ஸ் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காங்கேசன் துறை வீதியின் அகலிப்புப் பணிகள் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற போது, ஜெட்மோட்டர்ஸ் பகுதியில் வீட்டு வளவொன்றில் அமைந்துள்ள கிணறு ஒன்று வீதி எல்லைக்குள் வந்துள்ளது.

இதனை அடுத்து கிணற்று உரிமையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் வேறொரு இடத்தில் புதிய தொரு கிணறு வெட்டித் தருவதாக வீதி வேலைகளுக்குப் பொறுப்பானவர்களால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

புதிய கிணறு அமைத்த பின்னர் இப்போதுள்ள கிணற்றை மூடி விட்டு அரைகுறை நிலையிலிருக்கும் வீதி வேலைகளை முடிவுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை புதிய கிணறும் அமைக்கப்படவில்லை. வீதி வேலைகளும் முடிவுறுத்தப்படவில்லை. தற்போது கிணற்றைச் சுற்றி வீதியோரமாக வெற்றுத் தகரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த இடத்தில் இதுவரை சுமார் 15 விபத்துச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த இடத்தில் அரைகுறை நிலையிலிருக்கும் வீதி வேலைகளைப் பூர்த்தி செய்து விபத்துக்களைத் தடுப்பதற்கு ஆவன செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மேலும் ஒரு தீவிரவாதி காஷ்மீரில் சுட்டுக்கொலை

காஷ்மீரில் லஷ்கர்- இ-தொய்பா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த மேலும் ஒருவரை பாதுகாப்புப் படையினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுட்டுக் கொன்றனர்.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். வடக்குகாஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பதுங்கியுள்ள மேலும் 2 தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் தீவிரமாக தேடிவருகின்றனர். இந்த நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் இருவர் காயமடைந்தனர். முன்னதாக வீடு ஒன்றில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்களிடம் இருந்து துப்பாக்கி, வெடிகுண்டு உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டன.

# மீண்டும் குஜராத் முதல்வரானார் மோடி

## பா.ஜ.க.115–காங்.65 தொகுதிகளில் வெற்றி

அகமதாபாத், டிசெ.21


குஜராத் மாநில சட்டசபைத் தேர்தலில் மீண்டும் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றுள்ளது. குஜராத்தில் 4 ஆவது முறையாக நரேந்திர மோடி முதல்வராகப் பொறுப்பேற்க உள்ளார். ஆனால் பா.ஜ.க. வசம் இருந்த இமாச்சலப்பிரதேசத்தை காங்கிரஸ் கட்சி கைப்பற்றி இருக்கிறது.

குஜராத் சட்டசபைக்கு கடந்த வாரம் இரண்டு கட்டமாகத் தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள 182 தொகுதிகளில் முதல்கட்டமாக கடந்த 13 ஆம் திகதி 87 தொகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக 17 ஆம் திகதி 95 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. முதல்கட்டத் தேர்தலில் 68 சதவீத வாக்குகளும் இரண்டாம் கட்டத் தேர்தலில் 71 சதவீத வாக்குகளும் பதிவாகின.

குஜராத் மாநிலத்தின் 182 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்றுக் காலை ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளும் சம எண்ணிக்கையில் இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் பின்னர் கணிசமான எண்ணிக்கையில் பா.ஜ.க. முன்னிலை வகித்து ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையையும் தாண்டியது.

115 தொகுதிகளில் பா.ஜ., முன்னிலையில் இருக்கிறது. 65 தொகுதிகளில் காங்கிரஸ் முன்னிலையில் உள்ளது. இதனால் அந்த மாநி லத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கிறது. குஜராத் மாநிலத்தின் முதல்வராக 4 ஆவது முறையாக நரேந்திரமோடி பொறுப்பேற்க உள்ளார். 2001 ஆம் ஆண்டு கேசுபாய் பட்டேல் நீக்கப்பட்டு மோடி முதல்வராக்கப்பட்டார்.

பின்னர் 2002, 2007ஆம் ஆண்டு தேர்தல் களிலும்



**மோடி வெற்றி பெற்று முதல்வரானார். தற்போது 4 ஆவது முறையாக மீண்டும் மோடி வெற்றி பெற்றுள்ளார். தமது வெற்றி குறித்து டுவிட்டரில் கருத்துத் தெரி வித்துள்ள** நரேந்திர மோடி,

''நாம் பின்னோக்கி பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அளவில்லாத சக்தி, அளவில்லாத துணிவு மற்றும் அளவில்லாத பொறுமையே எமக்குத் தேவை'' என்று கூறியுள்ளார். இதேபோல இமாச்சலப் பிரதேசத்தில் முதல் சில மணி நேரங்களில் ஆளும் பா.ஜ.கவும் காங்கிரஸ் கட்சியும் சம எண்ணிக்கையில் இருந்து வந்தன.

பின்னர் காங்கிரஸ் கட்சி கணிசமான தொகுதி களில் முன்னிலை வகித்து ஆட்சியைப் பிடிக்கும் நிலைக்கு முன்னேறியது. பா.ஜ.க. வசம் இருந்த இமாச் சலப் பிரதேசம் இப்போது காங்கிரஸ் வசம் சென்றிருப் பதால் தான் அந்தக்கட்சிக்கு உற்சாகம் கிடைத்திருக்கிறது. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இமாச்சல பா.ஜ.க. தலைவர் பிரேம்குமார் துமல், மக்களின் தீர்ப்பை ஏற்கிறோம் என்றார்.

இரு மாநிலத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், இரு மாநிலங் களிலும் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்றார். (வ)

## கட்டடம் இடிந்து விழுந்ததில் 13 பேர் சாவு



மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

புனே- வாகோலி என்னுமிடத்தில் ஆயுர்வேத கல்லூரி கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்ட டத்தின் 4 ஆவது மாடியின் கட்டுமானப் பணியில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் அவர்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது, ஒரு சிமெந்து சிலாப் திடீரென இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளில் சிக்கி 13 தொழிலாளர்கள் உடல் நசுங்கி உயிரிழந்தனர். (வ)



மேற்கு வங்கத்தின் சாந்திநிகேதனிலுள்ள விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் 150ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியின் ஆரம்ப விழாவுக்கு வந்த ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அருகில் மேற்கு வங்க ஆளுநர் எம்.கே. நாராயணன் .

## தரமற்ற பொருள்கள் இறக்குமதி சீனாவுக்கு எதிராக நடவடிக்கை

### இந்திய வர்த்தக அமைச்சர் தகவல்

டில்லி, டிசெ.21

இந்தியாவில் தரமற்ற பொருள்களைக் குவிக்கும் சீனாவின் நடவடிக்கையைத் தடுக்க அரசுக்கு முறைப்பாடு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இறக்குமதியாகும் சீனப் பொருள்களின் தரம் குறித்து, உரிய ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்டால், மத்திய அரசு அதைத் தடுக்கும் என்று மாநிலங்களவையில் வர்த்தகத் துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி தெரிவித்தார்.

தரமற்றப் பொருள்கள் குவிப்பதை எதிர்த்து நடவடிக்கை எடுக்க, உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இந்தியாவுக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொருள் குவிப்பு தடுப்பு வரி, இறக்குமதி கட்டுப்பாடு உள்ளிட்ட பல நடவடிக்கைகள் மூலம் இதை மேற்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## அணு ஆயுதத்தை தாங்கிச் செல்லும் பிருத்வி-2 சோதனை வெற்றி




அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் பிருத்வி-2 சோதனை வெற்றியளித் துள்ளது.

இந்தியா தனது இராணுவத்துக்குத் தேவையான அக்னி மற்றும் பிருத்வி ரக ஏவுகணைகளைத் தயாரித்து சோதனை நடத்தி வருகிறது.

இந்தநிலையில் அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கக்கூடிய வல்லமை வாய்ந்த பிருத்வி-2 ஏவுகணைச் சோதனை நேற்றுக் காலை 9.21 மணிக்கு ஒரிசா மாநில கடற்கரையில் சண்டிப்பூர் அருகே உள்ள பலாசூர் ஏவுகணை தளத்தில் இருந்து ஏவப்பட்டது. இது வெற்றிகரமாக பறந்து சென்றதுடன் சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது 500 - 1000 கிலோ எடையுள்ள அணு ஆயுதங்களை சுமந்தவாறு 350 கி.மீ. தொலைவில் பறந்து சென்று இலக்கை தாக்கக் கூடியது.

இதற்கு முன்பு, பிருத்வி ஏவுகணைச் சோதனை கடந்த ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி இதே இடத்தில் நடந்தது. 2 மாதங்களில் மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. (வ)

## ஹசாரேக்கு கலாம் ஆதரவு

டில்லி, டிசெ.21

அன்னா ஹசாரே வழியை பின்பற்றினால், ஊழலுக்கு எதிராக வலுவான சட்டம் வருவது உறுதி என்று கலாம் தெரிவித்தார். அதே நேரத்தில் நாட்டில் அப்படி சட்டம் வந்தால் ஒரு சிறை யில்கூட இடம் இல்லாமல் நிரம்பி வழியும் என்று கலாம் குறிப்பிட்டார்.

டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசுகையில் மேலும்தெரிவித்ததாவது:-

கடந்த 6 மாதங்களாக இளைஞர்களிடத்தில் ஒரு மாற்றத்தை பார்க்கிறேன்.

இளைஞர்கள் தற்போது நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்ல தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்று நம்பிக்கையுடன் சொல்கி றாங்கள்.

இதன்மூலம் வருகிற 2020 ஆம் ஆண்டுக்குள், பொருளா



தார ரீதியில் இந்தியா வளர்ச்சியடைவது நிச்சயம்.

பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்களையும் சென்றடையும் வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். நாட்டிலுள்ள 6 இலட்சம் கிராமங்களில் வசிக்கும் 70 கோடி மக்களுக்கு தரமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் - என்றார்.

## 50 வருடங்களில் சென்னை கடலில் மூழ்கும் அபாயம்

### நிபுணர்கள் எச்சரிக்கை

சென்னை, டிசெ.21

புவியின் வெப்பம் அதிகரித்து வருவதால் இன்னும் 50 ஆண்டுகளில் சென்னை உட்பட தமிழகத்தின் கடற் கரையோரப் பகுதிகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா கடந்த இரண்டு தினங்களாக சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் தமிழகத்திலிருந்து அதிகமான அறிவியல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பேசினர். அப்போது, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 2 டிரில்லியன் தொன் ஐஸ் கட்டிகள் உருகிவிட்டதாகவும், எதிர்காலத் தில் சென்னை உட்பட அதிகமான பகுதிகள் கடலுக்குள் மூழ்க வாய்ப்புள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரித்தனர். குறித்த மாநாட்டின் [illegible] நாளை சனிக்கிழமை அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பினர் பிரதமரிடம் வழங்கவுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றார் 'ஹே'



"தென் கொரியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பார்க் ஹ்யோங் ஹே, தென்கொரியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் பெற்றார்."

சியோல், டிசெ.21

தென் கொரியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பார்க் ஹ்யாங் ஹே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தென்கொரியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

பார்க் ஹ்யாங் ஹே தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஆளும் லிபரல் கட்சியைச் சேர்ந்த மூன் ஜே இன்னை தோற்கடித்தார்.

தற்போது ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டுள்ள பார்க் ஹ்யாங் ஹேயின் தந்தை பார்க் யுங் ஹீ, இராணுவச் சதிப் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்து 18 ஆண்டுகள் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்தார். அவர் 1979 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேர்தலில் வெற்றிபெற்றமை குறித்துக் கருத்துத் தெரிவித்த பார்க் ஹ்யாங் ஹே, 'நாட்டில் ஒரு புதிய தேசிய மகிழ்ச்சிக்கான சகாப்தம் தொடங்கியுள்ளது. எனது வெற்றி எமது நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தும்' என்றார்.

வட கொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளில் இராணுவத் தலைவர்களின் வாரிசுகளே நாட்டை ஆளும் அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்காவில் தொடக்கப் பள்ளியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவர்களின் இறுதிச் சடங்குகளில் பெருந்திரளானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## சீனச் சுரங்க வெடி விபத்து; 6 பேர் சாவு

பீஜிங், டிசெ.21

சீனாவில் ஹுனான் மாகாணத்தில் நியுலான்ஸு நிலக்கரி சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் பெரும் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தின் போது 6 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் இருந்த ஒருவரை காணவில்லை. அவரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

# ஈரான் ஒத்துழைக்காவிடில் இறுதி அஸ்திரம் போர்தான்!

## கடும் தொனியில் எச்சரிக்கிறது அமெரிக்கா



"இந்த விவகாரத்தில் சுமுகமான தீர்வு ஏற்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். ஈரான் தனது முயற்சிகளை நிறுத்தாவிடில், அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை எடுக்க எந்தவிதத்திலும் தயங்காது."

வோஷிங்டன், டிசெ.21

"ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு, அந்த நாட்டுக்கு ஆபத்தானதாகவே முடியும். அதைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். எனினும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், கடைசித் தெரிவாக போர் நடவடிக்கையே அமையும்" - என்று கடும்தொனியில் எச்சரித்துள்ளது அமெரிக்கா.

ஈரான் குறித்து அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் லியோன் பெனட்டா கருத்து வெளியிட்டார். அதன் போதே கடுந்தொனியிலான எச்சரிக்கையும் விடுத்தார். இந்த விடயங்கள் குறித்து அவர் தெரிவிக்கையில்,

"ஈரான் விடயத்தில் அமெரிக்காவும், இஸ்ரேலும் குறிக்கோளுடன் கூடிய ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை இரு நாடுகளுமே விரும்பவில்லை. அமெரிக்கா ஏற்கெனவே தனது நிலையைத் தெளிவுபடுத்தி விட்டது. அதேபோல, இஸ்ரேலும் தனது நிலைப்பாட்டை விளக்கி விட்டது. தற்போதுள்ள பிரச்சினை என்னவெனில் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட வேண்டாமென்று ஈரானை இரு நாடுகளும் எந்த வகையில் வலியுறுத்துவது என்பதுதான்.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச நாடுகள் ஒன்று சேர்ந்துள்ளன. ஈரான் தனது அணுசக்தி திறனை வளர்க்கும் முயற்சியைத் தொடருமானால், பொருளாதார நெருக்கடி, தூதரக ரீதியிலான, ராஜரீகரீதியிலான நெருக்கடிகளை அளிக்க சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன. ஈரான் விடயத்தைக் கையாளும் போது அந்த நாட்டின் மீது போர் தொடுப்பதை கடைசி முயற்சியாகத்தான் எண்ண முடியும்.

ஈரான் விடயத்தில் அவர்களுக்கு அனைத்து வகையான வாய்ப்புகளும் அளிக்கப்படும். எந்தவொரு முயற்சியும் கைவிடப்பட மாட்டாது. இந்த விவகாரத்தில் சுமுகமான தீர்வு ஏற்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். ஈரான் தனது முயற்சிகளை நிறுத்திக் கொள்ளாவிடில், அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை எடுக்க எந்தவிதத்திலும் தயங்காது என்பதையும் தெரிவிக்கிறேன்" - என்று தெரிவித்தார்.

# மெக்சிக்கோவில் சிறை உடைப்பு

## 17 பேர் சாவு; பலர் காயம்



கோமெஸ் பலாசியோ, டிசெ. 21

மெக்சிக்கோவில் இடம்பெற்ற சிறை உடைப்பு முயற்சியில் 17 பேர் உயிரிழந்தனர். கோமெஸ் பலாசியோ நகரில் உள்ள சிறைச்சாலையிலேயே இந்த சிறைஉடைப்பு முயற்சி நடந்துள்ளது.

மெக்சிக்கோ போதைப் பொருளுக்குப் பெயர்போனது. அங்கு சிறைச்சாலையில் உள்ளவர்கள் பெரும்பாலும் போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களே.

இந்தநிலையில் கோமெஸ் பலாசியோ நகரில் உள்ள சிறைச்சாலையை உடைத்துக் கைதிகள் தப்பிச் செல்ல முயன்றனர். இதனால் கைதிகளுக்கும் சிறைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையே நடந்த மோதலில் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட னர்.

மெக்சிக்கோ சிறைச்சாலைகளில் இதுபோன்ற சிறைக்கலவரங்கள் சாதரணமாக நடக்கக்கூடிய ஒன்று. நிரம்பி வழியும் சிறைச்சாலைகளில் கைதிகள் இதுபோன்ற கலவரங்களை உருவாக்கித் தப்பிச் சென்றுவிடுவதும் வழமை.

இதேவேளை, நேற்றுமுன்தினம்தான் சிறை வன்முறைகளைக் கட்டுப்படுத்த புதிய தேசிய பொலிஸ்படை உருவாக்கப்படும் என்று மெக்சிக்கோ ஜனாதிபதி நீட்டோ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளிக்கு ஆய்வு மைய கட்டுப்பாட்டாளராக கனேடியர்

வோஷிங்டன், டிசெ.21

கனேடிய விண்வெளி வீரர் ஹட்பீல்ட் 6 மாதகால விண் பயணமாக இன்று தனது பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

சர்வதேச விண்வெளி மையத்தில் கட்டுப்பாட்டாளராக 6 மாதம் பணியாற்றுவார். விண்வெளி மையத்தின் கட்டுப்பாட்டாளராக இருக்கும் முதல் கனேடியர் என்ற பெருமையையும் கிறிஸ் ஹட்பீல்ட் பெறுகிறார்.

ஏற்கனவே 2001ஆம் ஆண்டில் விண்வெளியில் தங்கியிருந்து திரும்பிய பீல்ட், மீண்டும் விண்வெளி பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2012ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் பராக் ஒபாமா



வோஷிங்டன், டிசெ.21

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை இந்த ஆண்டின் சிறந்த மனிதராக அமெரிக்காவைச் சேர்ந்த பிரபலமான 'ரைம்' பத்திரிகை தெரிவு செய்துள்ளது.

"கலாசார ரீதியாகவும் மக்கள் தொகை ரீதியாகவும் மாறிவரும் அமெரிக்காவின் அடையாளமாகவும் நாட்டின் சிற்பியாகவும் ஒபாமா திகழ்கிறார்' என்று அந்தப் பத்திரிகையின் தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

ஒபாமாவின் படம் இந்தப் பத்திரிகையின் அட்டையில் வெளியாக உள்ளது. ஒபாமாவை ஏற்கெனவே கடந்த 2008இல், ஆண்டின் சிறந்த மனிதராகத் தெரிவு செய்திருந்தது டைம் பத்திரிகை. இப்போது இரண்டாவது முறை தேர்வு செய்யப்பட்டுள்ளார் ஒபாமா. இவ்வாறு இரண்டு தடவைகள் தெரிவு செய்யப்பட்ட 13ஆவது நபர் ஒபாமா என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானைச் சேர்ந்த கல்வி உரிமைப் போராளி மலாலா, எகிப்து அதிபர் முகமது முர்சி, அப்பிள் நிறுவன உரிமையாளர் டிம் 'குக், அணுவெடிப்புச் சோதனையில் ஈடுபட்ட பேபியோலா கியானோட்டி ஆகியோரையும் 2012ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் பட்டத்துக்கு 'ரைம்' பத்திரிகை தேர்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அகதிகளின் குழந்தைகளுக்கே நோபல் பரிசுத் தொகையும்

## ஐரோப்பிய யூனியன் அறிவிப்பு

ஒஸ்லோ, டிசெ.21

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஐரோப்பிய யூனியன், பரிசுத் தொகையை அகதிகளின் குழந்தைகள் நலனுக்காக செலவிட முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஐரோப்பிய யூனியன்தலைவர் ஹெர்மான் வோன் ரோம்பி,

"உலகம் முழுவதிலும் 1.5 கோடி மக்கள் அகதிகளாக உள்ளனர். அகதிகளில் 70 லட்சம் பேர் குழந்தைகள்.

சிரியாவில் நடக்கும் மோதல்களால் இடம்பெயர்ந்த 4000 குழந்தைகள் ஈராக் எல்லையில் உள்ள முகாமில் உள்ளனர். இதே போன்று கொலம்பியாவிலும் 5000 குழந்தைகளும், பாகிஸ்தானில் 3000 குழந்தைகளும் அகதிகளாக உள்ளனர்.

நோபல் பரிசின் மூலம் கிடைக்க பெற்ற தொகையை குழந்தைகளின் நலனுக்காக கொடுக்க உள்ளோம். யுனிசெப் போன்ற நிறுவனங்கள் [illegible]'' - என்று தெரிவித்தார்.

## உலகில் அதிக வயதான நபர்



லண்டன், டிசெ.21

உலகின் வயதான நபராக ஜப்பானைச் சேர்ந்த ஜிரோமோன் கிமுரா (வயது 115) என்பவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானின் கியோடாங்கோ நகரில் வசித்து வருபவர் ஜிரோமோன் கிமுரா. இவர் கடந்த 1897ஆம் ஆண்டு 19ஆம் திகதி பிறந்தார்.

கிமுராவுக்கு 14 பேரக்குழந்தைகள், 25 கொள்ளுப் பேரன், பேர்த்திகள், 13 எள்ளுப் பேரன், பேர்த்திகள் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 புலிகளை கடத்தினாராம் தாய்லாந்து துணைப் பிரதமர்

பாங்கொக், டிசெ.21

100 புலிகளை கடத்தினார் என்று தாய்லாந்து துணை பிரதமர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

தாய்லாந்தின் சிரிராச்சா நகரில் உள்ள ஒரு புலிகள் காப்பகம் சுற்றுலாத்துறைக்கு பெயர் பெற்றது. தற்போது தாய்லாந்து துணைப்பிரதமராக இருப்பவர் புலோட் பரசோப் சுரஸ்வாதி (60). இவர் 2002ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டின் வனப் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த போது, சிரிராச்சா புலிகள் காப்பாகத்தில் இருந்துபோது சட்டவிரோதமாக 100 புலிகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்புதல் அளித்திருந்தார்.

இது தொடர்பாகவே சுரஸ்வாதி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச குற்றம் என்பதால், சீனாவிடம், தாய்லாந்து விளக்கம் கேட்ட போது விளக்கமளிக்க சீனா மறுத்திருந்தது.

# எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக் சிறையில் வழுக்கி விழுந்து காயம்

கெய்ரோ, டிசெ.21

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முபாரக் காயம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறைச்சாலைக் குளியல் அறையில் விழுந்ததாலேயே அவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியால் ஹோஸ்னி முபாரக் பதவி விலகினார். அவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கடந்த ஜூன் மாதம் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கெய்ரோ சிறையில் உள்ள முபாரக் நேற்றுமுன்தினம் சிறை குளியல் அறையில் வழுக்கி விழுந்துள்ளார். அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதால் இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

# உலக அழகியானார் அமெரிக்காவின் கல்போ




நியூயோர்க், டிசெ.21

உலக அழகியாக ஒலிவியா கல்போ தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் உள்ள பிளானட் ஹொலிவுட் கசினோவில் நேற்றுமுன்தினம் உலக அழகி போட்டி நடந்தது.

இந்தப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 89 அழகிகள் கலந்து கொண்டனர்.

இதில் ஒலிவியா கல்போ மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்றார். இவர் மிஸ் அமெரிக்கா பட்டத்தையும் வென்றவராவார். பிலிப்பைன்ஸ் அழகி இரண்டாவது இடத்தையும், வெனிசுலா, அவுஸ்திரேலியா, பிரேசில் அழகிகள் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்தனர்.

# சூடான்வாசிக்கு தலையை வெட்டி மரண தண்டனை!



டோகா, டிசெ.21

சவூதி அரேபியாவில் பொது இடத்தில் வைத்து சூடானைச் சேர்ந்த ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சூடானைச் சேர்ந்த ஒத்தேன் முகமது, சாலா அகமது என்பவருடன் ஏற்பட்ட தர்க்கத்தையடுத்து, சலாவைத் தலையில் அடித்துக் கொலை செய்துள்ளார். இந்த கொலை குற்றத்திற்காக முகமதுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து மெக்கா நகரின் மேற்கு பகுதியில் பொது இடத்தில் வைத்து முகமதுவின் தலையை வெட்டி தண்டனை நிறைவேற்றப் பட்டது. இதேபோன்று கடந்தாண்டு மட்டும் 89 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என சர்வதேச பொதுமன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குதலையை வெட்டி மரண தண்டனை நிறை வேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இவரும் தேடுகிறார் ஒரு மனைவியை!

லண்டன், டிசெ. 21

அமெரிக்காவில் சாண்டி மிக்கோலச் (வயது 82) என்ற முதியவர் ஒரு நல்ல பெண் துணை வேண்டுமெனக் கோரியுள்ளார்.

அதற்கென எழுதப்பட்ட ஓர் அட்டையை தனது கழுத்தில் மாட்டி அவர் விளம்பரப் படுத்தியும் வருகிறார். 40 வயதிற்குள்ளேயே மூன்று திருமணங்கள் செய்து விவாகரத்துப் செய்த மிக்கோலச் வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இப்போது நன்றாக கற்றுக்கொண்டு விட்டதாகவும் கூறுகிறார்.

விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் 60 வயதுக்கு மேலும், புத்தகம் படிப்பவராகவும் மற்றும் நகைச்சுவை உணர்வு உள்ளவராகவும் இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

பொதுவாக 20 அல்லது 25 வயதில்தான் பல காரணங்களுக்காகத் திருமணம் செய்து கொள்ள பெண் தேடுகிறார்கள். ஆனால் எனக்கு தோழமைக்காக 60 வயதுக்கு மேலுள்ள ஒரு துணையை தேடுகிறேன் என்று அவர் கூறியிருக்கிறார்.




# சோதனை என்ற பெயரில் சில்மிசம் கம்பி எண்ணுகிறார் வைத்தியர்

லண்டன், டிசெ.21

சோதனை என்ற பெயரில் இளம்பெண்கள், சிறுமிகளிடம் தவறாக நடந்து கொண்ட வைத்தியருக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், டோன்காஸ்டர் நகரில் மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார் டாக்டர் கவுசல் இஸ்லாம் (வயது 70). இவர் தன்னிடம் சிகிச்சைக்கு வரும் இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளிடம் சோதனை என்ற பெயரில் தவறாக நடந்து கொண்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு பெண் ஒருவர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து இவரது 'சோதனைகள்' வெளிச்சத்துக்கு வந்தன. இதையடுத்து அடுத்தடுத்து பெண்கள் முறைப்பாடு செய்யவே விவகாரம் விஸ்வரூபமெடுத்தது.

இதுதொடர்பான வழக்கு ஷெப்பீல்டு கிரவுன் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இது குறித்து நீதிபதி சைமன் லாலார், "கடவுளுக்கும் மேலாக மருத்துவர்கள் மீது மக்கள் நம்பிக்கையும், மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அதை குலைக்கும் விதமாக கவுசல் நடந்து கொண்டுள்ளது மன்னிக்க முடியாத குற்றம்" என்று தெரிவித்து 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தார்.

# ஈராக் ஜனாதிபதிக்கு ஜேர்மனியில் சிகிச்சை

பக்தாக், டிசெ.21

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக் ஜனாதிபதி ஜலால் தலபானிக்கு ஜேர்மனியில் சிகிச்சையளிக்கப்பட உள்ளது.

பக்கவாதத்தில் பாதிக்கப்பட்ட தலபானிக்குச் சிகிச்சையளிக்க பக்தாத் மருத்துவமனையில் போதிய வசதியில்லாததால் ஜேர்மனியில் அவருக்கு சிகிச்சையளிக்க மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். இதையடுத்து தலபானிக்கு மேலதிக சிகிச்சைகள் ஜேர்மனியில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21.07.1940

இறப்பு 21.12.2007

அமரர் தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்

திதி: 21-12-2012

அன்புள்ள சின்னையாவே !
கண் இமை போன்ற காவலரே !
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உறங்கிய உங்கள் செவிகளுக்குக் கேட்டிடுமோ ?
தள்ளாடும் கால்களும் தடுமாறும் இதயமும்
நிழல் தர நீங்கள் இன்றி
தனலாய் தவிப்பதை யார்க்கு உரைப்போம் ?
நன்மைகளின் போதும் நல்ல நாள்களின் போதும்
உந்தன் ஒளிப்படம் முன் நின்றே
எங்கள் மனதின் வலிகளைப் போக்குகின்றோம்
அந்த வேளை எம் அருகில் வந்து ஆறுதல் தாரும்.

அல்வின் றோட், காரைநகர். த. ஐயாத்துரை (காந்தி) குடும்பத்தினர்.

(28979)(6.10)

கார் விற்பனைக்கு

NISSAN SUNNY, WHITE COLOUR, 1300 CC, B15, YOM 2001, YOR 2004,
கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775 936 369
No.266, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

திருமண சேவை

டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், தனியார்துறை உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரது ஜாதகங்கள் எம்மிடம் உண்டு.
அத்துடன் சைவபோசன மணமக்களின் ஜாதகங்களும் உள்ளன.
உங்கள் மணமக்கள் தெரிவுக்கு உடனே நேரில் தொடர்பு கொள்ளவும்.
"சிவா சோதிட நிலையம்"
100 - அரசடி வீதி, கந்தர்மடம்.
T.P - 0776996281

(28947)(8.7.4)

31 ஆம் நாள் நினைவலைகளும் சபிண்டீகரண நிகழ்வும்

அன்னை மடியில் 04.02.1937



இறைவன் அடியில் 22.11.2012

அமரர் பொன்னம்பலம் நாகலிங்கம்

(ஓய்வு பெற்ற லிகிதர், புகையிரதத் திணைக்களம்)

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.12.2012) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் ஏர்ச்சம்மன் கோயில் மடத்தில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

நாகலிங்க முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை. (C2676)(8.11) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனம், பலவீனம் அல்ல!

(4)

அவமான உணர்ச்சி இரண்டு வகையானது. ஒன்று, அவமானப்படுத்தியவனைப் பழி வாங்க வேண்டும் என்பது. மற்றொன்று அவமானத்துக்கு எது காரணமாக இருந்ததோ அதைக் களைய வேண்டும் என்பது. இதில் இரண்டாவது வகையே சாதனையை நோக்கி மனிதனை அழைத்துச் செல்லுகின்ற சக்தி படைத்தது.

அவமான உணர்ச்சியால் கோபத்துக்கு ஆளாகாதீர்கள். பழி வாங்கும் உணர்ச்சிக்கு உங்களை நீங்களே பலியாக்கிக் கொண்டு விடாதீர்கள். அவமானம் என்பது ஒரு சம்பவம். அந்தச் சம்பவம் உணர்த்துகின்ற பாடம் என்ன என்பதைப் பற்றித் தான் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏழை என்பதால் கடையில் அவமானத்துக்கு உள்ளான சிறுவன், இரண்டு விடயங்களில் தெளிவு கொண்டவனாக இருந்திருக்கிறான். தான் ஏழையாக இருக்கக் கூடாது என்கிற முடிவுக்கு வந்தான். தன்னைப் போல் மற்ற ஏழைகள் அவமானத்துக்கு உள்ளாவதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாகச் சிந்தித்தான். அவனுக்கு ஏற்பட்ட அவமானம் அவனை ஆக்க பூர்வமாக சிந்திக்க வைத்தது. விளைவு, வியாபாரத்தில் ஈடுபட்டு கோடீஸ்வரனானான். மலிவு விலையில் ஏழை மக்களும் வாங்கக் கூடிய பொருள்களை விற்பனை செய்யும் கடைகளைப் பல்வேறு இடங்களில் உருவாக்கினான்.

சாதனை புரிவதற்கு நம்மிடமுள்ள குறைபாடுகள் எவ்வாறு தடையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லையோ, அதைப் போலவே நமக்கு ஏற்படும் அவமானங்களால் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமுமில்லை.

சாதனை புரிவதற்கு ஏழ்மை ஒரு தடையே அல்ல. வசதி படைத்தவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வாய்ப்புகள் மட்டுமே வாழ்க்கையை உயர்த்தி விடுவதில்லை. சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து விடுவதில்லை. வாய்ப்புகளை ஒருவன் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறான் என்பதைப் பொறுத்தே வெற்றி தோல்விகள் நிர்ணயமாகின்றன. நிறைய வாய்ப்புகள் உடையவன் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விடவும் கூடும். குறைவான வாய்ப்புகளுடையவன் அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு சாதனைகள் புரியவும் கூடும். இன்னும் சொல்லப் போனால் வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு சாதனைகளை நிகழ்த்துவதும் சாத்தியம்.

வாய்ப்புகளைத் தேடி அலைவதை நாம் கேவலமாகக் கருதக் கூடாது. கடல் வழி மார்க்கம் இந்தியாவுக்குக் கண்டுபிடிக்க வேண்டும் என முயன்ற கொலம்பஸ் அதற்குப் பண உதவி கேட்டு பல மன்னர்களையும் அணுகினார். எவரும் உதவ முன்வரவில்லை. அதற்காக கொலம்பஸ் சோர்ந்து போய் விடவில்லை. இறுதியில் ஸ்பெயின் நாட்டு அரசி உதவ முன் வந்தாள். இந்தியாவுக்கு கடல் வழி கண்டுபிடிக்கப் புறப்பட்ட கொலம்பஸ், புதிய கண்டத்தைக் கண்டு பிடித்தார். வாய்ப்பை உருவாக்கிக் கொண்டவர்களில் கொலம்பஸ் குறிப்பிடத்தக்கவர்.

உங்களுடைய சாதனைகளை மற்றவர்கள் போற்ற வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள். சாதனையாளர்களை, அவர்கள் வாழ்ந்த காலத்தில் போற்றியவர்கள் குறைவு என்பது தான் வரலாறு. போற்றுகிறவர்கள் இருக்கமாட்டார்கள். பொறாமைப் படுகின்றவர்கள் நிறையப் பேர் இருப்பார்கள். அவர்களைப் பார்த்து வேதனைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மனித சுபாவத்தின் ஒரு தன்மை என்று அதை அலட்சியப்படுத்துங்கள்.

நீங்கள் சாதாரண மனிதராக இருக்கும் போது அவமானத்தைச் சந்திப்பது ஒரு வகை. இது மற்றவர்களின் அலட்சிய மனோபாவத்தால் ஏற்படுவது; சாதனை புரிந்த பிறகு அவமானத்தைச் சந்திப்பது இன்னொரு வகை. அது பொறாமையால் ஏற்படுவது.

புதிய கண்டத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸுக்கு விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. அந்த விருந்து அவரைப் பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது என்றாலும், அவரைப் பரிகசிப்பவர்களும் அந்த விருந்தில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர், கொலம்பஸ் புதிய கண்டத்தைக் கண்டு பிடித்தமை ஒரு சாதனை அல்லவென்றும், அட்லாண்டிக் சமுத்திரத்தில் மேற்கு நோக்கி யார் சென்றிருந்தாலும் புதிய கண்டத்தைச் சென்று அடைந்திருப்பார்கள் என்றும் குத்தலாகச் சொன்னார்.

கொலம்பஸ் கோபப்படவில்லை. விருந்து மேசை மீது இருந்த ஒரு முட்டையை எடுத்து, கேலி பேசியவரிடம் கொடுத்து, அதை செங்குத்தாக நிறுத்தி வையுங்கள் பார்க்கலாம் என்றார்.

அவர் முயன்ற முட்டை செங்குத்தாக நிற்காமல் விழுந்து கொண்டே இருந்தது. கொலம்பஸ் முட்டையை வாங்கினார். முட்டையின் கூர்மையான பகுதியினை மேசையின் மீது லேசாகத் தட்டி, அதில் ஏற்பட்ட பள்ளத்தை ஆதாரமாக்கி முட்டையை நிற்க வைத்து விட்டார் கொலம்பஸ்.

பரிகசித்தவர், ''இதை நான் கூடச் செய்வேனே'' என்றார். ''ஒருவர் செய்து வழிகாட்டிய பிறகு யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்பது உண்மைதான்'' என்றார் கொலம்பஸ் சிரித்துக்கொண்டு.

புகழ்பெற்ற சில எழுத்தாளர்களை வேறு சில எழுத்தாள நண்பர்கள் அலட்சியமாகப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். ''அவர் என்ன பிரமாதமாகச் சாதித்து விட்டார். மேல்நாட்டுக் கதைகளைக் கொப்பியடித்து எழுதுகிறார்'' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். புகழ்பெற்ற எழுத்தாளரின் வெற்றிக்கு அதுதான் காரணமென்றால், இவர்களும் அதைச் செய்து புகழ் பெற்றிருக்கலாமே. விடயம் அதுவல்ல. மற்றவர்களின் புகழை அங்கீகரிக்க மனம் இல்லாமையே இத்தகைய விமர்சனங் களுக்குக் காரணமாக இருக்கிறது.

பி.சி.கணேசன் (தொடரும்)

# பாலர் பகல் பராமரிப்பு நிலையம் உழைக்கும் பெண்களுக்காக உருவானது

## யாழ்.பல்கலை புவியியற்றுறை பேராசிரியர் உரை

தென்மராட்சி,டிசெ.21

பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் உழைக்கும் பெண் சமுதாயத்துக்கென உருவாக்கப்பட்டவை. இது 17 ஆம் நூற்றாண்டு தொடக்கம் மேற்குலக நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இலங்கையிலும் நீண்டகாலமாக பெண் தோட்டத் தொழிலாளர்களின் நலன்கருதி நீண்ட காலத்துக்கு முன்பிருந்து 'பிள்ளை மடுவம்' என உருவாக்கப்பட்டு இன்று வரைக்கும் இருந்து வருகிறது.

எமது பிரதேசத்திலும் கூட்டுக் குடும்ப முறை இல்லாமல் போனதையடுத்து குழந்தைகள் பராமரிப்புக்கென நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 17 ஆவது ஆண்டு சிறார்களின் கலை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமது கல்வித் தரத்துக்கேற்ப பெரும்பாலான பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்று கடமை புரிவதால், தமது பிள்ளைகளைப் பராமரிக்க இவ்வாறான நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான காலப் பகுதியில் பராமரிப்புடன், ஆரம்பக் கல்வியும் ஊட்டப்படுவது அவசியமாகும்.

அவ்வாறான பணிகளை இங்குள்ள ஆசிரியைகள், நிலைய ஸ்தாபகர் மற்றும் நிர்வாகத்தினர் மேற்கொண்டதன் பயனாக இந்த விழா அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறார்களின் கல்வி நலன்களில் புலம் பெயர்ந்துள்ள எமது உறவுகள் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றனர்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட பல முன்பள்ளிகள், பெற்றோரின் அக்கறையின்மையால் தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் செயலிழந்துள்ளன.

இந்த பராமரிப்பு நிலையம் முன்பள்ளியாகவும் இயங்கி வருகின்றது. இங்கு 97 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

கடந்த 17 வருடங்கள் இந்த பகல் பராமரிப்பு நிலையம் ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் முன்பள்ளியாகச் செயற்பட்டு மாவட்டத்தில் சிறந்த முறையில் இயங்க பெற்றோர் வழங்கும் முழுமையான ஒத்துழைப்பே காரணம்.

97 மாணவர்களையும் இந்த ஆசிரியைகள் வழிப்படுத்திய முறை, இங்கு நடத்தப்பட்ட கலை நிகழ்வுகளில் சிறார்கள் காட்டிய திறமைகள் மூலம் உணர முடிகிறது.

முன்பள்ளி ஆசிரியைகளைப் பொறுத்தவரையில் அவர்களது சேவை அளப்பரியதாகவும், அர்ப்பணிப்புள்ளதாகவும் இருந்த போதிலும், அவர்களுக்குக் கிடைக்கும் வேதனம் மிகமிகக் குறைவு.

ஆசிரியைகளுக்கு உரிய வேதனம் இன்மையால் பலர் வேறு உத்தியோகங்களை நாடிச் செல்கின்றனர். இந்த ஆசிரியைகளுக்கு பல்கலைக் கழகங்கள் மூலம் டிப்ளோமா பயிற்சிகள் வழங்கப்படல் அவசியமாகும். இதனால் எமது பிரதேசத்தில் தகைமை வாய்ந்த முன்பள்ளி ஆசிரியைகள் கிடைப்பதுடன், சிறார்களின் எதிர்கால கல்விக்கு ஊன்றுகோலாகவும் சேவையாற்ற முடியும்-என்றார். (ம-9)

# சுகாதாரத் திட்டங்களுக்கு மக்களின் பங்களிப்பு அவசியம்

## வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்களுக்கு மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார வார நிகழ்வு அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''ஆரோக்கியமான வாழ்வுக்கு ஒன்றுகூடுவோம்'' எனும் தொனிப் பொருளில் இந்த வருடம் தேசிய சுகாதார வாரம் கொண்டாடப்படுகிறது. இதன் நோக்கம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும்.

கிராம மட்டங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் இணைந்து சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் முடிந்த வரை ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதனைவிட வைத்தியசாலைகளிலும், ஏனைய பொது இடங்களிலும் உள்ளூராட்சி சபைகள் ஊடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரம் சிறந்த முறையில் பேணப்பட வேண்டியது தனியாக சுகாதாரத்துறையினரிடம் மட்டும் இல்லை. இது மக்களுடைய பொறுப்பாகவும் உள்ளது. ஒவ்வொருவரும் தமது சுகாதாரம் தொடர்பாக அக்கறை கொள்ள வேண்டும். தாம் ஆரோக்கியமாக நோய் நொடிகள் இல்லாது சுகதேகிகளாக வாழ வேண்டும் என்ற சிந்தனை உருவாக வேண்டும்.

தற்போது எமது பிரதேசத்தில் ஆங்காங்கே மேற்கொள்ளப்படுகின்ற சுகாதார நடவடிக்கைகளால் நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.-என்றார். (ம-14)



5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வு இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் நடைபெற்ற போது, முகாமையாளர் எஸ்.தர்மராஜா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம-8)

# பொது அறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

1ஆம் இடம்-காரைநகரைச் சேர்ந்த புவிராஜசிங்கம் பிரசாந்தன், 2 ஆம் இடம்-இல.190, சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த வாசுகி கிருஷ்ணராஜா, 3 ஆம் இடம்-கொக்குவில் கிழக்கு ராம கிருஷ்ணன் பாடசாலை வீதியைச் சேர்ந்த கவிப்பிரியா மனோகரன். இவர்களுடன் 10 பேர் ஆறுதல் பரிசில்கள் பெற்றுள்ளனர். (ம-422)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா தேவாலயம் முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா போன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி வலைச்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அம்பரசன்' சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சுஜா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# இதுதான் உங்களின் நல்லிணக்கமா?

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு கிழக்கில் அரச கரும மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துமாறு ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் தடவைகள் ஓதிக் ஓதி கூறினாலும் அவை எதனையும் கண்டுகொள்ளாத செயற்பாடுகளாகவே அரசின் நடவடிக்கைகள் அமைகின்றன.

''கழுதைக்கு உபதேசம் காதுக்குள் சொன்னாலும் அது அபயக்குரலே அபயக்குரல்தான், என்பது போலவே இலங்கை அரசினதும் அரச திணைக்களங்களினதும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அமைந்து வருகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாக வடக்கு- கிழக்கில் அரச கரும மொழியாக தமிழ் மொழியைப் பயன்படுத்தவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இனங்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்கான செயற்பாடுகளில் ஒன்றாக இது அமையும் எனவும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்திருந்தது. நல்லிணக்க ஆணைக்குழு இந்தப் பரிந்துரையும் வடக்கு - கிழக்கில் முற்றாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தப் பரிந்துரைகள் வெறும் எழுத்துருவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் அது இல்லை.

அரசினாலும் அரச திணைக்களங்களினாலும் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் பல இன்றும் வடக்கு கிழக்கில் அமைந்துள்ள அரச திணைக்களங்களுக்கு தனிச் சிங்களத்திலேயே கிடைக்கின்றன. தமிழ் மொழியில் சுற்றறிக்கைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்று அரச கருமமொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அடிக்கடி நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் கூறி வருகின்ற போதும் இன்றும் இந்தத் தனிச் சிங்களச் சுற்றறிக்கைகள் தமிழ்ப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகளை பார்த்ததும் இங்குள்ள தமிழ் அரச அதிகாரிகள் திண்டாடிப் போய்விடுகிறார்கள்.

அண்மையில் பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் ஆகியவற்றில் ஏற்படும் வெற்றிடங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சிங்களத்தில் மட்டுமே வெளியானது. கொழும்பில் உள்ள மிக முக்கிய திணைக்களங்களில் ஒன்றான தேர்தல் திணைக்களமே இந்தச் சுற்றறிக்கையைத் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைத்திருந்தது. இதனால் பிரதேச சபைகளின் செயலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்கள். இதனை அடுத்து யாழ்.மாவட்டத்தில் உள்ள தேர்தல் திணைக்களம் அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அனுப்பி வைத்தமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அடிக்கடி கூறி வரும் அரசு அடிப்படைப் பிரச்சினையான அரச கரும மொழி நடைமுறைப்படுத்தலில் அடிக்கடி தவறிழைப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் கிண்ணத்துக்கான போட்டிகளின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நல்லூர் ஸ்தான பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் தேசிய கீதம் சிங்களத்திலேயே ஒலிக்கவிடப்பட்டது. முற்றுமுழுதான தமிழ் நிகழ்வு ஒன்றில் ஆளுநரைத் தவிர அனைவரும் தமிழர்களே பங்கேற்ற இந்த வைபவத்தில் சிங்களத்தில் தேசிய கீதம் ஒலிக்கவிடப்பட்டமையால் அங்கிருந்தோர் பெரும் விசனம் அடைந்தனர். தேசிய கீதத்தைக்கூட தமிழில் ஒலிக்கவிட அனுமதிக்காதவர்கள் எப்படி இன நல்லிணக்கத்தை உருவாக்கப் போகிறார்கள் என்று கேட்கிறார்கள் தமிழ் மக்கள்.

# சிங்கள மக்களும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்

■ கந்தவனம் கோணேஸ்வரன்

இலங்கை அரசமைப்பின்படி பிரதம நீதியரசரை நியமிக்கும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. பிரதம நீதியரசரை பதவிநீக்கம் செய்யவேண்டும் என்று ஜனாதிபதி உளமார விரும்பினாலும்கூட சில வரைமுறைக்குட்பட்ட நடவடிக்கைகளைப் படிப்படியாகக் கையாண்டு அவற்றினூடாகப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டுதான் நீதியரசரைப் பதவிநீக்கும் கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.

நீதியரசரின் சம்பள விடயத்தில்கூட சம்பளத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் தான் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறதேயொழிய அவர் பெற்று வரும் சம்பளத்திலோ அல்லது ஓய்வூதியத்திலோ குறைப்புச் செய்யும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

பிரதம நீதியரசர் அறுபத்தைந்து வயதுவரை பதவி வகிக்கும் தகைமையுடையவராகிறார். அவர்மேல் நிரூபிக்கப்பட்ட துர்நடத்தை, நன்னடத்தையின்மை அல்லது வேறு தகைமையின்மை என்பவை காரணமாக அவரது பதவி ஓய்வுபெற உரித்தான வயது எட்டும் முன்னரே பறிக்கப்படுவதற்கான வாய்ப்பும் அரசமைப்பில் உண்டு.

நீதியரசரைப் பதவிநீக்கம் செய்ய வேண்டுமென யாராவது விரும்பினால் நாடாளுமன்றத்தின் ஊடாகச் சில நடைமுறைகளைக் கையாண்டுதான் தன்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் இது பொருந்தும்.

**பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின்...**

நீதியரசரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு நாடாளுமன்றத்தின் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதாவது எழுபத்தைந்துக்கும் குறையாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுடன்தான் அத்தகைய ஓர் எண்ணத்தைச் சபாநாயகரிடம் முன்வைக்கலாம்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் மனுவில் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணங்கள் அல்லது குற்றச்சாட்டுகள் பற்றிச் சபாநாயகர் திருப்தியடைந்தால் மட்டுமே அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும். நாடாளுமன்றத்தின் முடிவெடுக்கமைய பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

தனது நியாயத்தை உரைக்க எதிராளியான நீதியரசருக்கு வாய்ப்பு வழங்கப்படும். இவ்விசாரணைகளின் அடிப்படையில் நீதியரசர் குற்றவாளியா, அல்லரா என்ற முடிவு எடுக்கப்பட்டு அதற்கான நியாயமான காரணங்களுடன் சபை முதல்வரிடம் அறிக்கை கையளிக்கப்படும்.

இவ்வறிக்கையானது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வருகை தராத நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட சாதாரண பெரும்பான்மை உறுப்பினர்கள் நீதியரசரைப் பதவி நீக்கலாம் என ஏற்றுக்கொண்டால் மட்டுமே அந்த பிரேரணையின் அடிப்படையில் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் பிரதம நீதியரசரின் பதவி பறிக்கப்படும்.

எனவே, ஆகக்குறைந்தது 113 உறுப்பினர்களாவது பிரதம நீதியரசரின் பதவி பறிக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் [illegible] அன்றி ஜனாதிபதியாற்கூட அவரைப் பதவி நீக்கம் செய்யமுடியாது.

இந்த அடிப்படையில் பார்த்தால் இன்றைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேல் சட்டப்படி குற்றச்சாட்டுகள் உரைக்கப்பட்டுச், சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரால் நியமிக்கப்பட்ட பதினொரு பேரைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவுக்குழுவின் பெரும்பான்மையானோர் நீதியரசரைக் குற்றவாளியாகக் கண்டு அதற்கான அறிக்கையும் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் சட்டப்படி நடந்தேறிய விடயங்கள். இவற்றில் சந்தேகப்படுவதற்கு காரணமும் இல்லை. இவ்வளவு காரியங்களையும் சட்டப்படி நகர்த்திய அரசுக்குப் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்வதற்கு ஏதும் தடையிருக்கப்போவதில்லை. அதுவும் சட்டப்படி நடந்தேறலாம்.

**சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள சிந்தனை**

ஆனால், பிரதம நீதியரசர் விவகாரத்திலிருந்துதான் சட்டம் வேறு நியாய தர்மங்கள் வேறு என்ற சிந்தனை சிங்கள மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. புத்த பிக்குகள் தொடக்கம் சட்டவாதிகள்வரை சட்டத்தைவிட நியாய தர்மங்கள் மேலானவை என்ற தொனியில் போராட்டங்களை முன்னெடுத்து நீதியரசர் விவகாரத்தில் அரசு நடந்து கொள்ளும் முறையில் எவ்வித நியாயங்களுமில்லை, இதுவொரு அப்பட்டமான பழிவாங்கல், அதற்குச் சட்டம் துணைபோயிருக்கிறது என்று கூக்குரல் போடத் தொடங்கியுள்ளனர்.

நியாயங்களுக்கும் தர்மங்களுக்கும் அப்பால் சட்டத்தின் துணைகொண்டு அறுபதாண்டு காலமாக நசுக்கப்பட்டு வரும் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே தமது எதிர்ப்பை பதிவுசெய்து சரியாகவே நடந்து வருகிறார்கள்.

சிங்களச் சட்டத்தரணிகள், மகாநாயக்கர்கள், சிங்களப் பொதுமக்கள், சிங்களக் கட்சியினர் ஆகியோரின் எதிர்ப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எதிர்ப்பைப் போன்றவையல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நியாயம் தோற்றுப் போகக்கூடாது என்பதற்காகவும் நீதியும் தர்மமும் தலைநிமிரவேண்டும் என்பதற்காகவும் போராடுகிறார்கள்.

மகாநாயக்கர்களும், சட்டத்தரணிகளும் சிங்களத்தின் தேசிய நலன் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே குரல் கொடுக்கிறார்கள். இந்தச் சட்ட நடவடிக்கையானது சிங்கள தேசியத்துக்கு பின்னடைவை ஏற்படுத்திவிடக்கூடும் என அஞ்சுகிறார்கள்.

நீதியரசர் பதவி என்பது சாதாரணமான தொன்றல்ல. நாட்டின் நீதித்துறைக்கான தலைமைப் பதவி. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பின்னர்கூட ஜனாதிபதியாகப் பதவியேற்க இருப்பவர் நீதியரசரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர்தான் ஜனாதிபதியாகின்றார் என்பதிலிருந்து இதன் வலிமையை அறிய முடியும். அந்த அளவுக்கு உயர்ந்த பதவி.

ஆனால் அந்தப் பதவியில் இருப்பவரை இன்று ஓட்டோச் சாரதிகள் சங்கங்களும் விமர்சிக்கின்றன. அவரை எதிர்த்து ஊர்வலம் போகின்றன. சாதாரண பொதுமக்கள்கூட அரசுக்கு விசுவாசம் தெரிவிப்பதற்காக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவை நீதித்துறையின் சிறப்புக்கு இழுக்கானவை. இவற்றை அனுமதிப்பதானது நீதித்துறையைக் கீழ்மைப்படுத்தும் செயல். எனவே, அவற்றை நிகழவிடக்கூடாதென அரசும் கருதுவதாகத் தெரியவில்லை.

அரச தரப்பு, தாங்கள் எவரிடமும் காழ்ப்புணர்வு கொண்டிருக்கவில்லை, சட்டப்படிதான் எங்கள் கருமங்களை முன்னெடுக்கிறோம் என்று திரும்பத்திரும்ப சத்தியம் செய்கின்ற போதிலும் அரச ஆதரவாளர்கள் ஒரு சிலரைத் தவிர வேறு எவரும் இதை நம்பத் தயாராக இல்லை.

**அரசின் பழிவாங்கல் உணர்வின் வெளிப்பாடு**

முற்றுமுழுதாக ஷிராணி பண்டாரநாயக்க என்ற தனியொரு பெண்மணியைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதலாகவே பெருவாரியானோரால் இது கருதப்படுகிறது. அரசின் மிலேச் சத்தனமான பழிவாங்கல் உணர்ச்சியின் வெளிப்பாடாகவே இது கொள்ளப்படுகிறது.

திவிநெகும சட்டமூல விவகாரத்தில் அரசு எதிர்பாராத தோல்வியைச் சந்தித்தது. இந்தத் தோல்வியை உறுதிப்படுத்தித் தன்னைத் தலைகவிழ வைத்தது ராணி தலைமையிலான நீதித்துறைதான் என்று அரசு கருதுகிறது. திவிநெகும சட்டமூலத்தின்போது அரசுக்குச் சார்பான தீர்ப்பொன்றை நீதித்துறை வழங்கியிருந்தால் அரசு நீதித்துறைக்கு மதிப்புக் கொடுத்து நீதிக்குத் தலை வணங்கி உடனடியாகவே தீர்ப்பையொட்டிய நடைமுறைகளை துரிதப்படுத்தியிருக்கும்.

வடக்கு, கிழக்கு பிரிப்பு விடயத்தில் நீதித்துறையின் தீர்ப்பை தலைமேற்கொண்டு தீவிரமாகச் செயற்பட்டதைப் போன்று இப்போதும் செயற்பட்டிருக்கும். ஆனால், திவிநெகும விவகாரத்திலான தீர்ப்பு அரசால் ஜீரணித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. தனது போக்கைக் கட்டுப்படுத்தக் கூடிய எந்தச் சக்தியும் இலங்கையில் இருக்கக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம். தாங்கள் நினைத்ததைச் செய்யமுடியாமல் தடுக்கக் கூடிய சக்தியொன்றிருப்பின் தாங்கள் அதற்குக் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படக் கூடும் என்பதுடன் அது தங்கள் வீரத்துக்கும் ஆளுமைக்கும் இழுக்கானவை என்றும் அரச தரப்பினர் கருதுகின்றார்கள். எனவேதான் நீதித்துறை மேல் பாய்ந்து தமது எண்ணத்துக்கு எதிரான தீர்ப்பு வரக் காரணமாயிருந்த நீதியரசரைப் பதவிநீக்கம் செய்துவிடத் துடிக்கிறார்கள்.

**நீதித்துறையை சுயாதீனமாக இயங்கவிடாத முயற்சி**

இவ்வாறு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் தனது விருப்பத்துக்கும் மாறான தீர்ப்பு நீதித்துறையால் வழங்கப்படாதிருப்பதை உறுதிசெய்து கொள்வது அரசின் நோக்கமாக இருக்கலாம். தமிழர் தாயகத்தை இரண்டாகப் பிரித்தது போன்று அரசை மகிழ்ச்சிப்படுத்தக் கூடிய தீர்ப்புகள் மட்டுமே எதிர்காலத்தில் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம். இது நீதித்துறையை சுயாதீனமாக இயங்கவிடாமல் செய்யும் முயற்சி. இதன் அடிப்படையில்தான் அரசின் நடவடிக்கைகளுக்கெதிராக கண்டனங்கள் எழுகின்றன.

திவிநெகும சட்டமூலம் உருவாகாமல் இருந்திருந்தால் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையும் உருவாகாமல் இருந்திருக்கும். வேறு யாராவது குற்றவியல் பிரேரணையை உருவாக்க முனைப்புக் கொண்டிருந்தாலும் அந்த முயற்சி சபாநாயகரிடம் கையளிக்கப்படும் அளவுக்குக் கூட வளர்ச்சி பெறாதொன்றாகவே அமைந்திருக்கும்.

அரச தரப்பினரது விருப்பமாக இருக்கின்ற ஒரே காரணத்தால்தான் குற்றவியல் பிரேரணை இவ்வளவு வேகமாக வெற்றிப் படிகளைத் தொட்டு ஷிராணியைப் பதவி நீக்கக்கூடிய எல்லை வரை வளர்ந்திருக்கிறது. ஜனாதிபதியும் பெரிய மனதுடன்

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிசெம்பர் 21

## வசந்த காலத்தின் ஆரம்பம்

■ பொய்யாக்கிரன்

இந்த வருடம் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதியாகிய இன்றைய நாளை எல்லோரும் எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்றனர். இன்றைய தினத்துக்கு அப்படி என்ன முக்கியத்துவம்? மாயன் கலண்டரின் அடிப்படையில் உலகின் இறுதிநாள் என்ற விளங்கா விளக்கமே அது.

இது தொடர்பாக இணையத் தளங்கள், பத்திரிகைகள் பல்வேறு கோணங்களில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றன. மதமாற்றம் செய்வோர் தங்கள் குறிக்கோளை அடைய இதை துரும்புச் சீட்டாக பயன்படுத்துகின்றனர். வானியலாளர்கள் வானத்தில் நிகழும் நிகழ்வுகளை தங்கள் அறிவுக்கேற்ற வகையில் ஆற்றலுக்கேற்ற வகையில் பலவாறு எடுத்தியம்புகின்றனர்.

மாயனின் கலண்டரைப் பற்றி எடுத்தியம்பும் முன்னர், சாதாரண ஒரு கலண்டரைப் பற்றி பார்ப்போம். மாதம், வருடம், கலண்டர் இவையாவும் யாவருக்கும் பொதுவானதாக இருக்கச் சந்தர்ப்பம் இல்லை. வெவ்வேறு வானியல் நிகழ்வுகளின் அடிப்படையில் மாதங்கள், வருடங்களுக்கான வரைவிலக்கணங்கள் வேறுபடுகின்றன. உதாரணமாக நமது வழக்கிலுள்ள பஞ்சாங்கங்கள் சந்திர மாதம், சூரியமாதம், முஸ்லிம் மாதம், ஆங்கிலமாதம் என மாதங்களையும் சூரியவருடம், சாயனவருடம், சந்திரவருடம், ஆங்கில வருடம் என வருடங்களையும் மனிதகுலத்தின் தேவைகருதி வகுத்துள்ளதைக் காணலாம்.

மாயனின் கலண்டரின் பிரகாரம் பிரபஞ்சத்தின் சுற்று கிட்டத்தட்ட 26,000 வருடங்கள் என குறிப்பிட்டிருக்கின்றோம். துல்லியமான கணிப்பின்படி மாயன் சரியாகவே இதைக் கணித்துள்ளான் என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. பூமி தன்னைத்தான் சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவருவது மட்டும்தான் அநேகமானோருக்குத் தெரியும். ஆனால் பூமியின் சுழற்சியின் போது பூமி சுற்றும் திசைக்கு எதிர்த்திசையாக பூமியின் அச்சுச் சுழல்கிறது. இந்தச் சுழற்சியால் ஒவ்வொரு வாரமும் ஏற்படும் கதி பேதம் 50 செக்கன்களாகும். இவ்வாறு பூமியின் அச்சுச் சுழற்சியால் ஏற்படும் மாற்றத்தையே முந்துகை அல்லது முன்னிகழ்ச்சி ( The precessional Movement of the earth) என அழைக்கிறோம். அயனாம்சம் எனவும் இதுவே குறிப்பிடப்படுகின்றது. இச்சுழற்சிக்கு வருடமொன்றுக்கு 50 செக்கன் வீதமாக ஒரு பாகையைக் கடக்க 72 வருடங்களும் 360 பாகையைக் கடந்து சுற்று பூரணமடைய 25920 வருடங்களும் செல்கிறது.

இம்முந்துகையால் கால நிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. 72 வருடங்களில் ஏற்படும் ஒரு பாகை மாற்றம் கால நிலையில் ஒரு நாள் வித்தியாசத்தைக் காட்டும். 13000 வருடங்களில் தற்போதைய கோடை காலம் மாரிகாலமாகவும் மாரி காலம் கோடை காலமாகவும் மாறிவிடும். அதாவது பருவகாலம் மாற்றமடையும். மாயனின் கலண்டர் பருவகாலத்துடன் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது. அப்படியாயின் டிசெம்பர் 21 ஆம் திகதியுடன் மாயனின் கலண்டர் முடிவடையக் காரணம் என்ன? பூமியின் அச்சுச் சுழற்சியால் ஏற்படும் முந்துகை (precession) யின் காரணமாக பருவகாலங்கள் மாற்றமடைகின்றன.

தமிழ் மாதப்படி தட்சணாயணம் ஆரம்பமாவது அதாவது சூரியன் தெற்கு நோக்கிப் போவது ஆடிப்பிறப்பன்று (ஜூலை 15) எனவும், உத்தராயணம் ஆரம்பமாவது அதாவது சூரியன் வடக்குநோக்கிப் போவது தை மாதப்பிறப்பன்று (ஜனவரி14) எனவும் நம்மவர் குறிப்பிட்டாலும் முந்துகையின் விளைவாக 23 நாள்களுக்கு முன்பதாகவே இச் செயற்பாடு ஆரம்பமாகின்றது. சூரியன் தெற்கு நோக்கிப் போவது (கடகக் கோட்டில் உச்சம் கொடுப்பது) ஜூன் 20 இலும் வடக்கு நோக்கிப்போவது (மகரக் கோட்டில் உச்சம் கொடுப்பது) டிசெம்பர் 21 இலும் நிகழும் வானியல் காட்சியாகும். டிசெம்பர் 21 இல் இளவேனில் (Spring) எனப்படும் வசந்த காலம் ஆரம்பமாகின்றது. இது பருவகால அடிப்படையில் மாயனின் வருட இறுதியும் புதுவருட ஆரம்பமுமாகும். இதன் பின்னர் மாயனின் கலண்டர் ஏன் தொடரவில்லை? நியாயமான கேள்விதான். பிறந்த குழந்தை ஒன்றுக்கு ஜாதகப்பலன் எழுதும்போதுமகாதசை புத்தி அடிப்படையில் பலன் எழுதப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு காலப் பகுதிக்குப்பின் பலன் எழுதப்படுவதில்லை. இதனைக் கருத்தில் எடுத்து சாதகரின் ஆயுள் இத்துடன் முடிவுபெறுகின்றது எனக் கூறமுடியாது. இதைப்போன்றதே மாயனின் கலண்டரும். ஆனால் டிசெம்பர் 21 இல் இளவேனில் எனப்படும் வசந்த காலம் ஆரம்பமாகின்றது என்பது மாயனின் வியக்க வைக்கும் விசாலமான அறிவு.

தோன்றல், திரிதல், கெடுதல் என்ற நிலையில் தோன்றிய இவ்வுலகம் மாற்றங்களுக்குள்ளாகி என்றோ ஒருநாள் அழியும். ஆனால் அது எப்போ என்பது விடுவிக்கப்பட முடியாத புதிர்.

**''காலங்களில் அவள் வசந்தம்.... மாதங்களில் அவள் மார்கழி''** எனப்பாடிய கவிஞனின்வரிகளுடன்டிசெம்பர் 21 இல் மார்கழிமாத வசந்த காலத்தில்அடிஎடுத்துவைப்போம்.

---

# சிங்கள மக்களும்.......

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சிங்கள மக்களிடையே எழுந்துள்ள சந்தேகம்**

நடுநிலைமையான குழுவொன்றை வைத்து ஆராய்ந்த பின்னரே அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்வேன் எனத் தெரிவித்திருக்கிறார். அப்போதுதான் தனது நடவடிக்கை திருப்திகரமானதாக அமையும் என்றும் தான் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற ஒரு மனிதன் என்றும் விளக்கமும் அளித்திருக்கிறார்.

ஆனால், ஜனாதிபதி மனசாட்சியுள்ள நடுநிலையான மனிதர்தானா என்ற சந்தேகம் இன்று நாட்டில் பரவலாகச் சிங்கள மக்களிடையேயும் எழுந்துள்ளது. நாடாளுமன்றமும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் விருப்பத்தை நிறைவேற்றத் துடிக்கும் சுயாதீனமற்ற அமைப்பு என்று மக்கள் கருதத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஜனாதிபதியின் போக்குக்கு விரோதமாக யார் எதிர் வந்தாலும் அவர்களைத் தடுத்து அழிக்க வேண்டும் என்ற போக்கு இலங்கையில் தலையெடுத்திருக்கிறது.

நீதியரசர் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொறுப்புநாடாளுமன்ற உறுப்பினர்களிடமே கையளிக்கப்பட்டிருந்தது. ஆளும்கட்சி சார்பாக எழுவரும் எதிர்க்கட்சி சார்பாக நால்வருமாக பதினொரு பேரைக் கொண்டமைந்த இச்சபை உண்மையிலேயே பிரதம நீதியரசரின் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் தகைமையுடையதுதானா என்ற கேள்வி எழுந்துள்ளது.

நியாயமான இந்தக் கேள்விக்கு அரசதரப்பிடம் பதில் இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நால்வரும் வெளியேறிய நிலையில் ஜனாதிபதியின் சிந்தனையை மட்டுமே முன்னெடுக்கும் ஒரு பலவீனமான குழுவாகவே இது மாறியிருக்கிறது.

சட்டப்படிதான் இத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டது என்று மட்டும் சொல்லதான் அரசால் முடிகிறதே தவிர குற்றஞ்சாட்டியவர்களே இயற்கை நீதிக்கு முரணான வகையில் குற்றஞ்சாட்டப்பட்டவரைவிசாரித்துநீதி வழங்கலாமா என்ற கேள்விக்கு அரசிடம் பதில் இல்லை.

இலங்கையில் நீதி வழங்குதற்கான அதிகூடிய தகைமையைப் பெற்றுச் சட்டத்துறையின் உச்சத்திலிருக்கும் ஒருவரை அரைகுறைச் சட்ட அறிஞர்களும் சட்ட அறிவே அற்றவர்களுமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படை நியாயங்களைப் புறந்தள்ளிச் சட்டப்படி விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் உரிமையைப் பெற்றமையானது இலங்கை நீதித்துறையில் நிகழ்ந்த நகைச்சுவையென்றே கருதவேண்டியிருக்கிறது. தீர்ப்பை ஏற்கனவே மனதில் இருத்திக் கொண்டு செய்யப்பட்ட விசாரணையாகவே இது கொள்ளப்படுகிறது. பதினான்கு குற்றச்சாட்டு[illegible] களில் மூன்று குற்றச்சா[illegible] நிரூபிக்கப்பட்டு விட்ட பெருமையோடு தெரிவுக்குழுவினர் தமது இறுதி அறிக்கையைச் சபாநாயகரிடம் கையளித்திருக்கிறார்கள்.

தனது நியாயங்களை எடுத்துக்கூறப் போதிய கால அவகாசம் தரப்படவில்லை, விசாரணை தொடர்பான விதிமுறைகள் எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை, தெரிவுக்குழு உறுப்பினரின் தகைமையீனங்கள், நீதியானதும் நியாயமானதுமான ஒருவிசாரணைக்குரியசூழல்அங்கு காணப்படாமை ஆகிய குறைபாடுகள் காரணமாகவே தாம் வெளியேறுவதாக அறிவித்திருக்கிறார். தமிழர்களுக்குத்தான் நீதியில்லை என்று இருந்த இலங்கையில் நீதியரசருக்கும் நீதியில்லை என்றாகிவிட்டிருப்பது சட்டவாக்கத்துறையின் - நாடாளுமன்றத்தின் - சிறப்பை உலகுக்குத் துலாம்பரமாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கு நிறைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை பிரதம நீதியரசரிடம் கையளித்த தெரிவுக்குழு இருபத்துநான்கு மணிநேரத்தக்குள் அதற்கான பதிலைத் தருமாறு கேட்டிருக்கிறது. ஆயிரம் பக்கங்களை அதுவும் சட்ட நுணுக்கங்களைக் கொண்ட குற்றச்சாட்டுகளை வாசிக்கவோ அதிலுள்ள விடயங்களைக் கிரகிக்கவோ இந்தக் கால அவகாசம் போதாதென்ற உணர்வு தெரிவுக்குழுவிலிருந்த எந்த நாடாளுமன்ற உறுப்பினரினதும் புத்தியில் உறைக்காதது ஆச்சரியமான விடயம்.

[illegible] கள் இருவரின் வார்த்தைப் பிரயோகங்களும் கண்ணியமானதாக அமைந்திருக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

**பல கோணங்களில் கடும் எதிர்ப்பு**

குற்றம் சுமத்தல் தொடக்கம் நீதி விசாரணைவரை சரியாக நடைபெறவில்லை என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. சட்டவல்லுநர்கள், மனிதாபிமானஅமைப்புகள், மகாநாயக்கர்கள், இடதுசாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சர்வதேச அமைப்புகள், உலகநாடுகள் எனப் பல கோணங்களிலிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பி அரசைத் திக்குமுக்காடச் செய்திருக்கிறது.

ஜனாதிபதியும் யாருக்கும் அஞ்சமாட்டேன் என்று கூறிக் கொண்டே எதிர்ப்புகளாலும் கண்டனங்களாலும் அச்சமடைந்த நிலையில் இருக்கிறார். அதனால்தான் தெரிவுக்குழுவின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம்பெற்று இலகுவாகவேதான் விரும்பியதை நிறை வேற்றிக் கொள்ளவல்ல வசதி களிருந்தும் இன்னொரு சுயாதீனக் குழுவை வைத்து இவ் விடயத்தை அணுகப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தெரிவுக்குழுக்கள், ஆணைக் குழுக்கள் என்று இலங்கையில் அமைக்கப்பட்ட பலகுழுக்களின் சிபாரிசுகள் அடிப்பட்டுப் போனது போலவே இந்தக் குழுவின் விசாரணைகளும் அடிப்பட்டு போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**தமிழர்களின் வேதனை**

சட்டப்படி தமிழர்கள் ஒடுக்கப்பட்டபோது, துன்புறுத்தப்பட்டபோது, துரத்தப்பட்டபோது, கொல்லப்பட்டபோது, விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைத்திருக்கும்போது பெருமிதத்தோடு அமைதிகாத்தசட்டத்தரணிகள் தங்கள் தலைமை அதிகாரிக்கு சட்டத்தால் தீங்கு ஏற்படும் போது மட்டும் துடித்தெழுந்து நியாயத்தைப் பாதுகாக்கப் போராடுவதில் நியாயமிருக்கும் அளவுக்கு மனிதாபிமானம் இருப்பதாகத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

புத்ததர்மத்தைப் போதித்துக் கொண்டு அன்புருவாக காட்சியளிக்கிறோம் என்று கூறும் மகாநாயக்கர்கள் தமது இனம் என்பதால் நியாயத்தையும் தர்மத்தையும் உயர்த்திப் பிடிப்பதைக் காணும் போது தமிழர்களால் வேதனைப்படாமல் இருக்கமுடியவில்லை.

நீதித்துறையும் நிறைவேற்றுத்துறையும் வீராவேசத்துடன் மோதிக் கொள்வதுபோல் வெளியே தெரிந்தாலும் இரண்டு துறைகளும் உள்ளூர நடுக்கத்துடன்தான் செயல்படுகின்றனர். வீரம் என்பது நடுக்கம் கொள்ளாமல் இருப்பதன்று: நடுக்கத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் இருப்பதுதான் என்பது இருசாராருக்கும் நன்கு தெரியும்.

இரண்டு பகுதியினரும் தோல்வியடையாமல், இவர் வென்றார், அவர் வென்றார் என பளிச்சென எவரும் கூறமுடியாதபடி பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்பதில்தான் இப்போது கவனமாக இருக்கிறார்கள். ஆனால், வைத்த ஆப்பைக் கழற்றும்போது தனது வால் மரப்பிளவுக்குள் சிக்கிக்கொள்ளாதபடி மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக் கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்பட்டார் நெஞ்சம்

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார்.

அவருக்கு அவசரமாக ஒரு தொகைப் பணம் தேவைப்பட்டது. அதற்காக இன்னொருவரைத் தேடிச் சென்றார். கடன் கேட்டார்.

இதற்கு அவர் கூறினார்...

"சாட்சியுடன் வாருங்கள் கடன் கொடுக்கின்றேன்!" என்று...

"இறைவனுடைய சாட்சியே போதும்" என்றார் இவர்.

"நான் கொடுக்கப்போகின்ற பணத்திற்கு யாராவது பொறுப்பு ஏற்க வேண்டும். அவ்வாறு கடனுக்குப் பொறுப்பு ஏற்கக் கூடிய யாரையாவது அழைத்துக் கொண்டு வாருங்கள்.. கடன் தருகின்றேன் என்றார் அவர்.

"உங்கள் கடனுக்கு இறைவனையே பொறுப்புதாரியாக்குகிறேன்" என்றார்.

அவர் நிமிர்ந்து பார்த்தார்.

சரி என்று சம்மதித்தார். கேட்ட கடனைக் கொடுத்தார். குறிப்பிட்ட தவணைக்குள்ளே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு கொடுத்தார்.

கடன் வாங்கியவர் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார். அதன்பின்னர் உழைப்புத் தேடி கடல் கடந்து வேறு நாட்டுக்குப் போய்விட்டார்.

போன இடத்திலே அதிகம் சம்பாதித்தார்.

கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. எப்படியாவது குறிப்பிட்ட நாளுக்குள் தனது நாட்டுக்குச் சென்று கூறியபடி கடனைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார். அதற்காக உடனே ஒரு படகைத் தேடினார்.

அந்தக் காலத்திலே வேறு வசதிகள் எதுவும் கிடையாது. படகிலே தான் பிரயாணம் செய்யவேண்டும்.

ஆனால் உடனடியாகப் பிரயாணம் செய்வதற்கு இவருக்கு படகு ஒன்றும் கிடைக்கவில்லை.

என்ன செய்வது.. குறிப்பிட்ட நாளுக்குள்ளே போய்ச்சேர முடியாது போல இருக்கின்றதே என்று தவித்தார்.

கடன்பட்ட நெஞ்சம் கலங்க ஆரம்பித்து விட்டது.

ஒன்றும் புரியவில்லை. ஏதாவது செய்துதான் ஆக வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஒரு மூங்கில் குழாயை எடுத்தார். அதை சுத்தம் செய்தார். அதற்குள் தான் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை வைத்தார். அதனுடன் தன்னுடைய நிலைமையை விளக்கி ஒரு கடிதத்தையும் எழுதி வைத்தார். தண்ணீர் உள்ளே செல்லாத வகையிலே அதை இறுக்கி மூடி அடைத்தார். எடுத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தார்.

"மனதிற்குள்ளே நினைத்தார்...

"இறைவா.. உன்னுடைய அடியார் ஒருவரிடம் நான் கடன் வாங்கினேன். அது உனக்குத் தெரியும்! அவர் சாட்சி கொண்டுவரக் கூறிய போது.. நான் உன்னையே சாட்சியாக்கினேன். கடனுக்கு யார் பொறுப்பு என்று கேட்ட போது உன்னையே பொறுப்புதாரி ஆக்கினேன். இதுவும் உனக்குத் தெரியும். இதற்கு சம்மதித்து அவர் எனக்கு கடனும் கொடுத்தார். திருப்பிக் கட்ட வேண்டிய காலக்கெடு நெருங்கி வந்து விட்டது. அவரிடம் போய்ச் சேர எந்த வழியும் கிடைக்கவில்லை... என்ன செய்வது என்றும் புரியவில்லை. வேறு வழியில்லாமல்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியாவது இதை அவரிடம் சேரத்துவிடு!"

என்று மனமுருக வேண்டினார்.

மூங்கில் குழாயைக் கடலில் வீசி எறிந்தார்.

அதே நேரத்திலே என்ன நடந்தது என்றால்...

கடன் கொடுத்தவர்... கடற்கரையிலே வந்து காத்துக்கொண்டிருந்தார்.. காலக்கெடு முடியப் போகின்றது.கடன் வாங்கியவரைக் காணவில்லைய என்று பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்திலேத்திலே அவர் காலடியிலே வந்து ஒதுங்கியது அந்த மூங்கில் குழாய். எடுத்துப் பார்த்தார். பணமும் கிடைத்தது. கடிதமும் கிடைத்தது. அவருக்கு ஆச்சரியம்.

சிறிது நாள் கழித்து கடன் வாங்கியவரும் வந்து சேர்தார்.


"ஐயா.... தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறேன். எனக்கு வேறு வழிகிடைக்கவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள். இதோ உங்கள் பணம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றறு பணத்தை நீட்டினார்.

"சகோதரரே! அதற்கு அவசியமே இல்லை. எனக்கு வர வேண்டிய பணம் எப்பொழுதோ வந்து சேர்ந்து விட்டது" என்றார் அவர்.

இவ்வாறு ஒரு கதை உண்டு.

நபிகள் நாயகம் இந்தக் கதையைக் கூறியிருக்கிறார். கடனைத் திருப்பித் தரவேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்துவதற்காக தனது தோழர்களுக்கு அவர் கூறிய கதை இது.

"திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணத்துடன் மக்கள் பொருள்களை ஒருவன் (கடனாகப்) பெறுகிறான் என்றால் இறைவன் அவன் சார்பில் அக்கடனை நிறைவேற்றித் தருகிறான். ஆனால் கடனைத் திருப்பித்தரும் எண்ணமே இல்லாமல் ஒருவன் பெறுவானாகில் அதன் காரணமாக அவனை இறைவன் அழித்தே விடுகிறான்" அப்படி என்று சொல்கிறது நபிகள் நாயகத்தின் எச்சரிக்கை.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அற்புதங்களால் அருளாட்சி செய்யும் கன்னாரையம்பதி ஸ்ரீராஜராஜேஸ்வரி



(கடந்தவாரத் தொடர்ச்சி.......)

**ஞானி**

அந்நியரின் ஆட்சிக்காலத்தில் மாதாவாக வீற்றிருந்து ஆலயத்தை அழிக்க வந்தவரை மயக்கி தன்னை வழிபடச் செய்து தான் வீற்றிருந்த சிறுகோயிலை அழிக்க விடாமல் பாதுகாத்தாள். அதுமட்டுமல்லாது; கன்னாரைக் குளத்தருகே வெள்ளைத்துகில் உடுத்த வயோதிப மாதாவாக வீற்றிருந்து அடியார்களுக்கு காட்சிகொடுத்து ஆலயத்துக்குள்ளே சென்று மறைபவள். மெய்யடியார்கள் நம்பிக்கை வைத்து முறையிடும் குறைப்பாட்டைப் போக்கி நல்லருள் பாலிப்பவள் ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள்.

தலவிருட்சமான நெல்லி மரத்தில் ஏறி நெல்லிக் காய்களைப் பறிக்க முனைந்த பெண்மணிக்கு தவறை உணர்த்தியதோடு பெருமளவில் காய்த்துக் குலுங்கி வந்த நெல்லிமரமே காய்ப்பதை கைவிட்ட கதை ஆலயத்தின் அற்புதத்தோடு இணைந்த வரலாறு.

ஆலயத்துக்கு அருகில் பூர்வீகமாகக் குடியிருந்து வந்த தங்கச்சியம்மா, நீலாயதாட்சியம்மா, பராசக்தி அம்மா மூவரில் நடுவீட்டு அம்மாவாகிய நீலாயதாட்சி அம்மாவுக்குக் காட்சி கொடுத்து அருளினார். ஆலயத்தின் உரிமையையும் அதனோடு இணைந்த சொத்தையும் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஞான சேகர முதலியார் வழிவந்தவர்கள் நீலாயதாட்சி அம்மாவுக்கு வழங்க அருள் செய்த பெரு மாட்டி, ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியம்மாள்.

> **தலவிருட்சமான நெல்லி மரத்தில் ஏறி நெல்லிக் காய்களைப் பறிக்க முனைந்த பெண்மணிக்கு தவறை உணர்த்தியதோடு பெருமளவில் காய்த்துக் குலுங்கி வந்த நெல்லிமரமே காய்ப்பதை கைவிட்ட கதை ஆலயத்தின் அற்புதத்தோடு இணைந்த வரலாறு.**

ஆலயத்தில் ஆண்டு தோறும் நவராத்திரி விழா பெருவிழாவாக பக்தர்களால் கொண்டாடப்படுவதோடு மானம்பூ திருவிழாவன்று அம்பாள் அடியார்கள் புடைசூழ எழுந்தருளிச் சென்று ஆவரங்கால் மேற்கு உன்னி வைரவர் கோயிலில் வாழை வெட்டி வைரவர் ஆலயத்தில் தங்கி வருவது வழமை. அம்பாள் தனது ஆலயத்துக்கு பிற்பகல் திரும்பும் போது பெருமழை பெய்து கன்னாரைக்குளம் உட்பட வயல்வெளி நீரால் நிரம்பி கடல்போல் காணப்படும். இது பூர்வீகமாக நடந்துவந்த உண்மை எனக்கூறி வியந்தார் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர்களில் ஒருவராக விளங்கும் சிரேஷ்ட பூசகர் சிவஸ்ரீ வே.நடராசக்குருக்கள்.

தினசரி இரண்டுகால பூசையும் அம்பாளுக்கான விசேடகாலங்களான பங்குனித் திங்கள், வைகாசி விசாகம், நவராத்திரி காலங்களில் விசேட உற்சவங்களும் பூசை வழிபாடுகளும் நடைபெறுவது உண்டு. பங்குனித் திங்கட்கிழமைகளில் அடியார்கள் அம்பாளுக்கு பொங்கல் செய்து நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வர். வைகாசி விசாகத்தில் வழுந்து வைத்து பெருமளவில் பொங்கல் நடைபெறுவது ஆண்டு தோறும் நடைபெறும் நிகழ்வாகும்.

நடுவீட்டு அம்மாவாகிய நீலாயதாட்சி அம்மா காலத்தில் இருந்த அந்தணர்களே ஆலயத்தின் [illegible] இருந்த போது அடியவர்கள், [illegible] மற்றும் புலம்பெயர் உறவுகள் ஒன்றிணைந்து ஆலயத்திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆலயத்தின் திருப்பணி வேலைகளை மேற்கொள்வதற்கு உள்ளூர் பிரமுகர்களை உள்ளடக்கிய திருப்பணிச் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டு ஆரோக்கியமான சூழ்நிலையில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி ஆலய திருப்பணிச் சபையின் ஒன்றுபட்ட முயற்சியினாலும் உள்ளூர் பொது மக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியினாலும் 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி மகாகும்பாபிஷேக நீராட்டுவிழா நடைபெற்றது.

அம்பாளுக்கான திருப்பணியைத் தொடர ஏற்பாடுகள் நடைபெறுவதோடு மகாகும்பாபிஷேக தினமான தைத்திங்கள் திருவாதிரையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பத்துத் தினங்களுக்கு பெருந்திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வேதாகம விதிமுறைப்படி வருடாந்த மகோற்சவத்தை நடத்துவதற்கு வசதியாக கொடிமரம் அமைப்பதற்கு முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் ஆலயத் திருப்பணி தொடரில் இராஜ கோபுரம் அமைப்பதற்கும் அம்பாளின் அனுக்கிரகம் கிடைத்திருப்பதால் அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் பர்வத பத்தினி சமேதரர் (ஆவரங்கால் சிவன் கோயில்) ஆலயத்துக்கும் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. இரண்டு ஆலயங்களும் குறுகிய இடைத்தூரத்தில் அமைந்துள்ளன.

நடராஜ இராமலிங் கேஸ்வரர் வேட்டைத் திருவிழா அன்று அடியார்கள் புடை சூழ ஸ்ரீ ராஜாராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு எழுந்தருளி வேட்டை முடித்து அம்பாள் சந்நிதியில் குறிப்பிட்டளவு நேரம் தரித்திருந்து திரும்புவது வழமையான உற்சவமாக உள்ளது. ஊரே திரண்டு வேட்டைத் திருவிழாவில் கலந்து கொண்டு மாறி மாறி இரண்டு ஆலயங்களையும் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். ★

**நேற்று வியாழக்கிழமை (20.12.2012) 14ஆம் பக்கத்தில் பிரசுரமான வலத்தில் மன்னாரில் 468 வருட பழமையான குருகுக் கோயிலின் படத்துக்குப் பதிலாக மன்னார் எருக்கலம்பிட்டி முகைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசலின் படம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதற்காக வருந்துகிறோம்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மண் சரிவு அபாயம்

## 6 மாவட்டங்களுக்கு மீண்டும் 24 மணிநேர முன்னெச்சரிக்கை

கண்டி, டிசெ.21

நாட்டில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவதால் மலை சார்ந்த 6 மாவட்டங்களுக்கு நேற்று முன்தினம் மூன்றாவது நாளாகவும் 24 மணிநேர மண் சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண் சரிவு சேவைகள் பிரிவுத் தலைவர் ஆர். எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தளை, குருநாகல், ஹம்பாந்தோட்டை ஆகிய ஆறு மாவட்டங்களுக்குமே குறித்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த மாவட்டங்களிலுள்ள பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் வீதிப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மண் சரிவு ஏற்படக்கூடிய அச்சம் நிலவுவதன் காரணமாகவே இவ்வாறு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஏற்பட்டுள்ள பெரும்பாலான மண் சரிவுகளுக்கு மனித செயற்பாடுகளே பிரதான காரணம் என்பது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன.

அதே சமயம் கண்டி - பதுளைக்கு அதிகாரிகம ஊடாகப் பயணம் செய்யும் நெடுஞ்சாலையில், கக்குருகலே என்ற இடத்தில் மண் சரிவு ஏற்பட்டிருப்பதால் இந்தப் பாதை ஊடான போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கண்டி - மஹியங்கனை, ஹாலிஎல - நுவரெலியா, நுவரெலியா - ஹற்றன், கம்பளை - நுவரெலியா, பதுளை - வெலிமட, பெரகல - வெல்லவாய பகுதிகளில் பயணிப்போர் அவதானத்துடன் பயணங்களை மேற்கொள்வது அவசியம்- என்றார் அவர். (வ)



'புறநெகும' திட்டத்தின் கீழ் ஒரு கோடி 60 இலட்சம் ரூபா நிதியில் அட்டாளைச் சேனை சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச சபை தலைவர் எம்.ஏ.அன்ஸில் தலைமையில். நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் கட்டடத்துக்கான அடிக்கல் நடுகிறார். (31)

## பட்டதாரிகள் 384 பேருக்கு நியமனம்

திருகோணமலை டிசெ.21

கிழக்கு மாகாண சபையில் 384 பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் வைத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம ஆகியோர் முன்னிலையில் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த 30.06.2012 நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நேர்முகத் தேர்விலும் சித்தியடைந்தவர்களுக்கே மேற்படி நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. (வ)

## ஓட்டமாவடி மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர் கொரியப் பிரதிநிதிகள்

வாழைச்சேனை, டிசெ.21

ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்கு கொரிய நாட்டு பிரதிநிதிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்தனர்.

அதன்போது, மேற்படி பிரதேசங்களில் கொரிய நாட்டுநிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வடிகால்களை பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் மக்களுடனும் கலந்துரையாடினர்.

மேற்படி பயணத்தில், கோறளைப் பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் சார்பாக தலைவர் கே. பி.எஸ்.ஹமீட், கோறளைப் பற்று பிரதேச சபையின் சார்பாக சபையின் செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீன் மற்றும் முன்னாள் அமைச்சர் எம். எஸ்.எஸ். அமீர் அலியின் இணைப்புச் செயலாளர் எச்.எல்.எம். கலீல், ஓட்டமாவடி பிரதேச சபையின் பிரதித் தலைவர் ஏ.எம்.நௌபர் மற்றும் உறுப்பினர் எஸ். ஐ. முஹாஜிரீன் உட்பட்ட குழுவினரும் கலந்து கொண்டனர். இதன்போது, கொரிய நாட்டு அதிகாரிகளிடம் மனு ஒன்று கையளிக் கப்பட்டது.



வடிகால்களுக்கு மூடியிடப்படாத பகுதிகளுக்கு மூடியிடல், இரு பிரதேச சபைகளின் எல்லைக்குள்ளும் வடிகால் அமைக்கப்படாத பிரதேசங்களுக்கு வடிகால் அமைத்துக் கொடுத்தல் போன்ற விடயங்கள் வேண்டுகோளாக விடுக்கப்பட்டிருந்தன. (வ)

## தகனக்கிரியையின்போது 20 பேரை பதம்பார்த்த குளவிகள்

மஸ்கெலிய - நல்லதண்ணீர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஸபான தோட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் குளவி தாக்கியத்தில் பாதிக்கப்பட்ட 20 இற்கும் மேற்பட்டோர் மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சடலம் ஒன்றை மயானத்துக்குக் கொண்டு சென்று தகனக் கிரியைகள் நடைபெற்றவேளையில், அங்கு மரம் ஒன்றில் இருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்து தகனக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரியையின்போது எழுந்த புகையால்தான் இந்தக் குளவிகள் வெளியேறி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## போக்குவரத்து சபை பஸ் சேவை மட்டக்களப்பில் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, டிசெ.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழையால் இலங்கை போக் குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன. மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு சாலை முகாமையாளர் துரை மனோகரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போக்குவரத்து சாலையிலிருந்து புறப்படும் முனைக்காடு, கரவெட்டி, பாவற்கொடிச்சேனை, புலிபாய்ந்தகல், வலையிறவு, பாலமுனை, போன்ற இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளும் பதுளை, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் களுவாஞ்சிக்குடி இலங்கை போக்குவரத்து சாலையிலிருந்து புறப்படும் மண்டூர், பாலையடிவட்டை, திக்கோடை, முதலைக்குடா, திருப்பழுகாமம், மகிழூர் போன்ற இடங்களுக்கான போக்கு வரத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. களுவாஞ்சிக்குடி போக்குவரத்து சாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(வ)

## 5 தினங்களில் மட்டக்களப்பில் 348.2 மி.மீற்றர் மழை வீழ்ச்சி

மட்டக்களப்பு, டிசெ.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 5 தினங்களில் 348.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பொறுப்பதிகாரி எம்.சூரியகுமார் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி 60.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் 16ஆம் திகதி 102.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் 17ஆம் திகதி 96.8 மழை வீழ்ச்சியும் 18ஆம் திகதி 71.01 மழை வீழ்ச்சியும் 19ஆம் திகதி 17.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் 1529.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ)

## நாவிதன்வெளி பிரதேச சபைத் தலைவரின் வாகனத்துக்கு தீ

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேச சபை தலைவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட பிக்கப் வாகனத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவில் இனம் தெரியாத குழுவினர் தீயிட்டுள்ளனர்.

இதனையடுத்து பிக்கப் வாகனம் சிறியசேதமடைந்துள்ளதாக பிரதேச சபை தவிசாளர் சி.குணரெத்தினம் தெரிவித்தார்.

மத்தியமுகாம் 11ஆம் கொலனியில் உள்ள தலைவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட பிக்கப் வாகனம் சம்பவதினமான நள்ளிரவு 1.30 மணி அளவில் தீப்பற்றி எரிவதைக்கண்ட உறவினர்கள், அயலவர்களின் உதவியு டன் தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீயால் வாகனம் சிறிய சேதமடைந்துள்ளது.

வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்

இதுதொடர்பான விசாரணைகளை மத்தியமுகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## மட்டு.மாவட்டத்தில் பெரு வெள்ளம் 2 இலட்சத்து 11, 775 பேர் பாதிப்பு

### 41 நலன்புரி நிலையங்களில் அகதிகள்

மட்டக்களப்பு, டிசெ.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் நேற்றுக் காலை வரை 232 கிராம அலுவலர் பிரிவுகளில் 54, 685 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 11 ஆயிரத்து 775 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளத்தால் ஒருவர் உயிரிழந்தும் 4 பேர் காணாமற் போயுமுள்ளனர். குறித்த பகுதிக ளிலிருந்து வெள்ளப் பெருக்கால் வீடுகளை விட்டு வெளியேறிய 2,340 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 237 பேர், 41 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அதே வேளை, 15 ஆயிரத்து 408 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 285 பேர் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

வெள்ளம் காரணமாக 172 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 145 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன- என்றுள்ளது. (வ)

## திருமலையில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கத்திக்குத்து

திருகோணமலை, டிசெ.21

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகதிவுல்வெவ பகுதியில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கத்தியால் குத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேரை கைது செய்துள்ளதாக மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னை தாக்கிய நான்கு பேரும் வீட்டொன்றுக்குள் கூட்டிச்சென்று வீட்டுக்குள் வைத்து கத்தியால் குத்தியதாக சிவில் பாது காப்பு உத்தியோகத்தர் பொலிஸாரிடம் தெரிவித்தார். வலது கை வெட்டப்பட்டு படுகாயமடைந்துள்ள சிவில் பாதுகாப்பு படை சிப்பாய் திருகோணமலை பொது வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பொலி ஸார் முன்னிலைப்படுத் தினர்.

மேலதிக விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## மாத்தளையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரைக் காணவில்லை

மாத்தளை ரத்தொட்ட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரத்தொட்ட நிகலோயா கீழ்ப்பிரிவில் மண்சரிவு ஏற்பட்டதை அடுத்து குறித்த ஆறு பேரும் காணாமல் போயிருந்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித் துள் ளனர்.

இதுதொடர்பாக ரத்தொட்ட பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். உடல் அசதி, சோர்வு வந்து நீங்கும். எதிர்பாராத பயணங்கள் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**இடபம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**மிதுனம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கம்:** உணர்ச்சி வேகத்தில் முடிவுகள் எடுக்க வேண்டாம். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண்பழிக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கன்னி:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

## நாளை

மார்கழி -07 சனிக்கிழமை 22.12.2012
திதி: தசமி பி.இ 06.22 வரை
நட்சத்திரம்: ரேவதி மரணபி.ப 04.11 வரை
சுபநேரம்: 03.25- 04.55 வரை
ராகுகாலம்: 09.25- 10.55 வரை

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதிற்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயலாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**விருச்சிகம்:** நட்பு வட்டாரம் விரியும். உடல் நிலை சீராக அமையும். உறவினர்களின் வருகையுண்டு. கனவுத்தொல்லை, தூக்கமின்மை விலகும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு:** நீண்ட நாள்களாகத் தடைப்பட்டு வந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**மகரம்:** வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவை பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்யம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்துபோகும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | | | |
| 9 | 8 | | 7 | | 1 | 3 | | 5 |
| | 3 | | | | | 6 | | 4 |
| 5 | | 2 | 6 | | | | | 8 |
| 7 | | | 9 | 4 | 8 | | | 1 |
| | | | | | 5 | 7 | | 6 |
| 3 | | 5 | | | | | 9 | |
| 6 | | 8 | 3 | | 4 | | 1 | 2 |
| | | | | 7 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 5 | 4 | 1 | 3 | 2 | 8 | 7 |
| 1 | 8 | 3 | 6 | 7 | 2 | 5 | 9 | 4 |
| 4 | 2 | 7 | 5 | 8 | 9 | 6 | 3 | 1 |
| 6 | 7 | 4 | 1 | 9 | 5 | 3 | 2 | 8 |
| 5 | 9 | 1 | 2 | 3 | 8 | 4 | 7 | 6 |
| 2 | 3 | 8 | 7 | 6 | 4 | 1 | 5 | 9 |
| 7 | 5 | 9 | 3 | 4 | 6 | 8 | 1 | 2 |
| 3 | 1 | 6 | 8 | 2 | 7 | 9 | 4 | 5 |
| 8 | 4 | 2 | 9 | 5 | 1 | 7 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கூலிக்கான கேள்வி கோரல்

சங்கத்தின் தலைமைக் காரியாலய வளவிலுள்ள அரிசியாலையை புனரமைப்புச் செய்வதற்கான வேலைகளுக்கு கூலிக் கேள்வி கோரப்படுகிறது. வேலை விவரத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தில் கூலிக்கான கேள்விகளைக் குறிப்பிட்டு மூடிய கடித உறையினுள் பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம் எனும் முகவரிக்கு 04.01.2013 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப் பிவைக்கவும். கேள்விகள் தொடர்பாக இயக்குநர்சபைத் தீர்மானமே இறுதியானது.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்,
உடுப்பிட்டி.
(சி/2688) (45.6.7)

## வெங்காயச் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள்

யாழ்ப்பாணம், டிசெ.21

மாரிகால போகத்திற்காக யாழ்.குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இதுவரைக்கும் தற்போது 500 வரையான ஹெக்ரெயர் நிலப்பரப்பில் விவசாயிகள் குறித்த வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், மாவட்ட விவசாயத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சின்ன வெங்காயம் மற்றும் வேதாள வெங்காயம் போன்றவை செய்கை பண்ணப்பட்டுள்ளன.

தற்போது விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கை நல்ல நிலையில் காணப்படுகின்றது.

குடாநாட்டில் தற்போது வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

வெங்காயம் கிலோ 160 ரூபாவுக்கு மேல் சந்தையில் விற்பனை செய்யப்படு கின்றது.

மேற்படி விலை அதிகரிப்பை அடுத்தே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

(வ-17)

## போலி வேலைவாய்ப்புப் பத்திரம்விற்ற இலங்கையர் குவைத்தில் கைது

இந்திய பிரஜைக்கு போலி வேலை வாய்ப்பு அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்த இலங் கையர் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு வேலை வாய்ப்பு அனுமதிப் பத்தி ரத்தையும் தலா 530 குவைத்தினாருக்கு விற்றதாக இலங்கையர் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இந்திய பிரஜையால் இது குறித்து குவைத் பொது குடிவரவு திணைக்களத் திடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இலங்கை [illegible] ணை களை மேற் கொண்டு வருகின்றனர். (வ)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



பிறப்பு
29.04.1991

இறப்பு
21.06.2012

புவனேந்திரன் ரசீவன்

அன்பின் உறைவிடமே பாசத்தின் ஒளி விளக்கே
ஆறாத்துயரினிலே தவிக்கின்றோம் உந்தன் பிரிவினாலே !
என்றுமே உன் இனிய நினைவுகளை சுமந்தே காலமெல்லாம் வாழ்ந்திடுவோம்
அன்பான சோதரனாய் பாசமுள்ள அண்ணனாய் பாரினிலே, இனிய நண்பனாய்,
வாழ்ந்திட்ட வேளையிலே, பொல்லாத காலன் உனை கவர்ந்திட்டானே ?
என் செய்வோம் தவிக்கின்றோம் ரசீவா ! உன் பிரிவினாலே !

203, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

உன் பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
சிவக்கொழுந்து கந்தையா

மலர்வு
19.03.1922

உதிர்வு
21.11.2012

கடந்த 21.11.2012 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று( 21.12.2012) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கம்பளி காப்பான்
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

குடும்பத்தினர்.
(சி/2677)(5.6.7)

## முதலாம் ஆண்டு நினைவு



அகம் மகிழ
01★02★1941

குலம் நெகிழ
02★01★2012

திருமதி சண்முகப்பிள்ளை சீதாங்கனி (பரமா)

திதி-நவமி (21.12.2012)

ஆண்டு ஒன்று சென்ற தம்மா
ஆறவில்லை எம்துயர்
தூண்டா மணி விளக்காய் நின்று
ஆலய விளக்கேற்றினீர்கள்
தேறுதல் சொல்ல நீங்கள் இல்லை
திக்குத் திசையறியாது நிற்கின்றோம்
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மாறாது அம்மா

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை.
077 077 3741

255712)(5.7.4)

பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'இனி அவன்' திரைப்படம் யாழ்ப்பாணத்தில்

**இன மொழி வேறுபாடுகளற்ற வகையில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இரசித்துப் பார்க்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது.**

கான்ஸ் சர்வதேச திரைப்பட விழா, ரொரண்டோ சர்வதேச திரைப்பட விழா, டோக்கியோ சர்வதேச திரைப்பட விழா உட்பட உலகம் முழுவதும் பல திரைப்பட விழாக்களில் காண்பிக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்ற அசோக ஹந்தகமவின் புதிய திரைப் படம் ''இனி அவன்'' இன்று முதல் இலங்கை இரசிகர்களுக்காக இலங்கை முழுவது முள்ள திரையரங்குகளில் வெளியாகிறது.

போர் முடிந்த பின்னர் தமிழ் மக்களுடைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கக் கூடிய இந்தப்படம் சர்வதேச ரீதியில் இடம்பெற்ற திரைப்பட விழாக்களில் கவனத்தை ஈர்த்ததோடு மட்டுமல்லாது இலங்கையில் முதன்முறையாக இன மொழி வேறுபாடுகளற்ற வகையில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இரசித்துப் பார்க்கக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புகழ் பெற்ற இயக்குநர் அசோக ஹந்தகமவின் இயக்கத்தில் இலங்கை நடிகர்களான தர்ஷன் தர்மராஜ், சுபாஷினி பாலசுப்பிரமணியம், நிரஞ்சனி சண்முகராஜா, ராஜா கணேசன், மல்கம் மசாடோ மற்றும் கிங் ரட்ணம் உட்படப் பலர் இந்தத் திரைப் படத்தில் நடித்திருக்கிறார்கள். அத்தோடு ஒளிப்பதிவு-சண்ண தேசப்பிரிய, இசை-கபில பூகலஆராய்ச்சி, படத்தொகுப்பு-அஜித் ராமநாயக்க, கலை-சுனில் விஜேயரத்ன ஆகியோருடன் ஈ-கல்ச்சர் புரொடக்ஷன் வழங்கும் ''இனி அவன்'' திரைப்படத்தை ஜகத் வெள்ளவத்தை தயாரித் திருக்கின்றார். (த)

# யாழ். பல்கலை மாணவர்களை உடனடியாக விடுதலை செய்க

## முஸ்லிம் தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவர் கோரிக்கை

யாழ். பல்கலைக் கழகத்தில் கைதுசெய்யப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு மாணவர்களையும் எந்தவித நிபந்தனையுமின்றி அரசு, விடுதலை செய்யவேண்டும். அத்துடன், வடக்கில் ஒரு லட்சத்து 50ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தொடர்பிலான தகவல்களையும் அரசு வெளியிட வேண்டும்.

- இவ்வாறு முஸ்லிம் தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாநகரசபை முன்னாள் பிரதி மேயருமான அஸாத் ஸாலி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்தும் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பாதுகாப்புத் தரப்பினரால் யாழ். பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வளிப்பதற்காக வெலிக்கந்தை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களையும் எந்தவித நிபந்தனைகளுமின்றி அரசு உடனடியாக விடுதலைசெய்யவேண் டும்.

அத்துடன், வடக்கில் இதுவரையில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் எங்கே? அரசு உடனடியாக இவர்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்.

நாட்டில் அராஜக ஆட்சி நிலைகொண்டுள்ளதால்தான், இன்று இயற்கையே எமக்கு எதிராக செயற்படுகின்றது. அதிசயமான நிகழ்வுகள் இயற்கையினூடாக நிகழ்த்தப்படுகின்றன. சிவப்பு மழை பொழிகின்றது, மண் சரிகின்றது, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. நாட்டில் இடம்பெறுகின்ற அராஜக ஆட்சியை இயற்கையே எதிர்க்கின்றது - என்றார்.

## பொலிஸ் சார்ஜன்ட் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு,டிசெ 21

நீரில் அடித்துச் செல்லப்பட்டு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ள நிலையில் பொலிஸ் சார்ஜன்டின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உடப்பு - ஆடிமுனை பகுதியைச் சேர்ந்த கே.மகேஷ்வரன் என்ற பொலிஸ் சார்ஜன்டே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

லொறியொன்றில் இருந்து விழுந்தே பொலிஸ் சார்ஜன் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)



கோல்டன் கீ கிரடிட் காட் நிறுவனத்தில் 305 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட வைப்பாளர் ஒருவர், கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள பிரேமதாச உருவச்சிலைக்கு அருகிலுள்ள மரமொன்றின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

# பிரிட்டன் பிரஜையின் கொலையை மூடி மறைக்கிறது இலங்கை அரசு

## அந்நாட்டு எம்.பி.குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ 21

2011 ஆம் ஆண்டு நத்தார் தினத்தில் செஞ்சிலுவைச் - சங்க ஊழியரான ஹுறம் சைக் எனும் பரிட்டன் பிரஜை கொல்லப்பட்டதை இலங்கை அரசு மூடி மறைப்பதாகப் பிரிட்டன் தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பனரான சைமன் டன்க்ஸுக் விசனம் தெரிவித்தார்.

உள்ளூர் அரசியல்வாதி ஒருவரைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசு இந்த வழக்கை மெதுவாக கைவிட முயல்வதையிட்டு தான் கவலையடைந்துள்ளதாக அவர் கூறினார்.

தங்காலையில் ஒரு சுற்றுலா மையத்தில் குடிகாரக் கும்பல் ஒன்றின் துன்புறுத்தலிலிருந்து உணவக உரிமையாளரை காப்பாற்றுவதற்கான சமாதான முயற்சியில் ஈடுபட்ட போதே இவர் துப்பாக்கியால் சுடப்பட்டும் கத்தியால் குத்தியும் கொல் லப்பட்டார்.

ஒரு வருடம் கழிந்து விட்ட நிலையில் சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது குற்றம் ஏதும் சுமத்தப்படவில்லை. வழக்கு விசாரணை ஏதும் நடப்பது போலவும் இல்லை. பிரச்சினைக்குரிய அரசியல்வாதி ஆளும் கட்சியுடன்; இணைக்கப்பட்டுள்ளார். அரசியல் தலையீடு காரணமாக விசாரணை தவிர்க்கப்பட்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில், அடுத்த வருடம் இலங்கையில் நடக்கவுள்ள பொதுநலவாய அரசாங்க தலைவர்களின் மாநாட்டை பகிஷ்கரிப்பதையிட்டு பிரதமர் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உள்ளூர் அரசியல்வாதி சம்பந்தப்பட்டுள்ள பிரிட்டன் பிரஜையின் மிருகத்தனமான கொலையை விசாரிக்க அரசு தயாரில்லாதபோது, இந்த மாநாட்டுக்குப் போவதையிட்டு டேவிட் கமரூன் ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இந்த வழக்கில் முன்னேற்றம் ஏதும் இல்லாமை குறித்து இலங்கை அரசுடன் கடுமையான தொனியில் பேசவேண்டுமென வெளிநாட்டு அமைச்சர் அலிஸ்ரெயர் பேட்டிடம் கேட்டுள்ள சைமன் பிரிட்டன் சுற்றுலாத்துறை எவ்வளவுக்கு முக்கியமானது என இலங்கைக்கு உணர்த்தப்பட வேண்டும்.

ஓவ்வொரு வருடமும் பல ஆயிரம் பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குப் போகின்றனர். ஹுறமுக்கு நடந்தது இவர்களில் யாருக்கும் நடக்கலாம்-என்றும் அவர் சொன்னார். (த)

## இறால் மழை

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸ மஹாராம விகாரைப் பகுதியில் நேற்று முன்தினம் இறால் மழை பெய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக நாட்டில் சில பகுதிகளில் சிவப்பு மழை பெய்து வருகின்றது. தொடர்ந்து, மீன் மழை, ஜெலி மழை என வியக்கத்தக்க வகையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு களுத்துறை, வலல்லாவிட இத்தபான மிரிஸ்வத்த பகுதியில் மஞ்சள் நிற மழை பெய்துள்ளது.

இம்மஞ்சள் நிற மழை நீர் சேகரிக்கப்பட்டு, இது குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

## இலங்கையின் நிதி நிலைமை மிகவும் ஆபத்தான நிலையில்

கொழும்பு,டிசெ.21

இலங்கையின் நிதி முறைமை மிகவும் பலவீனமாகவும், ஆபத்தான நிலையிலும் இருக்கிறது என சர்வதேச நிதி தர மதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளுக்கு இந்த நிலைமை குறித்து பிட்ச் எச்சரித்துள்ளது.

இலங்கையில் பின்பற்றப்படுகின்ற நிதிக் கொள்கை மற்றும் நிதி நிலைமைகள் குறித்து, அதிக கரிசனை காட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (த-சி)

# வெள்ள அனர்த்த நிவாரணத்துக்காக இந்து மாமன்றம் அவசர கோரிக்கை

**குறிப்பாக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத் தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது இருப் பிடத்தை விட்டு வெளியேறி அகதிமுகாம்களில் தஞ்சம் புக வேண்டி ஏற்பட்டுள்ளது.**

கொழும்பு, டிசெ.21

இலங்கையின் இந்து மத அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் இந்தவாரம் வெள்ள அனர்த்தங்களினால் வீடு வாசல்கள் மற்றும் சொத்துக்களை இழந்து உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் துயரப்பட்டுள்ள மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இந்தவெள்ள அனர்த்தத்தினால் குறிப்பாக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது இருப்பிடத்தை விட்டு வெளியேறி அகதிமுகாம்களில் தஞ்சம் புக வேண்டி ஏற்பட்டுள்ளது.

இக்குடும்பங்களின் மீட்சிக்கும் அன்றாட வாழ்வின் இயல்பு நிலைக்கு விரைவில் திரும்பவும் இவர்களுக்கு இறைவன் அருள்புரிந்திட மாமன்றம் பிரார்த்திக்கின்றது.

இந்த அனர்த்தங்களுக்கான நிவாரணம் தொடர்பாக மலையகம் மற்றும் கிழக்கில் உள்ள எமது அங்கத்துவ சங்கங்கள் மூலம் பல அவசர கோரிக்கைகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

எனவே, இவர்களுக்கான நிவாரணங்களை உடன் வழங்க அகில இலங்கை இந்து மாமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக நிதியுதவி களையும் நிவாரணப் பொருள்களையும் பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

அரிசி, மா, பருப்பு, சீனி, சிறுவர்களுக்கான பால்மா முதலிய உணவுவகைகளும் புதிய உடுதுணிகளும் பணமும் கொடுத்துதவலாம். பணமாகக் கொடுத்தால் நாங்கள் மேற்கூறிய பொருள்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்க முடியும். பணமாகக் கொடுக்க விரும்புவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் நேரடியாகவோ அல்லது இலங்கை வங்கி (லேக்கவுஸ் கிளை) கணக்கு இல: 0003268614 இற்கோ கொடுப்பனவு செய்யலாம் அல்லது நிவாரணப் பொருள்களையும் நிதியுதவிகளையும் பின்வரும் நிலையங்களில் கையளிக்கலாம்.

01. சரஸ்வதி மண்டபம் 75, லோரன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 (காணி உரிமையாளர் சம்மாங்கோடர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாகத்தினரின் அனுமதியுடன்)

02. அகில இலங்கை இந்து மாமன்றம் 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02

இது சம்பந்தமாக மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் கீழ்க்குறிப்பிட்டோருடன் தொடர்பு கொள்ளலாம். கந்தையா நீலகண்டன் - தொ.இல - 071-2723456, 2371100, டாக்டர் முத்தையா கதிர்காமநாதன் - தொ.இல - 077-7656070, 2582139, திரு. சின்னத்துரை தனபாலா - தொ.இல - 2334332, 077-7631787. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
**advt@uthayan.com**
**0215671111**




## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சொக்கலிங்கம் துரைஐயா**

(உரிமையாளர், கமலாஸ்ரோஸ், சந்திரன் பான்சி பலஸ்)

தோற்றம்:- 30.04.1934

மறைவு:- 20.12.2004

திதி:- மார்கழி பூர்வ பக்க நவமி 21.12.2012

*"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை"*

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து மறைந்த
எம் அன்புத் தந்தையே!
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லையே...
என்றும் உங்கள் நினைவுகளுடன்

**சந்திரன் பான்சி பலஸ்**
**துரைஐயா திருமண மண்டபம்**
**நவாலி வீதி. ஆனைக்கோட்டை.** (26983)(5.6.7)

**குடும்பத்தினர்,**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

## சொற்பொழிவு

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலில் இன்று முற்பகல் 11 மணிக்கு விசேட சொற்பொழிவு நடைபெறவுள்ளது. வெள்ளவத்தை இந்து சமய கலாசார நிலையச் செயலாளர் க.சிவசுப்பிரமணியும் மெய்உணர்வும் மெய்ப்பொருளும் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## தவறி விட்டது

இராசையா ஜெகதீஸ்வரன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று 17.12.2012 திங்கட்கிழமை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வேளை தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 60 50191, 077 58 50507. (27088) (6.7.4)

## பதவி வெற்றிடம்

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றின் காட்சி அறைக்கு கணினி அறிவுடைய கணக்கியல் உதவியாளர் தேவை. (பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.) 28.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினை கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்குஅனுப்பவும்.

விளம்பர இல:4425,
மே/பா. உதயன்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (27073) (6.7.4)


**வியப்பூட்டும் விலைக்குறைப்பு**
தினசரி சென்னை சேவை



சென்னை 6,400/= (செல்ல மட்டும்)
சென்னை 15,500/= upwards (சென்று திரும்ப)
மும்பாய் 10,000/= upwards (செல்ல மட்டும்)
மும்பாய் 22,000/= upwards (சென்று திரும்ப)
(all inclusive) Upwards
AIR INDIA express
Groups fares offer only over 30 passengers.
www.airindiaexpress.in
Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent




**NORTH LANKA IIT** #113, LUXAN PLAZA, NAVALAR ROAD, JAFFNA
PHONE: 0215677774

நத்தார் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
விசேட சலுகைக் கட்டணத்தில்
**புதிய பிரிவுகள் ஆரம்பம்!**

பட்டதாரியாகும் உங்கள் எண்ணத்தினை
நிறைவேற்ற அரிய சந்தர்ப்பம்!

**Courses:**
B.Sc. in Computer Science
B.Com. with Computer Application
PG Diploma in Computer Application
M. Sc. in Computer Application
MBA -- DBA


UNIVERSITY GRANTS COMMISSION
BUSINESS UNIVERSITY OF COSTA RICA -COSTA RICA

**HND** தகமையுடையவர்களுக்கான பட்டப்படிப்பு
Duration: 6 -9 Months
விசேட பிரிவு ஆரம்பம்!




பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய
வெளிநாட்டுப் பல்கலைக்கழக சான்றிதழ்கள்!

அனைவருக்கும் இனிய நத்தார், புது வருட நல்வாழ்த்துக்கள்!!


## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் சிவநேசம்



4ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சிவநேசம் 19.12.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சஜீவர்ணன், உமாவதனி, ரூபதாரணி, அஜந்தினி, நிதர்ஷன், டிலக்ஷன், டான்சன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (27067) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## கரைச்சி பிரதேசசபை–கிளிநொச்சி

### வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2013

சபையானது 2013ம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் 1000 ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 31.12.2012 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொகுதிகள்

தொகுதி "A" – பொருள்கள் வழங்குதல்( பொது)
தொகுதி "B" – பொருள்கள் வழங்குதல்( மருத்துவம்)
தொகுதி "C" – சேவைகள்/வேலை
தொகுதி "D" – வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல்( பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருள்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் நீர்க்குழாய் பைப்புக்கள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள் மணல் கல், தீராந்தி சலாகை உட்பட |
| A - 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்சாரப் பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 08 | துழ்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் , ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக், மற்றும் கிருமி நாசினிகள், ஏனையவை |
| A - 10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், கம், சப்பாத்துக்கள் |
| A - 12 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள். |

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல்( மருத்துவம்) |
|---|---|
| B – 01 | சித்த மருத்துவ மருந்துகள் |
| B – 01 | Medical/ Equipments |

| தொகுதி இல | சேவைகள் விவரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, தொலைநகல், நிழல்படப் பிரதி இயந்திரம்) |
| C - 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| C - 04 | புதிப்பக வேலை – சகல வித படிவங்கள், ஏனையவை |
| C - 05 | கட்டட திருத்த வேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல் |
| C - 06 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C - 07 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்(பெக்கோ, மோட்டர் கிரேடர், ரோலர், JCB) |
| C - 08 | கழிவகற்றல் சேவை |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D - 01 | சகல விதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு |

நிபந்தனைகள்:

01. வழங்கல்கள் / சேவைகள் 2013 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு/செயலாளருக்கு உண்டு.
03. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு/செயலாளருக்கு உண்டு.

### பட வரைஞர்களை பதிவு செய்தல்

- சபையானது 2013ஆம் ஆண்டுக்கான பட வரைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- பதிவினை மேற்கொள்வதற்கு ரூபா 1500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- முன்னர் பதிவினை மேற்கொண்டவர்களும் 15.01.2013ஆம் திகதிக்கு முன் தங்களது பதிவினைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

நிபந்தனைகள்:

1. கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.
2. பின்வரும் ஆவணங்கள் இணைத்தல் வேண்டும்.
   - வதிவிடச் சான்றிதழ்
   - படவரைஞருக்குரிய தொழில் தகைமைச்சான்றிதழ்
   - கல்வித் தகைமைச் சான்றிதழ்
   - அடையாள அட்டை நிழற்படப் பிரதி
   (இவற்றின் மூலப்பிரதிகளுடன் புகைப்படப் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

தவிசாளர்/செயலாளர்,
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி. (சி/2689)(6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

## முதலாம் திகதி வரை சனி, ஞாயிறும் கடைகளை திறக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.21

எதிர்வரும் நத்தார் புது வருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடு முறை தினங் களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியா பாரம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறக்க லாம் என்று விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்றும் யாழ். வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ஒ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் அண்மையில் நடை பெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பப்சி மரியதாசன் சிறுவர் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், சிறாரின் கரோல் நடன நிகழ்வையும் காணலாம். (3-29)

# இலங்கையில் அழிவின் விளிம்பில் பலவித விலங்குகள், தாவரங்கள்

### சுற்றுச்சூழல் அமைச்சின் 'சிவப்பு அட்டவணை'யில் தகவல்

கொழும்பு, டிசெ.21

இலங்கையில் பலவித உயிரினங்கள் மற்றும் தாவர வகைகள் அழிவின் விளிம் பில் உள்ளன அல்லது அழிந்து விட்டன என்று அரசின் "சிவப்பு அட்டவணை 2012" எனும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அபிவிருத்தி, யுத்தம் போன்ற பல காரணங்களா லேயே பல இனங்கள் அழிந்தோ அல்லது அழிந்து போகக் கூடிய நிலையிலோ உள்ளன.

இலங்கைக்கே உரிய உயி ரினங்கள் குறித்து அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள "சிவப்பு அட்டவணை 2012" எனும் அறிக்கையில் இலங்கையி லிருந்த 72 உயிரினங்கள் அழிந்து விட்டன அல்லது மறைந்து விட்டன என்பது கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான இனங்கள் குறித்து அரசின் அந்த சிவப்பு அட்ட வணையில் கவனம் செலுத் தப்பட்டுள்ளது. அந்த உயிரி னங்களின் இருப்பின் அடிப்ப டையில், அவை பல குழுக்களாகப் பிரிக் கப்பட்டுள்ளன.

அழிந்து விட் டவை, அழிவின் விளிம்பில் இருப் பவை, மிகவும் பல வீனமான நிலை யில் உள்ளவை, அண் மைக் காலங்களில் அளவில் பெருகியுள் ளவை என அவை பட்டி யலிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட் டத்தின் பாசிக்குடாப் பகுதி யில் இருந்த ஒரு வகையான கண்டல் தாவரமும், கரடிய னாறு பகுதியில் தும்பாலை எனப்படும் ஒருவகை மர மும் முற்றாக காணாமற் போயுள்ளன.

இதேபோல ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வகையான தாவரங்கள் காணாமற் போயுள் ளதைக் கண்டுபிடிக்கக் கூடி யாத இருக்கும் என கிழக்கு பல்கலைக்கழகத்தின் தாவர வியல் பேராசிரியரான கலா நிதி தங்கமுத்து ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தசிவப்பு அட்டவணை அரசுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். அழிவின் விளிம்பில் உள்ள இனங் களை காப்பாற்ற அடுத்து என்ன செய்யலாம் எனவும் வல்லுநர் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. (3)

# பூவரசம் குழைக்கு வந்தது மவுசு

### ஒரு லான்ட் மாஸ்ரர் ரூபா 2000–3500 வரை விற்பனை

வடமராட்சி, டிசெ.21

புகையிலைச் செய்கைக்கு பசளையாக பூவரசங் குழை அதிக அளவில் பயன்படுத்தப் படுவதால் அதற்கு மதிப்பும், கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஒரு லான்ட் மாஸ்ரர் பூவரசங்குழை 2000-3500 ரூபா வரை விற்பனை யாகி வருகின்றது. குழைத் தரகர்கள் லான்ட் மாஸ்ரர் களில் ஏற்றிவரப்படும் குழை களின் பாரத்தைப் பொறுத்தே இதன் விலையைத் தீர்மா னிக்கின்றனர். தரகர்கள் தீர்மானிக்கும் விலைக்கு புகையிலைச் செய்கையா ளர்கள் பூவரசங் குழையைக் கொள்வனவு செய்கின்றனர்.

புகையிலைப் பயிர்ச் செய் கையை மேற்கொள்ள முன் னர் நிலங்களைக் பண்படுத் தும்போது, புகையிலை நாற் றுக்களை நட்டு ஒரு மாதத் துக்குப் பின்னரும் காவிளாய், பாவட்டை, வேம்பு, பூவரசங் குழைகளைப் பச்சைப் பச ளையாக தோட்டங்களில் வெட் டிப் புதைப்பது வழக்கமாகும்.

போருக்கு முன்னர் லொறிகளில் பூவரசங்குழை கள் தவிர்ந்த ஏனைய குழை கள் முல்லைத்தீவு மாவட்டத் திலிருந்து வருவதுண்டு. முல்லை மாவட்டத்தில் மக் கள் குடியேற்றம் இன்னமும் சீரடையாத நிலையில் பச் சைக் குழைகள் அங்கிருந்து எடுத்து வரப்படுவ தில்லை.

> போருக்கு முன்னர் லொறிகளில் பூவரசங் குழைகள் தவிர்ந்த ஏனைய குழைகள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வருவதுண்டு.

இதன் காரணமாக உள் ளூரில் உள்ள பூவரசங் குழைக்கு மதிப்பும் கிராக்கி யும் ஏற்பட்டுள்ளது. கரவெட்டி, வரணி, குடத்தனை, செம்பி யன்பற்று போன்ற இடங்க ளிலிருந்து தினமும் பல லான்ட் மாஸ்ரர்களில் பூவர சங்குழைகள் எடுத்துவரப் படுகின்றன.

மந்திகைச் சந்திக்கு அண மித்த இடத்தில் ஒன்றுசேரும் லான்ட் மாஸ்ரர்களில் கொண்டுவரப்படும் பூவரசங்குழைகளை புலோலி, அல்வாய் பகுதிக ளைச் சேர்ந்த புகையிலைச் செய்கையாளர்கள் தரகர்கள் மூலம் கொள்வனவு செய்து புகையிலைத் தோட்டங்க ளுக்குக் கொண்டு செல்கின் றனர். (3-8)

# விக்கின விநாயகருக்கு புதிய வசந்த மண்டபம்

யாழ்ப்பாணம், டிசெ.21

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விக்கின விநாயகர் ஆலயத்துக்கு புதிய வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட காலமாக திருவிழா காலங்களின் விசேட தினங் களில் சுவாமியைப் பழைய வசந்த மண்டபத்தில் வைத்து பூசை செய்வது சிரமமாக இருந்து வந்தது.

அதனைத் தொடர்ந்து ஆலய நிர்வாகம் மேற் கொண்ட முயற்சியால் அந் தப் பகுதி மக்களின் பங்க ளிப்புடன் புதிய வசந்த மண் டபம் அமைக்கப்பட்டு வரு கின்றது.

இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக் கலைஞர்கள் மேற்படி பணியை மேற்கொண்டு வருகின்றனர். (3-422)

## ARTEXCEL
### சகல துறையிலும் முன்னேறப் பயிற்சி



**சிறுவர் பயிற்சி**

சர்வதேச அங்கீகாரம் பெற்ற வாழும் கலை மையம் 152இக்கும் மேற்பட்ட நாடுகளில் இப்பயிற்சியை அளித்து வருகிறது.

வயது: 8 முதல் 15 வரை

பெறும் நன்மைகள்
* ஞாபகசக்தி அதிகரிக்கிறது, மனம் ஒருமுகப்படுகிறது.
* பரீட்சை,விளையாட்டு, ஆக்கத்திறன் என்பவற்றில் சிறப்பாக செயல்பட வைக்கிறது.
* சோம்பலை அகற்றி, ஆரோக்கியத்தையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கிறது.
* தன்னம்பிக்கையை வளர்த்து, சந்தோஷத்தைப் பெருக வைக்கிறது.
* மனத்தை அமைதியடைய வைக்கிறது.

செயல்முறை:
சுவாசப் பயிற்சி,யோகாசனம்,சிறுவர் கிரியா, தியானம், விளையாட்டுகள், இசை என்பன பரிமாற்ற முறையில் இணக்கமும் குதூகலமும் நிரம்பிய சூழலில் கற்பிக்கப்படும்.

இடம்: மகேஸ்வரன் மணி மண்டபம்,நல்லூர்,யாழ்ப்பாணம்.
திகதி: 24.12.2012 - 28.12.2012
நேரம்: காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை

முன் பதிவுக்கு
077 760 7008

(21044)(5-6-7)

## சிவாச்சார்யார் (குருக்கள்) தேவை

நோர்வே (Norway) பேர்கனில் (Bergen) அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலயக் குருக்களாக பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்**

★ சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
★ சிவாகமமுறைப்படி சகல அபிஷேகங்கள், பூசைகள் மற்றும் அனைத்து கிரியைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ சாத்துப்படி மற்றும் மடப்பள்ளி வேலைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
★ சமய சொற்பொழிவாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ பதவிக்காலம் ஆகக்கூடியது இரண்டு வருடங்கள்.
★ தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
★ ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடைபெறுகின்றது.

*தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 15.01.2013 இற்கு முதல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

Bergen Hindu Sabha,
Storetveit veien 5,
5067 Bergen,
NORWAY.
மேலதிக தொடர்புகளுக்கு: +47 941 46 069 / +47 951 94 824
E-mail: styret@bergenhindusabha.info,
www.bergenhindusabha.info

(27068)(2-8)

# நினைவலைகள்...

8 ஆம் ஆண்டு — 25 ஆம் ஆண்டு



தோற்றம் 1934-04-30 — மறைவு 2004-12-20

தோற்றம் 1959-07-12 — மறைவு 1987-10-19

## அமரர் சொக்கலிங்கம் துரைஐயா — அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

**(உரிமையாளர்கள்- கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)**

(திதி - 21.12.2012)

"அன்பு எனும் சொல் அதனை பாசம் என்னும் வலை வீசி
உறவு என்னும் ஓடம் அதில் உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
ஆண்டுகள் பல ஆனாலும் பொங்கி வரும் கண்ணீருக்கு அளவில்லையே
உங்களை நினைத்து ஏங்குகின்றோம்."

பாசத்துடன்
குடும்பத்தினர்.

கமலா ஸ்ரோஸ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(27060)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களில் பயன்படுத்தப்படும் அறிவியல் தொழில்நுட்பங்கள்

பறக்கும் கார்களோ அல்லது ட்ரான்ஸ்போர்மர்ஸ் திரைப்படத்தில் காட்டுவதைப் போன்ற ராட்சத வடிவிலான வாகனங்களோ உற்பத்தி செய்யப்படவில்லை என்பதே நிதர்சனம். நாமும் எவ்வளவு நாள்கள் தான் காத்திருப்பதென்றும் தெரியவில்லை.

ஆனால் சில தினங்களுக்கு முன் அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்ற LA ஓட்டோ கண்காட்சி 2012 வாகனங்களில் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட சில அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அவற்றிலிருந்து சிறந்த 4 இங்கே தரப்பட்டிருக்கிறது.

## நியூ டொயோடா ராவ்4 ஒப்ஸ்:




டொயோடா நிறுவனத்தின் புதிய காரில் உள்ள என்டியூன் என்ற அமைப்பின் வாயிலாக பல்லிங், திரைப்பட அனுமதிச் சீட்டுப் பெறுதல் மற்றும் ஐஹார்ட் ரேடியோ என்ற பிரபல வானொலியைக்கூட கேட்கலாமாம். இந்தக் காரில் உள்ள டாஸ்போர்டு என்ற அமைப்பிலிருந்து ஸ்மார்ட்போனுக்கு கூட இணைப்பை ஏற்படுத்தலாம்.

## மெர்சிட்ஸ் பென்ஸ் எனெர் ஜி ப்போர்ஸ்



கொன்செப்ட் எனப்படும் வடிவமைப்புகளை எப்பொழுதும் பெரிய ப்ளாஷ் மெட்டல் எனப்படும் ஒரு வகை உலோகத்தைக் கொண்டே வடிவமைப்பார்கள். ஆனால் இந்த எனெர் ஜி போர்ஸ் சற்று வித்தியாசமானது. கரடு முரடான பாதைகளில் சென்றாலும் சஸ்பென்சன் என்ற அமைப்பு சிறப்பாகச் செயற்படும் வகையில் டெர்ரா ஸ்கேன் என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேடுபள்ளங்களைக் கொண்ட வீதிகளில் செல்லும்பொழுது தானாக வசதிக்கேற்றவாறு சிறப்பான பயண அனுபவத்தைத் தரும்.

## செவி ஸ்பார்க் அண்ட் சிறி:




இந்தக் கார் அடுத்த வருடம் வெளியிடப்படுமென்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஐபோன் பயனாளர்கள் சிறி என்ற சாதன அமைப்புடன் பேசும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மனித வார்த்தைகளைப் புரிந்துகொள்ளும் தன்மைகொண்டது. இந்த செயற்பாடானது செவி மைலிங்க் ஒப் என்ற ஒரு மென்பொருள் மூலம்தான் சாத்தியப்படும். ஒரு தடவை இணைத்தாலே போதும் இணையம் வழியாக பலவகைப் பட்ட தகவல்களை நீங்கள் பெறமுடியும். உதாரணத்துக்கு பெற்றோல் விலை, வழித்தடங்கள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை SMSகளில் கூடப்பெற முடியுமென்பது இதன் தனிச்சிறப்பு.

## செரிஸ்லெர் ஸ்ப்ரிண்ட் வெலாசிடி:



கார்களில் பயன்படுத்தப்படும் கணினிகள் மிகவும் சிறந்த செயற்திறன் கொண்டவை. இவற்றின் மூலமாக வெப்பநிலை, உள்ளூர் சந்தைகளில் விற்கப்படும் பொருள்கள் விலைவரை அனைத்தையும் பெற முடியும். இந்தக் கார் பல வழித்தடங்களைப் பார்க்க உதவுகிறது. மேலும் விபத்து ஏதாவது நேர்ந்தால் சம்பந்தப் பட்டவர்களுக்கு குறுஞ் செய்தி கூட அனுப்பிவிடும். விளையாட்டுகளின் ஸ்கோர்களைகூடப் பெற முடியும் என்பதே இதன் தனிச்சிறப்பு.

# அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய Xiaomi MI-3 கைபேசிகள் அறிமுகம்




கைபேசி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள போட்டி காரணமாக வும், அதன் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாகவும் தொடர்ச்சியாக பல புதிய தொழில்நுட்பங் களுடன் கூடிய கைபேசிகள் அறிமுகமாகிய வண்ணம் உள்ளன.

இவற்றின் வரிசையில் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் Xiaomi MI-3 எனும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய கைபேசிகள் அறிமுகமாகக் காத்திருக்கின்றன.

அடுத்த தலைமுறை தொழில்நுட்பமான NVIDIA Tegra 4 Chipset -ஐ கொண்டு உருவாக்கப்படும். இவை 4.5 அங்குல தொடுதிரையைக் கொண்டதாகக் காணப்படுகின்றன.

மேலும் 1.8 GHz - 2 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய quad&core Cortex-A15 CPU மற்றும் பிரதான நினைவகமாக 2.5 GB RAM ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளதுடன் 12 மெகாபிக்சல்கள் கொண்ட கமராவும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Android சாதனங்களுக்கான புதிய Application

இயங்குதளங்களின் வரிசையில் அண்மையில் கூகுள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தி மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்று வரும் இயங்குதளமாக Android காணப்படுகின்றது.

இந்த இயங்குதளத்தில் நிறுவி பயன்படுத்தக்கூடிய பிரயோக மென்பொருள்கள் தொடர்ந்து வெளியிடப்பட்ட வண்ணம் இருக்கின்றன. இவற்றின் தொடர்ச்சியாக MotionGraph எனும் புத்தம் புதிய பிரயோக மென்பொருள் (Application Software) ஒன்றை சொனி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தமென்பொருளானது எடுக்கப்படும் புகைப்படங்களை அனிமேஷன்கள் ஆக மாற்றியமைப்பதற்கும், வீடியோ கோப்புக்களை GIF கோப்புக்களாக மாற்றியமைப்பதற்கும் பயன்படுகின்றது.

1.18 டொலர்களே பெறுமதியான இம்மென்பொருளினை Google Play Store தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

# Kingston அறிமுகப்படுத்தும் புதிய வயர்லெஸ் சேமிப்பு சாதனம்




சேமிப்பு சாதனங்களை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற நிறுவனமான Kingston இணைப்பு வசதிகள் அற்ற (Wireless) துணைச்சேமிப்பு சாதனத்தை அறிமுகப்படுத்துகின்றது.

WiDrive என்று அழைக்கப்படும் இந்தச்சாதனமானது தற்போது iOS மற்றும் Android இயங்குதளங்களை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்றது. 121.5mm x 61.8mm x 9.8mm அளவுடைய இந்த சேமிப்பு சாதனமானது 32GB, 64GB மற்றும் 128GB அளவுகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் இவற்றின் பெறுமதியானது 176 அமெரிக்க டொலர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் பெரும்போக நெற்செய்கைக்கு பாதிப்பில்லை

மட்டக்களப்பு, டிசெ.21

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தற்போது செய்கை பண்ணப்பட்ட பெரும்போக நெற் செய்கைக்கு எவ்வித பாதிப் புகளும் ஏற்பட வில்லை என்று மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் டாக்டர் ஆர்.ருஷாங்கன் தெரிவித்தார்.

குறித்த மாவட்டத்தில் இம்முறை ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப் பில் பெரும்போக நெற் செய்கை பயிரிடப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போர் ஓய்ந்த பின்னரும் தொடரும் கைதுகள்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராஜசிங்கம்

மட்டக்களப்பு,டிசெ.21

இலங்கையில் போர் ஓய்ந்த பின்னரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்த வண்ணமுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சட்டத் தரணியுமான கி.துரைராஜசிங்கம் விசனம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நல்லையா வீதியில் அமைந்துள்ள தமி ழரசுக் கட்சி மாவட்ட அலு வலகத்தில் நடைபெற்ற கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி அங்குராப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தலைமைத்துவம் தலை வர்கள் என்று கூறுகின்ற போது பெனின் கூறுவார் பின்னே இருக் கின்றவர் களை இழுத்துக் கொண்டு செல்பவனாகவும் முன்னே செல்பவரை தடுத்து சமப்ப டுத்திக் கொள்ளக் கூடியவ ராக வும் எல்லோரையும் சம மாக கொண்டு செல்லக் கூடியதாக தலைமைத்துவம் இருக்க வேண்டும்.

அண்மையில் யாழ். பல் கலைக் கழகத்திலே நடந்த நிகழ்விலே அந்த நிகழ்வு வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம், அதனை உலகிலே எடுத்துக் காட்டும் விதம், அதை எம்மவர்கள் எடுத்துக் கையாளும் விதம் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு முன் முள்ளிவாய்காலிலே இராணு வம் நகர்ந்து கொண்டி ருக் கும் போதெல்லாம் இவ்வா றான பெரிய போராட்டங்கள் நடத் தப்பட்டன. அவை ஒன்றுமே செவிமடுக்கப் படாத யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இளைஞர்களைக் கையாள் வதிலே மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். தலைமை தாங்குபவர்கள் பல கசப்புகளைத் தாங்குபவர்களாக இருக்க வேண்டும். எதிர்ப்பு களை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கவேண்டும்.

நாட்டில் போர் முடிந்த பின்னர் முதன்முதலாக பயங் கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் கட்டளையிட்டு செயலாக்கப் பட்ட முதல் கைது இதுவே. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரி பீடாதிபதிகள் பாதுகாப்புச் செயலாளர் பேசியும் விடுதலை செய்ய முடியாது என்று கூறியுள்ளார்.

6 மாதத்திற்கு அதற்கு எதி ராக ஆட்கொணர்வு மனு தாக் கல் செய்ய முடியாது. கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதர வாக எதுவும் செய்ய முடியாது. இந்நாட்டின் பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள விதிகள், ஏற்பாடுகளின் படி உலக நாடுகளில் எந்த வொருநாடும் கைக்கொள்ளும் சட்ட விதிகளைக் கூட நாம் கைக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது- என்றார்.


## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து சரோஜினி தேவி



எமது அன்பு அம்மா எம்மைவிட்டு
பிரிந்ததையிட்டு நாம் ஆழ்ந்த
துயரடைவதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் றோட்,
3 ஆம் ஒழுங்கை,
மருதனார்மடம்.

பிரிவால் துயருறும்
ஜெ. அகிலன்

## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி
உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா
அவர்களின் கனிஷ்ட புத்திரி
சுஜானி நடராஜா
அவர்களின் மறைவினால் துயர் உற்றிருக்கும்
குடும்பத்தார்க்கு ஆறுதல் கூறுவதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.



கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், கோட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள்,
சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம். (27072)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து சரோஜினி தேவி



எமது அன்பு நண்பன் சரவணமுத்து சசீந்திரராஜா
(ராசன்) அவர்களின் பாசமிகு தாய்
சரவணமுத்து சறோஜினி தேவி அவர்களின் பிரிவால்
துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின் றோம்

பிரிவால் துயருறும்.

டினா(சங்குவேலி), பிரனா(உடுவில்) நண்பர்கள்

## விற்பனைக்கு

சனா (chana) இன சிறிய ரக
வாகனமும் மற்றும் (எல்ப் இஞ்சின்
லிஸ்டர் மொடல் ) மின்
பிறப்பாக்கியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0716357267

(சு/27700)(6.7.8)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கோண்டாவிலில் வசிக்கும் சிறிய அரச உத்தி யோகத்தர் குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. வேலை மிகவும் குறைவு. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். (27080)()

0770872446

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No -1
புறொயிலர் குஞ்சுகள்,
22.12.2012
விநியோகிக்கப்படும்
றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P : 077 609 0926

(26958)(6-7-45)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்:
1933.08.01

விண்ணில்:
2008.12.07

அமரர் சுப்பையா
தட்சணாமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

வருடங்கள் நான்கு
சென்றதே அப்பா
ஆனாலும் எங்கள்
ஈரவிழிகள் காயவில்லையே-
கல்வி தந்து உங்கள் செல்வமெல்லாம்
தந்து நாம் வல்லவராய் நல்லவராய்
வாழ வைத்த எங்கள் அன்புத்தெய்வமே
உங்கள் அன்பான திருமுகத்தை
என்று நாம் காண்போம் அப்பா !
என்றும் தங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்
இணுவில். (27070)(6.11)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சறோஜினிதேவி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், தையிட் டியை வசிப்பிடமாகவும், தற்போது மருதனார் மடத்தில் வசித்துவந்த வருமான சரவணமுத்து சறோஜினிதேவி நேற்று (20.12.2012) வியாழக் கிழமை பிற்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான தம்பிஐயா - மகேஸ்வரி தம்பதி யரின் புதல்வியும், இராசையா - காலஞ்சென்ற முத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சசிகுமார் (பிரான்ஸ்), சசிந்திராஜா (ராசன் குட்டிப்பிள்ளையார் ரவல்ஸ்), ஜீவகுமார் (பிரான்ஸ்), வினோபா (ஜேர்மனி), தர்சினி, சசிகரன் (ஸ்ரீ முருகன் கபே), ஜெயராணி, ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தாயும், கலா, சுதாயினி, சுமிதா, சுகிர்தன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற யேகேஸ்வரி, சிவஞானசோதி, றஞ்சினிதேவி, விமலாதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் ஒழுங்கை
மருதனார்மடம். (27084)(3.14)

தகவல்:
சசீந்திரராஜா (மகன்)
(குட்டிப் பிள்ளையார் ரவல்ஸ், மருதனார்மடம்).

## RAJ MOVIE PRODUCTION JAFFNA

திரைப்படக்கலைஞர்கள் தேவை யாழ்ப்பாணத்தில்
ராஜ் மூவிஸ் புறொடக்சன்ஸ்
என்ற திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தினால்
தயாரிக்கப்படப்போகின்ற முழு நீளத்திரைப்படத்திற்கான
ஆர்வமுள்ள

நடிகர்கள் / நடிகைகள்
உதவி இயக்குனர்கள்
உதவி ஒளிப்பதிவாளர்கள்
ஒப்பனை கலைஞர்கள் / தொழிநுட்பக் கலைஞர்கள்
சினிமா துறையில் ஆர்வமுள்ளவர்கள்

அனைவரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்

காலம் : 23.12.2012
நேரம் : 10.30 மணி
இடம் : இராஜேஸ்வரி திருமண மண்டபம் பலாலி வீதி கோண்டாவில்

தொடர்புகளுக்கு: 077 4004116 / 077 6629158 / 077 0222230


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்லக்கண்டு மகேஸ்வரி

ஊரிக்காடு, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு மகேஸ்வரி நேற்று (20.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லக்கண்டுவின் அன்பு மனைவியும், அரசரத்தினம், தங்கவடிவேல் (ஆசிரியர் - கிளி/பூநகரி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பராணியின் அன்பு மாமியும், தயாழினி, பிருந்தா, வசந்தரூபி (பட்டதாரி பயிலுநர் - பிரதேச செயலகம், கோப்பாய்), வர்ணரூபன் (மலேசியா), டிபர்சன் (மாணவன் - தொழில் நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நடராசா, கந்தசாமி, தங்கமணி மற்றும் செல்லப்பாக்கியம் (பிரான்ஸ்), நாராயணபிள்ளை, தங்கராஜா, யோகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(27001) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஏறாவூரில் இளைஞரின் சடலம் மீட்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி சிங்காரத் தோப்பு கிராமத்தில் இளைஞர் ஒருவரின் சடலத்தை ஏறாவூர் பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்டுள்ளனர்.

ஐயங்கேணி சிங்காரத் தோப்பைச் சேர்ந்த வீரசிங்கம் ஜெயபாலன் (வயது 26) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து ஈச்சை மர தோப்புக்குள் சென்ற இவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால் உறவினர்கள் இவரை தேடிச் சென்றுள்ளனர். இதன்போது இவர் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

தற்போது சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அடிக்கடி மயங்கி வீழ்வதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# அறிவித்தல்

**சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்**

2013 ஆம் ஆண்டுக்கான சாவகச்சேரி பிரதேச சபையின் நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168 ஆம் பிரிவுக்கு அமையத் தயாரிக்கப்பட்டு 28.12.2012 வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

சிற்றம்பலம் துரைராசா, தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

(இ/2698) (45.6.7)

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் முத்துமணி



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,தற்போது கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் முத்துமணி நேற்று (20.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானசுந்தரத்தின் மைத்துனியும், காலஞ்சென்ற ஞானலிங்கம் மற்றும் செல்வலிங்கம், ஞானமணி (ஓய்வுபெற்ற அதிபர்,மண்டைதீவு கார்த்திகேய வித்தியா சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவாஜி,என்நிதி, மற்றும் பிரேமதாஸ், நிறைமதி(ஆசிரியை,யா/இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ராகினி மற்றும் சோமலதா ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷனா, கவினா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகநாதன்வீதி,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில். (27074)(5-6-7)

தகவல்:
பிள்ளைகள்.


பண்டிகைக் காலமும் விலைக்கழிவும்




கொமர்ஷல் வங்கியின் கிறடிட் அல்லது ஷொப்பிங் டெபிட் கார்ட்டுகளை உபயோகித்து டிசெம்பர் மாதத்தில் விரும்பிய விற்பனை நிலையங்களில் விலைக்கழிவுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இச் சலுகை டிசெம்பர் மாதம் 15 முதல் 28 வரை மட்டுமே செல்லுபடியாகும்

நீங்களும் கொமர்ஷல் வங்கி கார்ட் ஒன்றை இன்றே பெற்று இச்சலுகைகளை அனுபவியுங்கள்.



COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

+94 112 353 353 www.combank.lk

(இ/2718)(2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.முதலாம் குறுக்கு வீதியின் குருநகர் பகுதியில் வீதியை காப்பெற் வீதியாக அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (3-135)

# தமிழர்களுக்கானது ஜனவரி மாதம்

## ஜோர்க் நகராட்சி அறிவிப்பு

ஜோர்க் நகராட்சி ஜனவரி மாதத்தை தமிழர்களின் பாரம்பரிய மாதமாக அங்கீகரித்திருக்கிறது.

டிசம்பர் 13ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இந்த தீர்மானத்தை பிராந்திய உறுப்பினர் ஜிம் ஜோன்ஸ் முன்மொழிய அதை மற்றொரு உறுப்பினர் ஜாக் ஹீத் வழி மொழிந்தார். ஜனவரி மாதத்தை தமிழர்களின் பாரம்பரிய மாதமாக அறிவிக்க வேண்டும் என கனடா மார்க்கம் தமிழ்ச் சங்கம் கோரிக்கை வைத்திருந்தது.

2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஜோர்க் பகுதியில் வீடுகளில் அதிகம் பேசும் மொழியாக தமிழ்மொழி இருக்கிறது.

**2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஜோர்க் பகுதியில் வீடுகளில் அதிகம் பேசும் மொழியாக தமிழ்மொழி இருக்கிறது.**

ஏறத்தாழ 26000 தமிழ்க் குடும்பத்தவர்கள் ஜோர்க் மாவட்டத்தைதாம் வசிப்பதற்கும் பணி புரிவதற்கும் சிறந்த இடமாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

'பிராந்திய அளவில் அங்கீகரிக்கப்பட்டிருப்பது தமிழர்கள் கொண்டாடுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. இது கனேடிய தமிழர்களின் பங்களிப்புக்கு ஒரு அங்கீகாரம்' என்று ஜுவனிதா நாதன் தெரிவித்துள்ளார். இவர் மார்க்கம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் பொதுப் பள்ளி வாரியத்தின் உறுப்பினராகவும் இருக்கிறார்'

தமிழ் பாரம்பரிய மாதம் வேண்டும் என்ற முதல் கோரிக்கை 2010ஆம் ஆண்டு தமிழ் பாரம்பரிய மாத ஒருங்கிணைப்புக் குழுவால் வைக்கப்பட்டது. இந்தக் குழு இருபது பெரிய சங்கங்களை உள்ளடக்கியது. தமிழ் பாரம்பரிய மாதத்தை மார்க்கம், ரொறான்ரோ, பிக்கரிங், விட்பி, அஜாக்ஸ் போன்ற நகரங்களும் அனுசரிக்கின்றன.மார்க்கம் நகரில் உள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களை இணைக்கும் பாலமாக மார்க்கம் தமிழ்ச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

## கட்டாக்காலி நாய்களால் வீதி விபத்துகள் அதிகரிப்பு

தென்மராட்சி,டிசெ.21

வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பால் மோட்டார் சைக்கிளில் செல்வோர் விபத்துக்கு உள்ளாகி வரும் சம்பவங்கள் தென்மராட்சி பிரதேசசங்களில் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

கடந்த மாதம் பெய்த மழையையடுத்து கட்டாக்காலி நாய்களும் வளர்ப்பு நாய்களும் வீதிகளில் தஞ்சமடைந்து போக்குவரத்து வாகனங்களுக்கு பெரும் இடையூறுகளை எற்படுத்தி வருகின்றன. ஏ-9 வீதி உட்பட பல்வேறு வீதிகள் காப்பெற் வீதிகளாகவும் தார் வீதிகளாகவும் மாற்றப்பட்டு வருவதால் வாகனச் சாரதிகள் கட்டுமீறி அவற்றைச் செலுத்துகின்றனர்

இந்த நிலையில் வீதிகளில் தஞ்சமடைந்துள்ள நாய்கள் திடீரென வாகனங்களுக்குள் சிக்குவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை மோட்டார் சைக்கிளுக்குள் நாய் சிக்கியதால் இரு இளைஞர்கள் காயமடைந்தனர். தனங்கிளப்பு சந்தியில் இடம் பெற்ற விபத்தில் கிளி நொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த துரைராஜா அகிலன்(வயது-24) என்பவருக்கு தோள் எலும்பில் பாதிப்பு ஏற்பட்டதுடன் கச்சாய் சந்தியில் இடம் பெற்ற விபத்தில் கெற்பேலி மத்தியைச் சேர்ந்த தர்மகுலசுப்பிரமணியம் ஜெயதாஸ்(வயது-24) என்பவருக்கும் காயமேற்பட்டது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

(3-9)

## விவசாயப் போதனாசிரியர் போட்டிப்பரீட்சை பிற்போடல்

திருகோணமலை,டிசெ 21

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கிழக்கு மாகாண விவசாய போதனாசிரியர்களுக்கான திறந்த போட்டிப் பரீட்சை காலநிலை பாதிப்பினால் பிற்போட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை, மற்றும் கல்முனையில் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை மீள அனுப்பி வைக்கப்படும்**

பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை மீள அனுப்பிவைக்கப்படுமென கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எச்.ஈ.எச்.டபிள்யு திசாநாயக்க தெரிவித்தார்.

(வ-40)

## மின் இணைப்புக்கு நிதி ஒதுக்கீடு

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொன்னாலை பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்துக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் சங்க நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்துக்கு மின் இணைப்பு பெறப்படாமையால் அவர்களுடைய அபிவிருத்தி செயல் திட்டங்களை முன்னெடுப்பதில் பாரிய பின்னடைவுகள் காணப்பட்ட நிலையில் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

(3-86)

### வல்லையில் பறந்த முதியவரின் பட்டம்




வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைச்சாமி நவரட்ணம் என்னும் 91 வயதான முதியவர் 29 அடி உயரப் பட்டத்தைக் கட்டி வல்வெட்டித்துறைக் கடற்கரையில் பறக்க விட்டுள்ளார். தனது 91 வயதான தள்ளாத வயதிலும் மனம் தளர்ந்து விடாது பட்டத்தை கட்டி ஏற்றியுள்ளமை பலதரப்பட்டோராலும் வரவேற்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் புதன்கிழமை இந்தப் பட்டம் ஏற்றப்பட்டது. உதயசூரியன் விளையாட்டுக்கழகம் கடந்த பொங்கலை முன்னிட்டு நடத்திய போட்டியில் இவரது பாய்க்கப்பல் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.1942 இற்கு முன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் வேலை செய்த பாய்க்கப்பல் போன்றே இந்தப் பட்டம் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-253)

## முக்திக்கு வழி பக்தி

பக்தி செய்தால் எளிதில் முக்தி பெறலாம்.நந்தனார் பாடுகிறார் ''பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமே''

நீங்கள் காட்டுக்குப் போகவேண்டாம், காய்கனி, கந்த மூலகங்களை உண்ணவேண்டாம், தலைகீழாக நிற்க வேண்டாம், அதெல்லாம் வழியில்லை.

சென்னையில் ஒரு தெரு உண்டு. தங்கசாலை என்றதெரு வழியாகச் சென்று கொண்டே இருந்தால் அதே தெரு பாதிக்கு மேல் திருவெற்றியூர் நெடுஞ்சாலையாக மாறிவிடும். அதுபோல இறைவனை நினைத்து நினைத்து, பயன் கருதலாம் உருகிய உள்ளத்துடன் பக்தி செய்தால் முக்தி வந்துசேரும்'' முக்திக்கு வழி பக்தி'' என்பதை உணர்ந்து எல்லோரும் பக்திசெய்ய வேண்டும்.




பக்தி என்பது வடசொல். அன்பு என்பது தென்சொல். இறைவனை அன்பு ஒன்றால்தான் அடையமுடியும்''பக்தி வலையில் படுவோம் காண்க'' என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர்.'' அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே'' என்கிறார் ராமலிங்க அடிகளார். '' மூன்று வேளை நன்றாகச் சாப்பிடுங்கள். நன்றாக ஆடை அணிந்து கொள்ளுங்கள். அலுவலகத்துக்குப் போய்க்கொள்ளுங்கள். ஆனால் உள்ளத்தில் பக்தி இருக்க வேண்டும்.பக்தி இருந்தால் தெய்வம் உங்களைத் தேடிக் கொண்டு வரும். வேலை செய்தால் கூலி தானாக வரும்தானே? வேலைக்கு தகுந்த கூலி நிச்சயம் கிடைக்கும். சோம்பேறித் தனமாக இருந்தால் எவன் கூலி தருவான் ? '' ஓம் நமச்சிவாய நம'' என்பதை விட ஒரு மகாமந்திரம் சைவர்களுக்கு கிடையாது. ''சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை'' என்கிறார் ஔவையார்.மற்றச் சமயத்தவர்கள் அவரவர் தெய்வங்களின் மகாமந்திரங்களை தினசரி சொல்லி ஜெபசக்தி பெற வேண்டும். நித்திய வாழ்க்கையில் ரயிலில் போகிறபோதும், பஸ்ஸில் போகிற போதும், காரில் போகிற போதும்சைக்கிளில் போகிற போதும் அல்லது எந்த வாகனத்தில் பிரயாணம் செய்யும் போதெல்லாம் உங்கள் வாழ்நாளில் எத்தனைக்கு உத்தனை மாகாமந்திரங்களை விடாமல் சொல்லிக்கொண்டே வந்தால் அத்தனைக்கத்தனை மகாமந்திரம் கடைசியாக உங்கள் ஆத்மா பிரியும்போது ஒரு தொகையாக வரும். நாமும் எப்பொழுதும் மகா மந்திரங்களை ஓதிக்கொண்டிருப்போம்.

## 654 மில்லியன் செலவில் யாழ். பல்கலைக்கு மாணவர் விடுதிகள்: அமைச்சரவை அங்கீகாரம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதிகளை அமைப்பதற்கு 654.4 மில்லியன் ரூபாய்களை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க முன்மொழிந்த பிரேரணையை கடந்த புதன் கிழமை அமைச்சரவை அங்கீகரித்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகளுக்கென தனித்தனியே சுமார் 400 கட்டில்களைக் கொண்டதாக இரு விடுதிகள் அமையவுள்ளது. இவற்றுக்கான ஆரம்ப கட்டப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருப்பதுடன், ஐந்து வருடங்களுக்குள் இந்தப் பணிகள் பூர்த்தியாக வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புகள் மற்றும் பட்டப்பின் படிப்புகளைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் 1,300 க்கு மேற்பட்டவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆவர். தற்போது உள்ள விடுதி வசதிகள் [illegible] போதுமானதாக இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமையவுள்ள பொறியியல் பீடத்துடனான விவசாய பீட கட்டடத்துக்கான ஆரம்ப கட்ட நிதி ஒதுக்கீடாக 2,437 மில்லியன் ரூபாவையும் ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தப் பணி [illegible] ஆரம்பித்து ஐந்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாகல வர்ண இரவு நேற்று

வலி.வடக்கு, டிசெ.21

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'வர்ண இரவுகள்' நிகழ்வு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் கோலாகலமாக இடம் பெற்றது. இதன்போது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், விளையாட்டுத் திணைக்கள அதிகாரிகள், பயிற்றுநர்கள் உள்ளிட்ட 500 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

விழாவின் ஆரம்பத்தில் விருந்தினர்களும் வீரர்களும் 'பாண்ட்' வாத்திய மரியாதையுடன் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப் பட்டனர்.

விழா மண்டபத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம், மங்களவிளக்கேற்றல் என்பவற்றுடன் விழா ஆரம்பமானது.

மூன்றாவது வருடமாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்த 'வர்ண இரவுகள்' நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 300 க்கும் மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வீரர்களை பயிற்றுவித்து, அவர்கள் வாகைசூடி பதக்கங்களைப் பெற உந்துதலாகச் செயற்பட்ட குறித்த வீரர்களின் பயிற்றுவிப்பாளர்களுக்கும் இந்த வருடம் முதல் முறையாக கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்த வருடம் மாகாண, தேசிய மட்டங்களில் சாதனைகளை நிகழ்த்திய பாடசாலைகள், கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் விளையாட்டுத்துறைக்கு சேவையாற்றியோர் என்போர் இந்த வர்ண நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

உதைபந்து, கராத்தே, கபடி, உடற்பயிற்சி, மெய்வன்மை, கிரிக்கெட் போன்ற நிகழ்வுகளில் தேசிய, மாகாண ரீதியில் சாதனை படைத்தவர்களே இந்தக் கௌரவிப்பை பெற்றனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 213 வீர, வீராங்கனைகளும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 42 வீர, வீராங்கனைகளும் ,மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 35 வீர, வீராங்கனைகளும் கிளிநொச்சிமாவட்டத்தைச் சேர்ந்த 10 வீர, வீராங்கனைகளும் இதன்போது விருது பெற்றனர்.

இந்த வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பதக்கங்களுடன், பணப்பரிசில்களும் இதன்போது வழங்கப்பட்டன. இது தவிர தேசிய மட்டம் என்ற எல்லையைக் கடந்து சர்வதேச ரீதியில் சாதனைபடைத்தவர்களும் இதன்போது விசேட விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

விருந்தினர்கள், வீரர்கள் ஆகியோருக்கு இராப் போசன விருந்தும் இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ்.மாநகர முதல்வர் ப.யோகேஸ்வரி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ங-86-23)


செந்தூரன்


தர்சினி








## பொங்கியது நியூபைட் மங்கியது சன்சைன்

யாழ்ப்பாணம்,டிசெ.21

விளையாட்டுக் கழகத்துக்கு 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆட்டம் ஒன்றில் நியூபைட் அணி கோல் மழை பொழிந்து அபார வெற்றியீட்டியது.

இந்தப் போட்டி யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் நியூபைட் அணியை எதிர்த்து சன்சைன் அணி களம் இறங்கியது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே நியூபைட் வீரர்கள் ஆக்ரோஷத்தோடு விளையாடினார்கள். இதனால் வெற்றிக்காற்று அவர்கள் பக்கமே வீசத்தொடங்கியது.

சன்சைன் அணியின் வீரர்களை ஏய்த்துவிட்டு நியூபைட் வீரர்கள் கோல் கம்பத்தை அடிக்கடி நெருங்கி முற்றுகையில் ஈடுபட்டார்கள்.

நியூபைட் அணியின் கோல்பெறும் சந்தர்ப்பங்கள் சிலவற்றை சன்சைன் வீரர்கள் முறியடித்தனர். இருந்த போதும் அதனையும்

ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே நியூபைட் வீரர்கள் ஆக்ரோஷத்தோடு விளையாடினார்கள். இதனால் வெற்றிக்காற்று அவர்கள் பக்கமே வீசத்தொடங்கியது.

மீறி 6 கோல்களை நியூபைட் வீரர்கள் அடித்தனர். பதிலுக்கு கோல்பெறும் முயற்சியில் சன்சைன் வீரர்கள் இறங்கிய போதும் அதில் கடைசி வரை வெற்றி கிட்டவில்லை. எனவே ஒரு கட்டத்தில் முன்னேறித் தாக்கும் முயற்சியைக் கைவிட்ட சன்சைன் வீரர்கள் மேலதிக கோல்களை நியூபைட் வீரர்கள் அடிக்காத வகையில் தற்காப்பு ஆட்டத்தில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே ஆட்ட நேர நிறைவில் 6:0 என்ற கோல்க் கணக்கில் சன்சைன் அணியை வீழ்த்தி நியூபைட் அணி வாகை சூடியது. (ங-23)

**ஆதிசக்தி வெற்றிக்கிண்ண உதைபந்து**

## நவஜீவன்ஸைப் பந்தாடிய அன்ரனிஸ் அரையிறுதிக்கு

யாழ்ப்பாணம், டிசெ.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பாஷையூர் சென். அன்ரனிஸ் முன்னேறியது.



கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை வென்றதன் மூலமே அரையிறுதி வாய்ப்பை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அடைந்தது.

இந்த காலிறுதியாட்டத்தில் மோதிக் கொண்ட நவஜீவன்ஸ் அணியும், பாஷையூர் சென். அன்ரனிஸ் அணியும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் இறுதிவரை வெற்றிக்காகப் போராடின.

எதிரணியின் கோல்கம்பத்தை நோக்கி ஒரு அணி பந்தை நகர்த்திச் செல்வதும், அந்த முயற்சியை மற்றைய அணி முறியடிப்பதுமாக ஆட்டம் தொடர்ந்து கொண்டிருந்ததே தவிர எந்த அணியாலும் கோலடிக்க முடியவில்லை. நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் இரு [illegible] சார்பில் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

மேலதிகமாக இன்னொரு கோலை அடித்து ஆட்டத்தின் வெற்றியை தம் வசமாக்க இரு அணிகளும் பகீரதப் பிரயத்தனம் செய்த போதும், அது கைகூடவில்லை.

எனவே இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்ததால், குறித்த போட்டி சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தன் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை நவ ஜீவன்ஸ் அணி வீணடித்தது.

ஆயினும் சமநிலை தவிர்ப்பு உதைகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக் [illegible] பெற்றது. (ங-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.20

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் வடதாரகை விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி, அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படும் லீக் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-


**மாலை 4.30 மணி**

கே.கே.எஸ்.விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம். (ங-23)

## கலைமதிக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெ.21


நியூவோரியர்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியுள்ளது.



பன்னாலை கணேசா அணிக்கும், புத்தூர் கலைமதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணி 25:16, 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வெற்றி







இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் இந்திய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் சொந்த மண்ணில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி கொண்டது. இதனைத் தொடர்ந்து 2 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடர் இடம்பெறுகின்றது. முதலாவது ஆட்டம் புனேயில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் அசத்தலாக ஆடியிருந்தாலும், யுவராஜின் பந்து வீச்சில் கட்டுப்பட்டு 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இங்கிலாந்து அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹேலிஸ் 35 பந்துகளில் ( 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள்) 56 ஓட்டங்களையும், லுக் ரைட் 34, புட்லர் 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யுவராஜ் 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், டின்டா 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணிக்கு யுவராஜின் அதிரடி கை கொடுத்தது. 17.5 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் யுவராஜ் 21 பந்துகளில் (3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள்) 38 ஓட்டங்களையும், ரெய்னா 19 பந்துகளில் 26 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 21 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ரிம் பிறஸ்னன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)

ஆட்டநாயகனாக இந்தியாவின் யுவராஜ் சிங் தெரிவானார்.

# 4 ஓவர்கள் வீசத்தான் சுழல் பந்து வீச்சாளர்கள் தகுதி

இந்திய சுழல் பந்து வீச்சாளர்கள் 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசுவதற்குத்தான் தகுதியானவர்கள் என்றும் இவர்களில் எத்தனை பேர் ரஞ்சி கிரிக்கெட்டில் 40 அல்லது 45 பந்து வீசுகின்றனர் என்று இந்திய அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் பிஷன் பேடி கேள்வியெழுப்பியுள்ளார்.


இந்திய அணி டெஸ்ட் தொடரை சொந்த மண்ணில் இழந்ததற்கு பின்பு இந்திய அணியின் அணித்தலைவர் டோனி மீதான விமர்சனம் வலுத்து வருகிறது.

டோனியை நீக்க வேண்டும் என்று கூறியதில் சுனில் கவாஸ்கர், ஸ்ரகாந்த், அமர்நாத், இன்னும் பல முன்னாள் வீரர்கள் வரிசையில் தற்போது பிஷன் பேடியும் இணைந்துள்ளார்.

அவர் கூறுகையில், டோனி ஒரு டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு தகுதியானவர் அல்ல, குறிப்பாக களத்தடுப்பு வியூகம் படு மோசம். அவர் பெற்ற வெற்றிகள் அதிர்ஷ்டத்தினால் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டது.

ஹோக்லியிடம் அணித்தலைவர் பொறுப்பை ஒப்படைக்கவேண்டிய நேரம் வந்து விட்டது என்றார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர்களையும் அவர் விட்டு வைக்கவில்லை, 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசுவதற்குத்தான் இவர்கள் தகுதியானவர்கள் என்றும் இவர்களில் எத்தனை பேர் ரஞ்சி கிரிக்கெட்டில் 40 அல்லது 45 பந்துப் பரிமாற்றங்களை வீசுகின்றனர் எனவும் கூறியுள்ளார்.



# விரைவில் ஒப்பந்தம்

இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு இங்கிலாந்துத் தேசிய ஒப்பந்தம் விரைவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளர் அன்டி பிளவர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை வெற்றிகொண்டிருந்ததோடு, அந்தத் தொடர் வெற்றியில் கெவின் பீற்றர்சன் முக்கியமான பங்கினை ஆற்றியிருந்தார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் போது அப்போதைய அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை எதிரணி வீரர்களுக்கு அனுப்பினார், அணியிலுள்ள சக வீரர்களுடனான முரண்பாடு ஆகியன காரணமாக கெவின் பீற்றர்சன் இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். அத்தோடு அவருக்கு ஒப்பந்தமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்தியாவுக்கெதிரான தொடருக்கு முன்னதாக தற்காலிக ஒப்பந்தமொன்று வழங்கப்பட்ட கெவின் பீற்றர்சன், இறுதி நேரத்தில் அந்த தொடரில் இணைக்கப்பட்டிருந்தார். அத்தோடு அணியோடு அவர் இணைந்து கொள்வதற்கான திட்டங்களும் அறிவிக்கப்பட்டன.(5)

# வெற்றியே முக்கியம்



அணித்தலைவராக ஓட்டங்களைப் பெற்றுவருவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், ஆனால் தான் ஓட்டங்களைப் பெறுவதை விட அணி வெற்றிபெறுவது தான் முக்கியமானது எனத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றிருந்தது. அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே மைக்கல் கிளார்க் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாண்டு அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராகக் காணப்படும் மைக்கல் கிளார்க், ஓர் அணித்தலைவராக ஓட்டங்களைக் குவித்து அணியை முன்னின்று வழிநடத்துவது மகிழ்ச்சியளிப்பதாகவும், ஆனால் தான் ஏற்கனவே தெரிவித்தது போன்று தான் ஓட்டங்களைக் குவிக்காமல் காணப்பட்டாலும் அணி வெற்றிபெறுவது தான் முக்கியமானது எனத் தெரிவித்துள்ளார். அணி வெற்றிபெறுவதே அணித்தலைவருக்குத் திருப்தியை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிக கடுமையான உழைப்புக் காரணமாகவே ஓட்டங்களைக் குவிக்க முடிவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், தனது துடுப்பாட்டம் குறித்து விளங்கிக் கொள்ளத் தனக்கு அதிகமான காலம் எடுத்ததாகவும், தொடர்ந்து வரும் காலங்களிலும் தன்னில் முன்னேற்றத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், இரண்டாவது ஆட்டத்தில் பங்குபற்றும் நம்பிக்கை தனக்குள்ளதாகத் தெரிவித்த அவர், தனக்கு ஏற்பட்ட கால் உபாதை குணமடைந்துவிடும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸி. திறமையான அணி

பந்தைச் சேதப்படுத்தாமல், விதிகளை மீறாமல் டெஸ்ற் போட்டியில் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் திறமை ஆஸ்திரேலிய அணிக்குக் காணப்படுவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் உட்பட சில ஆஸ்திரேலிய வீரர்கள் பந்தைச் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட், அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான போதிய ஆதாரங்கள் காணப்படாததால் பீற்றர் சிடில் மீதோ, ஏனைய ஆஸ்திரேலிய வீரர்கள் மீதோ விசாரணை மேற்கொள்ள முடியாது என்று அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன, குறித்த சம்பவம் தொடர்பாக போட்டி மத்தியஸ்தர் தன்னுடன் வந்து கலந்துரையாடியதாகவும் அவரே பந்தைச் சேதப்படுத்துதல் தொடர்பான சம்பவமொன்று இடம்பெற்றதாகச் சந்தேகிப்பதாகத் தன்னிடம் தெரிவித்ததாகவும் அதுகுறித்துக் கவலைப்படத் தேவையில்லை என்று அவர் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான விதிகளை மீறுதலில் ஈடுபடாமல் போட்டியில் வெற்றிபெறும் திறமை ஆஸ்திரேலிய அணிக்கு காணப்படுவதாக தான் திட்டவட்டமாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)


**விசேட கருத்தரங்கு**

முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் உறுதிப்படுத்துவதற்கான பரீட்சை ஜனவரி 12 இல் நடைபெற உள்ளது
கருத்தரங்கு
ஆரம்பம் ஞாயிறு(23/12) 9.00மணி சனி, ஞாயிறு 9.00 - 2.00 மணிவரை
யாழப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
(C 26947)

**கிராமசேவகர் பரீட்சை விசேட கருத்தரங்குகள்**

நெல்லியடி வழிகாட்டி நிலையத்தில் திங்கள்(24/12) காலை 9.00-2.00 மணிவரை
மன்னாரில் N.L.H கல்வி நிலையத்தில் 26/12 பி.ப 1.00மணி 27/12 காலை 7.30 மணி
யாழ். நகரில் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு சனி, ஞாயிறு 12.30 மணி
(C 2995)(7)

நா சுவைத்திட மனம் நிறைவடைய மனம் மகிழ்ந்திட
HOTEL NOKIYA வின்
வெள்ளி SPECIAL

*மரக்கறி புரியாணி
*மரக்கறி பிரைட்றைஸ்
*மரக்கறி ரைஸ் அன் கறி

மாலை ஸ்பெஷல்
*மரக்கறி கொத்து
*பூரி, சப்பாத்தி

உங்களின் தேவைக்கேற்ப அலுவலகம், தொழிலகம், இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

இல-110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(அலியான்ஸ் அருகாமை) தொடர்பு- 0779258957

**காணி விற்பனைக்கு**

கச்சாய், கச்சாய் சந்தியிலிருந்து தெற்கு பக்கமாக சுமார் 500m தொலைவில், கச்சாய்-கொடிகாமம் வீதிக்கு மேற்கு பக்கம் 100m தொலைவில் பாதான வைரவர் கோயிலுக்கு கிழக்குபக்க மாக பாதையுடன் கூடிய நல்ல சூழலில் அமைந்த 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு : 0773400669, 0779350861
linges1330@gmail.com
(264434)(14)

**இவ் வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்துக்கு..........**

இவ் வருடம் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி, உயர்தர வகுப்பு கணிதம், உயிரியல் துறையினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் செயலமர்வு.

* எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.12.2012) அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்.
* காலை - 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.
* நுழைவுக் கட்டணம் ரூபா 200/= மட்டுமே.

THE NSA (வட மாகாண விஞ்ஞான சங்கம்) THE JSCB (யாழ். மாவட்ட விஞ்ஞானக் கழகம்) கல்விப் பிரிவு இணைந்து நடத்தும் இச் செயலமர்வில்

* உயர்தர வகுப்பு அடிப்படை பௌதீகவியல், அடிப்படை இரசாயனவியல் பாடங்களுக்கான இலவச கைந்நூல்கள் விநியோகிக்கப்பட இருப்பதாலும்,
* பாடத்திட்டத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட இருப்பதாலும்
* THE NSA இன் தொடரும் கல்வி சேவைகளில் பங்குபற்றுவதற்கான போட்டிப்பரீட்சை இடம் பெற இருப்பதாலும்

ஆசன ஒதுக்கீடு, மற்றும் இதர ஒருங்கமைத்தல் வசதிகளை கருத்தில் கொண்டு இவ்வருடம் சாதரணதர பரீட்சைக்குத் தோற்றி உயர் தர வகுப்புக்காக கணிதம், உயிரியல் துறையைத் தெரிவு செய்யும் அனைத்து மாணவர்களும் காலை 9.15 மணிக்கு முன்பாக மண்டபத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

(27079)(3.14)

ஒருங்கமைப்பு உதவி:- யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்கள் மருத்துவ பீடம், கொழும்பு, யாழ்ப்பாணம்.
பொறியியல் பீடம், பேராதனை, கொழும்பு.

**வெளிவந்துவிட்டது**

A/L 2015 மாணவர்களுக்கான
"பொது இரசாயனம்"
(முதல் இரு அலகுகளையும் உள்ளடக்கியது)
ஆசிரியர்: க. வாணிமுகுந்தன் (B.Sc.Dip.in Ed.M.Sc)
அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான விநியோகஸ்தர்:
அன்னை புத்தகசாலை
மு.கு: வடமராட்சியில் ஆசிரியரின் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு 0777172715
(27053)(3.14)

**புதிய முகவரி**
**ஹரன் ஜுவல்லர்ஸ்**
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

**இந்திய சாஸ்திரியார் வருகை**


யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பில்ஸ் இன் [PEOPLE INN]
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)

**NEW SCIENCE CENTER CHEMISTRY**

2014 A/L
Inorganic
(d குழு மூலகங்கள்)(sat,sun)
2013 A/L மற்றும் DAY BATCH
மாணவர்களுக்கு
அயன் சமநிலை(mon,wed)
By. T.சுசாந்தன்(B.Sc)
கடந்தகால வினாக்களின் விளக்கங்களுடன் Theory வகுப்புக்கள் இடம்பெறும்.
(27066)(7)


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிவபாலன்



ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக் கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே! பேபி
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்க விட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா!
உங்கள் பாலகன் நான் திருவரங்கன்
உங்கள் முகம் பார்க்கு முன்னே எங்கு தான் சென்றீரோ.



மண்ணில்
27.07.1976

விண்ணில்
21.12.2007

ஐங்கரன் இல்லம்
தொல்புரம், வழக்கம்பரை.

பிரிவால் துயருறும்
சி. தயாளினி [மனைவி]
சி. திருவரங்கன் [மகன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சோதி வேம்படி பாடசாலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,டிசெ.21

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்திற்கு பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்காக பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்பட்டயண்டுள்ளது.

பாடசாலையில் காணப்படும் உடனடியான அவசர வேலைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 75 ஆயிரம் ரூபா நிதியைப் பன்முகப்படுத்திய நிதியில் இருந்து வழங்கியுள்ளார்.

இதனால் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் 350க்கும் மேற்பட்ட மாணவர்களும் 20 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(3-86)

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சீனியர் செல்லத்துரை

[முன்னாள் மேற்பார்வையாளர்
யாழ். போதனா வைத்தியசாலை]



தோற்றம்
09.02.1937

மறைவு
21.12.1987

எங்கள் குடும்பத்தின் பாசமிகு தலைவனாய்
எமக்கெல்லாம் நல்வழி காட்டி, நல்லபடியாக
வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகளானாலும் எமை
விட்டு அகலுமோ உங்கள் நினைவுகள்.

"ஈஸ்வரி வாசம்"
உடுவில்/உரும்பிராய் மேற்கு.
[கந்தசாமி கோயிலடி]
உரும்பிராய்.

[26987] [45.6.7]

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் நடராஜா
பாலசுப்பிரமணியம்
(பொலிஸ்மணியம்
- களபூமி, காரைநகர்)



மலர்வு
05.01. 1949

உதிர்வு
21. 11. 2012

கடந்த 21.11.2012 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் நடராஜா பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச் செய்தி கேட்டவுடன் வந்து ஆறுதல் கூறியும், எமது துயரத்தில் பங்குகொண்டு உடன் கருமங்கள் ஆற்றியும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி ஊடாக அனுதாபச் செய்தி அனுப்பியும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.12.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.16/24, 3ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.
தொ.பே. 024 222 5698

**குடும்பத்தினர்**

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வைரவர் கோயில் அருகில் சுழிபுரம் மத்தி
சுழிபுரத்தில் இருக்கும்
3 பரப்பு வளவும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 8445 957

(26943) (6.7.4)

## பதவி வெற்றிடம்

கட்டட நிர்மாணத்துறையிலும், பொறியியல் ஆலோசனைகளை வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கும் எமது குழுவோடு இணைந்து செயற்படுவதற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
(NDT/NCT (Civil /Qs) 3 வருட அனுபவம் உள்ளவர்கள்
2. படவரைஞர், படவரைஞர் சான்றிதழ் / Auto CAD
3. முகாமைத்துவ உதவியாளர்
B.Com /HNDA with Experience or Equivalent)

தகுதியானவர்கள் 3 நாள்களுக்குள் விண்ணபங்களை ஈமெயில் மூலமாக அனுப்பிவைக்கவும்.யண அல்லது தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு நேரிலும் வர முடியும்.

T.P : 0777 120 945
Email: Sarukaya_con @ yahoo.com

(26945) (6.7.4)

## முதலாம் ஆண்டு நினைவினில்...

அமரர்
ஐயாத்துரை
கிருஷ்ணபிள்ளை



பூலோகத்தில்
22.05.1943

மோட்சத்தில்
01.01.2012

பண்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இறைபக்தியே வாழ்வின் சாராம்சமாய்
கலை வண்ணம் மிளிர்ந்திட
எல்லோரையும் கவர்ந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
எம் தந்தையே - நீங்கள்
எமைப் பிரிந்து ஆண்டொன்று ஆனதே.

ஐயனார் கோயிலடி,
அளவெட்டி மத்தி,அளவெட்டி.

- குடும்பத்தினர்.

## 100 ஆவது பிறந்த நாளும் நினைவலைகளும்...

அமரர் ப.மு.நாகராஜா



(சரவணை, உயிலங்குளம்
ஆனந்தா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்
21.12.1912

மறைவு
03.11.1993

பெற்று வளர்த்து உருவாக்கி
ஊர் போற்ற எம்மை வழிநடத்தி
பாசத்தை அள்ளி வழங்கி
வளர்த்த எங்கள் ஐயாவே
இந்நாளில் உங்கள்
ஆத்ம சாந்தி வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கா.யோகராசா,
உயிலங்குளம், மன்னார். டினேஸ் அரிசி ஆலை.

(26966) (6.4)

# நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டொன்று ஆனது



அமரர் **புஸ்பராஜா பிரவீன் (சிந்து குட்டி)**

(யாழ்.மத்திய கல்லூரி உயர்தர வணிகத்துறை மாணவன் – 2013)

பிறப்பு
1994.05.10

திதி:-2012.12.21

இறப்பு
2012.01.02



அன்பின் தம்பி சிந்துவே....
சிரித்த முகமும் என்றும் மாறாத குறும்பும்
செயலும் கொண்ட என் இனிய தம்பியே!
விழி மூடி விழிக்க முன் என்னை விட்டு
விலகிப் போனாய்
நிரந்தர உலகத்தில் அமைதியான நாள்களை
மீட்டுப் பார்க்கின்றேனடா
காலத்தின் கோலமோ விதியின் செயலோ
புரியாத நெஞ்சில் ஏங்கி நிற்கிறேனடா
திரும்பும் திசை எங்கும் புன்னகையால்
கதை பேசியவனே
உன் விழியால் கதை சொல்லும்
உன் புருவத்தை மறப்பேனோ
சத்தம் இல்லாத உன் அடக்கம் சகிப்பு
இல்லா உன் பொறுமை
வற்றாத உன் அன்பு.
வாடாத உன் புன்சிரிப்பு
அத்தனையும் இங்கு விட்டு என் தம்பியே
எனைப் பிரிந்தாய்
காலனவன் உன்னைக் கொண்டு செல்ல
கொடிய நோயைத் தான் தந்தானோ
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என் தம்பியாகவே வர வேண்டுமடா
என்றும் என் மனதை விட்டு நீங்காத
என் உயிர் தம்பி நீயே......


பேச்சியம்மன் கோயில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

புஸ்பராஜா - அஜித்தா
(அக்கா) (பிரவீன் ரவல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

படைப்பு
28
மார்கழி
1941



அழிப்பு
21
மார்கழி
1987

## அமரர் திரு. M.K. பத்மநாதன்

(முன்னாள் ஆசிரியர்- பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,
ஆங்கிலப் பாடவிதான வடிவமைப்பாளரும்,
விரிவுரையாளரும் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி
மற்றும் தேசிய தொழில் பயிலுநர் சபை)

கால் நூற்றாண்டு கடந்தாலும் உங்கள் கனிந்த முகம் மறக்கவில்லை.
கடல் கடந்து வாழ்ந்தாலும் நீங்கள் கற்பித்த பண்புகள் கரையவில்லை.
கட்டையிலே போனாலும் மறவோமே உங்களுடன் வாழ்ந்த நாளை.
கடைசிவரை மறப்போமா கயவர்கள் உங்களுயிர் கவர்ந்த நாளை!

திருமதி M.T.J.பத்மநாதன் (மனைவி - ராணி),
சுதர்ஷன் பத்மநாதன் (மகன்),
கலாநிதி பிரியதர்ஷன் பத்மநாதன் (மகன்),
கலாநிதி சுகன்யா சுமித்திரன் (மகள்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(26443) (45.6.7)